DEG

DIGITIZED

T.N.L.C Debates
official Report

1984

C

NO. 1, 2

Vol. 205

D
V211,32'N84
N84.205.1-2
143891

269

27

தமிழ்நாடு
சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, மார்ச் 3, 1984—தொகுதி 205-எண் 1
Saturday, 3rd March, 1984—Volume 205 - No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009.

விலை ரூ. 2.75]

## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—viii |
| தமிழ் நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் | ix |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பட்டியல் | xi—xiv |
| 1. 1984-85 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை | 1—44 |
| 2. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 45—46 |

143891

600 008

D
V211,32'N84
N84.205.1-2

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru SUNDAR LAL KHURANA.

*Members of the Council of Ministers.*

1. The Honourable Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology Excise and Prohibition excluding grant of Liquor Permit.

2. The Honourable Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. The Honourable Thiru S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. The Honourable Thiru K. A. KRISHNASWAMY, Minister for Dairy Development, in charge of Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Honourable Thiru S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes and Census. cial Taxes and Census.

6. The Honourable Thirue R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

7. The Honourable Thiru C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. The Honourable Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister for Law and Industries, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries and Mines and Minerals.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration. Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGHAVANANDHAM, Minister for Labour, in charge of Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. The Honourable Thiru S. MUTHUSAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister for Handlooms and Co-operation, in charge of Textiles, Handlooms and Co-operation.

15. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister for Environmental Pollution Control, in charge of Environmental Pollution Control.

16. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. The Honourable Thiru R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

18. The Honourable Thiru S. R. E. RADHA, Minister for Public Works, in charge of Public Works Department and Establishment matters relating to Public Works Department, Housing and Slum Clearance Board.

19. The Honourable Thiru M. R. KOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes.



20. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. The Honourable Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi.

22. The Honourable Thiru Y. S. M. YUSUF, Minister for Irrigation and Wawf, in charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. The Honourable Thiru R. ARUNACHALAM, Minister for Rural Industries, in charge of Rural Industries, including Village and Cottage and Small Industries.

24. The Honourable Thiru K. KALAIMANI, Minister for Fisheries, in charge of Fisheries.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், ஆயத்துறை மற்றும் மது விலக்கு, மது அருந்த அனுமதிச்சீட்டு வழங்கல் நீங்கலாக.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, சட்ட மன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால்வளத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பால், பால்பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அற நிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்-பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந் தொழில்கள் மற்றும் சுரங்கமும், கனிவளமும்.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராம தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழிலாளர் நலம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.



14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நெசவாலைகள், கைத்தறி மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேடு தடுப்புத் துறை மற்றும் கடவுச் சீட்டு.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், செய்தித் தாளிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் திட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவுத் திட்டம்.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப் பணித்துறை, பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக மற்றும் வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, இரவலர் இல்லம், அனாதை இல்லம், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. ரூகப் (நீர்ப்பாசனத் துறை மற்றும் வஃபு அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட நீர்ப் பாசனம் மற்றும் வக்ஃப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீனளத் துறை அமைச்சர்) கீழ்க் கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மீனளம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் :

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
3. திரு. ஏ. ஜே. தாஸ்.
4. திரு. க. அருணாசலம்.

மேலவைச் செயலாளர் :

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர் :

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர் :

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர் :

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின்**
**(தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 1. அங்கமுத்து. திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3. ஆறுமுகம், திரு. சோ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராதா. திரு. எஸ். ஆர். (பொதுப் பணித்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 10. கலைமணி, திரு. க. (மீனளத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. [illegible]ாலப்பர், திரு. சி. ஆர். | நியமனம |
| 12. சங்காலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 13. சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 17. சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 18. சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம் |
| 19. சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 20. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழ் நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 21. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 22. தாமோதரன், திரு. வ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 23. தாரா செரியன், திருமதி. | நியமனம் |
| 24. தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 26. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 27. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 28. மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 29. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக் கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 30. முத்து, திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 31. முத்துசாமி, திரு. செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீல கிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 32. முனுசாமி. திரு. பி. | நியமனம் |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 33. யூசுப், திரு. யா. சை. மு. (நீர்ப்பாசனத் துறை மற்றும் வஃபு அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 34. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 35. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36. வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 37. வலம்புரி ஜான், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. வள்ளிமுத்து, திரு. ஈ.வெ.ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39. வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 40. வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம் |
| 41. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 42. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 49. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தி ஐந்தாவது கூட்டத் தொடர்.)

சனிக்கிழமை, 1984 மார்ச் 3.

(மாசி 20, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2015).

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

1983-84 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1984-85 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க விழைகிறேன்.

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

முதலில் மிகுந்த துன்பம் வந்தாலும் அதுகண்டு தளராமல், முடிவில் இன்பம் பயக்கும் செயல்களைத் திட்டமுடையவாக இருந்து செய்தல் வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகையார் வகுத்தருளிய நெறிக்கேற்ப, இந்த அரசு செயலாற்றி வருவதில், கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது.

சென்ற இரண்டு ஆண்டு காலமாகத் தமிழகத்தில் இயற்கையின் விளைவால் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையும் செயற்கையால் ஏற்படுத்தப்பட்ட தொல்லைகளையும் பெருமளவுக்குச் சமாளித்து, மக்களின் துயர்களைத் துடைப்பதிலும், ஏழை எளிய, நலிவடைந்த மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதிலும், பல்வேறு துறைகளில் உற்பத்தி வளங்களைப் பெருக்குவதிலும், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதிலும், நாட்டில் சட்டம்—ஒழுங்கு—அமைதி நிலைகளைக் காப்பாற்றுவதிலும், இந்த அரசு அக்கறையோடு அரும்பணியாற்றி வந்துள்ளதை அவை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

2. இரண்டாண்டு காலமாகத் தொடர்ந்து நீடித்த கடும் வறட்சியின் கொடுமையான பிடியிலிருந்து தமிழகம் கடந்த ஆண்டின் இறுதியில்தான் விடுபட்டது. ஆனால், சோதனையாகக் கடும் வறட்சியைத் தொடர்ந்து, வரலாறு கண்டிராத அளவுக்கு பெரும் மழை பெய்து, வெள்ளப் பெருக்கேற்பட்டு, இம் மாநிலத்தின் சில பகுதிகள் மிகவும் சேதமடைந்தன. அடுத்தடுத்து நிகழ்ந்த இத்தகைய இயற்கைச் சீற்றங்களினால் மாநில அரசுக்குச் செலவுச் சுமை பெருமளவுக்குப் பெருகியது. நிவாரணப் பணிகளுக்காகவும், பழுது பார்ப்பு வேலைகளுக்காகவும் பெரிய அளவில் செலவிட வேண்டியிருந்தது. வறட்சி நிலையைக் கண்டறிய, மத்திய அரசு அனுப்பிய குழு, வறட்சி நிவாரணத்துக்காக ரூ. 68.36 கோடி வரை செலவிடலாம் என்று வரையறுத்திருக்க, 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில், வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மாநில அரசுக்கு ரூ. 114.28 கோடி செலவேற்பட்டது. கூடுதலாக உதவித்தொகை அளிக்க வேண்டும் என மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, தொடர்ந்து நிலவிய வறட்சி நிலையைக் கண்டறிய, மத்திய அரசு, இன்னுமொரு குழுவை அனுப்பியது. இக்குழுவின் பரிந்துரைப்படி, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட உச்ச வரம்பிற்கும் கூடுதலாக, ரூ. 9.18 கோடி செலவிடலாம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வறட்சிப் பணிகளின்கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், ஏறத்தாழ ரூ. 46 கோடி செலவில், 21,726 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. ரூ. 3.73 கோடி செலவில் குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன. பாசன வாயில்களைப் பழுது பார்த்துச் சீரமைப்பதற்காக, ரூ. 17.31 கோடி செலவிடப்பட்டது. மேலும் ரூ. 5 கோடி செலவில், ஊருணிகளும், குளங்களும், தூர்வாரிப் பண்படுத்தப்பட்டன. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் வகையில், மாநில அரசு அவர்களுக்கு ஜனதா சேலைகளையும், வேட்டிகளையும் ரூ. 10 கோடி செலவில் வழங்கியது. இத்தகைய நடவடிக்கைகளினால், வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் கிடைத்தது மட்டுமல்லாமல், குடிநீர் வாயில்கள், பாசன வசதிகள், சாலைப் போக்குவரத்து வசதிகள் போன்ற நிலையான வசதிகளும் மாநிலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

3. சென்ற டிசம்பர் மாத இறுதியில் பரவலாகவும், கடுமையாகவும் மழை பெய்தது. இதனால் குறிப்பாகத் தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உயிர் இழப்பு ஏற்பட்டதுடன், அறுவடையாகும் நிலையிலிருந்த பயிர்களுக்கும், சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள், ஏனைய சொத்துக்கள் ஆகியவற்றுக்கும் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டது. போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளும், நிவாரண நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. போக்குவரத்து வசதியைச்



சீர் செய்யவும், வெள்ளத்தினால் சூழப்பட்டப் பகுதிகளில் அகப்பட்டுக் கொண்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் அளிப்பதற்கும், இராணுவத்தினரின் உதவி கோரப்பட்டு, இப்பணிகள் இராணுவத்தினரால் செவ்வனே செய்து முடிக்கப்பட்டன. வெள்ளத் துயர் தணிப்புப் பணிகளுக்காக ரூ. 128 கோடி நிதியுதவி வழங்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. உடனடியாக, ரூ. 1 கோடி வழங்கியதற்கும், வெள்ள நிலையை நேரில் கண்டறிந்து, பாதிப்பை மதிப்பிட்டு, மத்திய அரசு அளிக்க வேண்டிய நிதியுதவியை முடிவு செய்ய மத்தியக் குழு ஒன்றை அனுப்பியதற்கும், இந்தியப் பிரதமருக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். மத்திய அரசு மேலும் ரூ. 10 கோடி வழங்கி, இதனைப் பின்னர் கொடுக்கப்படவுள்ள வெள்ள நிவாரண மானியத்தில் சரிகட்ட முடிவு செய்துள்ளபோதிலும், மாநில அரசு துயர் தணிப்புப் பணிகளுக்காக, உடனடியாக ரூ. 37.54 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு கருணை உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ள ரூபாய் 10 கோடியும் இதில் அடங்கும்.

4. வரலாறு கண்டிராத அளவுக்கு இயற்கைச் சீற்றங்களினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக மாநில அரசுக்கு ஏற்பட்ட பெரும் செலவுச் சுமையினால், மாநில அரசின் பொருளாதார நிலை நடப்பாண்டில் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. நமது கூட்டாட்சி அமைப்பு முறையில் வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நலனுக்கான நடவடிக்கைகள் ஆகியவற்றை நிறைவேற்றும் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகும். ஆனால், இப்பணிகளை நிறைவேற்றுவதற்கான நிதி வாயில்கள் தேவையான அளவிற்கு மாநில அரசுக்குக் கிடைப்பதில்லை. பெருகக்கூடிய நிதி வாயில்கள் மத்திய அரசிடம் பெருமளவு உள்ளன. மேலும், பொதுமக்கள், வங்கிகள் ஆகியோரிடமிருந்து கடன் திரட்டும் வாய்ப்புகள், ஆயத் தீர்வைகள், சுங்கத் தீர்வைகள், கூட்டு நிறுவன வரி ஆகியவற்றை வசூலிக்கும் வாய்ப்பு, வெளிநாடுகளிலிருந்து கடன் பெறும் வாய்ப்பு போன்ற வசதிகள், மத்திய அரசுக்கு உள்ளன. ஆனால் மாநில அரசின் நிதி வாயில்களோ மிகவும் குறைந்தவையாகும். வணிக வரிகள், ஆயத் தீர்வைகள் ஆகியவற்றிலிருந்து மட்டுமே மாநில அரசுக்கு வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. முக்கியமான வளர்ச்சிப் பொறுப்புகளை நிறைவேற்றும் போக்குவரத்துக் கழகங்கள், மாநில மின் வாரியம் போன்ற மாநில அரசு நிறுவனங்கள் கூட, மத்திய அரசு அடிக்கடி அறிவிக்கும் பொருள் விலையேற்றங்களினால் அவ்வப்பொழுது நிதிப் பற்றாக்குறைக்கு உள்ளாகின்றன. கடந்த ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ்ச் செயலாக்கப்பட்டு வந்த திட்டங்கள், தற்போது திட்டத்திற்குப் புறம்பாகச் செயலாக்கப்படுவதால், திட்டத்தில்

சேராத செலவு பெருகிக் கொண்டே போகிறது. மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசு 20 சதவீதமே உதவித் தொகை அளிக்கிறது. இச்சதவீதமும் முதல் திட்டத்திலிருந்து குறைந்து கொண்டே வருவது கவலை அளிக்கிறது. இத்தகைய சூழ்நிலையில், இயற்கைச் சீற்றங்களின் காரணமாகவோ, திடீரென ஏற்படும் நிதிப் பொறுப்புகளின் காரணமாகவோ, மாநில அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினால், மாநில அரசின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளே குலைந்துவிடும் நிலை உருவாகிறது. மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மாநில அரசு புறக்கணிக்க முடியாது. அதே நேரத்தில் ஏராளமான வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நலன் தொடர்பான திட்டங்களையும், மாநில அரசு நிறைவேற்ற வேண்டியுள்ளது. மேற்கூறிய காரணங்களினால் மிகைப்பற்று வாங்க வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை தமிழ்நாட்டிற்கு உருவாயிற்று. இக்கண்ணோட்டத்துடன் இம் மாநிலத்தின் நிலையை, பரிவுடனும், உண்மையான நிலையை உணர்ந்து கொள்ளும் எண்ணத்துடனும் மத்திய அரசு கவனித்து, இம் மாநில அரசு தாற்காலிகமாக எதிர் நோக்கி இருக்கும் நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க உதவியளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

5. ஆட்சிப் பணிகள் செம்மையாக நடைபெற, "வலிவான இந்தியாவும் வளமான மாநிலங்களும்" அமைய வேண்டும். இந்தக் கொள்கையைத்தான், இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தியாவை எல்லாவகைகளிலும் பாதுகாக்கின்ற பொறுப்பு மைய அரசையும், மக்களை எல்லா நிலைகளிலும் வாழ வைக்கின்ற பொறுப்பு, மாநில அரசுகளையும் சார்ந்தனவாக ஆகின்றன.

6. கூட்டாட்சித் தன்மைகொண்ட, வலிவான இந்தியாவில், தேவையான, நியாயமான, மிகவான அதிகாரங்கள் கொண்ட தன்னாட்சி மாநிலங்கள் நிலவ வேண்டும். இந்த அடிப்படையில், இந்தியக் கூட்டாட்சியில், மிகவான அதிகாரங்கள் கொண்ட தன்னாட்சி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ வேண்டும் என்பதைத்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய நெறிமுறையில் நின்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள்.

7. மைய-மாநில அரசுகளின் உறவு நிலையும், உரிமை நிலையும் வரையறுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த அறிஞர் அண்ணா அவர்கள், "மைய அரசிடமிருக்கும் அதிகாரங்கள் பலவும் மாநில அரசுகளுக்கு நியாயத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அப்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட, அரசமைப்புச் சட்டம் தேவையான அளவுக்குத் திருத்தப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஏற்ற நேரமும், நிலையும், நினைப்பும் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றன. அரசமைப்புச் சட்டத்தை அலசி, ஆராய்ந்து, திருத்துவதற்குச் சட்டத்தின் மூலம் வாய்ப்பளிக்க வேண்டும், திருத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதற்குக் காரணமே, அதிகாரங்கள் முறையாகவும், செம்மையாகவும், சிறப்பாகவும் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்" என்பதற்காகத்தான் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.





8. மைய-மாநில அரசுகளின் உறவுகளையும், உரிமைகளையும் ஆராய்ந்தறிந்து, பரிந்துரை செய்வதற்காக மைய அரசு நீதிபதி சர்க்காரியா குழுவை அமைத்திருப்பதை, இந்த அரசு வரவேற்பதோடு, அந்தக் குழு உண்மையான மையக் கூட்டாட்சியும், மாநிலத் தன்னாட்சியும் அமைய, வழிவகுத்துத் தர வேண்டும் என்று வற்புறுத்துகிறது. இன்றைய சூழ்நிலையில் மைய-மாநில அரசின் உறவு நிலைகளும், உரிமை நிலைகளும் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தமிழக அரசின் சார்பாக எடுத்துக் காட்டுவதற்கான கொள்கையை வகுக்க, நீதிபதி இராமபிரசாத் ராவ் குழு, தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

9. அரசியல் அறிஞரான திரு. கே. சி. வியர் என்பார் 'கூட்டாட்சி முறை அரசு' என்னும் நூலில்,

"மைய அரசும், மாநில அரசுகளும் தங்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்டவைகளில், கூட்டாகவும்—ஆனால் சுதந்திரமாகவும் இயங்கும் வகையில் அதிகாரங்களைப் பிரித்துக்கொள்ளும் முறைதான், கூட்டாட்சி முறைத் தத்துவமாகும் என்பது நான் கருதுவதாகும். மைய அரசும், மாநில அரசுகளும் தங்கள் தங்களது வரையறுக்கப்பட்ட ஆட்சி எல்லைக்குள் அமைந்திருப்பவை; தங்கள் தங்கள் அதிகாரங்களைப் பொறுத்துச் சுதந்தரமானவை; ஒன்றுக்கு ஒன்று கீழ்ப்பட்டு நடக்க வேண்டியவை அல்ல" என்று குறிப்பிட்டிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

10. திட்டங்களை நிறைவேற்றுவதைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு பல சிறந்த சாதனைகளைப் புரிந்து முன்னணியில் நிற்கின்றது. ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தின் செலவு ரூ. 3,150 கோடியாக இருக்க வேண்டுமென்று முதலில் திட்டமிட்டிருக்க, முதல் மூன்றாண்டுகளிலேயே, இம்மாநில அரசு திட்டப் பணிகளுக்காக, ரூ. 1,821 கோடி செலவிட்டுள்ளது. நடப்பாண்டுக்கான திருத்த செலவு மதிப்பீடு ரூ. 861.87 கோடியாகும்; 1984-85 ஆம் ஆண்டுக்கான செலவு மதிப்பீடு ரூ. 979.22 கோடியாகும். இக்கணக்கின்படிப் பார்த்தால், திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்ட செலவைவிட ரூ. 511.61 கோடி அதிகமாக நாம் செலவிடுவது தெரியவரும். முதலமைச்சர் குழந்தைகள் சத்

துணவுத் திட்டம் போன்ற, திட்டம் சாரா வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நல நடவடிக்கைகள் ஆகியவற்றிற்காக மாநில அரசு ஏராளமான அளவில் செலவிட வேண்டியிருந்தது. திட்டப் பணிகளுடன் இவற்றையும் சேர்த்து நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரிய சாதனையாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் ரூ. 1,100 கோடி திரட்டுவதாக வாக்களித்திருந்த போதிலும், ரூ. 1,450 கோடி அளவிற்குக் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டியதன் பலனாக மாநில அரசு இச்சாதனையை எய்த முடிந்தது. 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 184.55 கோடி பற்றாக்குறை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இயற்கைச் சீற்றங்களின் காரணமாகக் கடும் செலவுச் சுமை ஏற்பட்டு புதிய பணிகளை மேற்கொண்டபோதிலும், திருத்த மதிப்பீட்டில் இப்பற்றாக்குறையை ரூ. 129.31 கோடியாக நாம் குறைத்துள்ளோம். தொடராயினச் செலவுத் தன்மை வாய்ந்த சிறப்புப் பணிகளின் காரணமாக ஏற்பட்ட இப்பற்றாக்குறை, ஆறாவது திட்டத்தின் கடைசி ஆண்டாகிய இந்த ஆண்டில், மாநில அரசுக்குப் பெரும் நிதிச் சுமையாக அமையக்கூடாது என்றும், மத்திய அரசு இந்நிலையை பரிவுடன் கவனித்து இந்நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட நமக்குச் சிறப்பு உதவி அளிக்க வேண்டுமென்றும், நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். , நிதி நிர்வாகத்தில் அறிவார்ந்த முறையில் செயல்படுவதில், தமிழ்நாடு, தொடர்ந்து முன்னணியில் நிற்கின்றது. 1982 மார்ச் திங்களில் ஏராளமான மாநிலங்கள் ரூ. 1,751 கோடி அளவுக்கு மிகைப்பற்று வாங்கியிருக்க, அவற்றை நடுத்தரக்காலக் கடன்களாக மாற்றிக் கொடுக்க மத்திய அரசு முன் வந்த நிலையிலும், இத்தகைய உதவியைக் கேட்க வேண்டிய அவசியமான நிலையோ அல்லது பயன்படுத்திக் கொள்ளவேண்டிய நிலையோ இம்மாநில அரசுக்கு ஏற்படவில்லை.

11. இப்படிப்பட்ட பின்னணியில்தான் பொதுமக்கள் நலனுக்காகவும், பொருளாதார வளர்ச்சி தொடர்பாகவும் பல்வேறு துறைகளில் இம்மாநில அரசு எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளை விளக்க விழைகிறேன்.

**வேளாண்மை.**

12. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மைத் துறையின் பங்கு பற்றி மிகவாக வலியுறுத்திக்கூற வேண்டியதில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில், வேளாண்மைக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள், உணவுத் தானியங்கள் உற்பத்தி, அவை கிடைக்கும் அளவு ஆகியவற்றை மட்டுமின்றி, ஆதாரத் துறையான இந்தத் துறையில் வேலைவாய்ப்புகளையும் மோசமாகப் பாதித்துள்ளன. இந்த ஆண்டு இறுதியில் சுமார் 50 இலட்சம் மெட்ரிக் டன்



நெல்லும், 19 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியங்களும் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் 65 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லும், 30 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியங்களும் உற்பத்தி செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

13. அடுத்த நிதியாண்டில் மாநிலத்தில் தற்போதுள்ள விதை பதப்படுத்தும் பிரிவை ரூ. 8 இலட்சம் செலவில் வலுப்படுத்தவும், விதைப் பண்ணைகளில் ரூ. 18 இலட்சம் செலவில் பாசன வசதிகளைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில், உழவர் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இரண்டு பாம்புப் பொறிகளை ரூ. 20.56 இலட்சம் செலவில் வாங்கவும், ரூ. 19.87 இலட்சம் செலவில் ஆழ்கிணறு துளையிடும் கருவிகள் 5 வாங்கவும் வேளாண்மைப் பொறியியல் துறை திட்டமிட்டுள்ளது. பல்லடம், காங்கேயம் மற்றும் பெருந்துறை ஆகிய இடங்களில் உள்ள மாநில வேளாண்மை விளைபொருள் தர ஆய்வுக் கூடங்களுக்கும் கட்டிடம் கட்டவும் எண்ணப்பட்டுள்ளது.

14. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்க, மாநில அரசு உரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது. 1984-85-ல், எண்ணெய் வித்துக்கள் துறையின் மூலம் வேர்க்கடலை வித்துக்களை வழங்கி அதன் மூலம் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் பரப்பளவை 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகப் பெருக்கிட எண்ணெய் வித்துக்கள் துறை திட்டமிட்டுள்ளது. நல்லோக்கில் உள்ள துறைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட புதிய கலப்பின வகை 'நெட்டை மற்றும் குட்டை' நாற்றுக்கள் 1984-85 முதல் உழவர்களுக்குக் கிடைக்கும். நடப்பாண்டில் இத்துறை 36.69 இலட்சம் நாற்றுக்களை வழங்கியுள்ளது. தற்போது 4.55 இலட்சம் கலப்பின நாற்றுக்கள் வழங்கப்பட்டிருக்க, அதன் அளவை 5.75 இலட்சம் நாற்றுக்களாக பெருக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் துறையின் கீழ் நடப்பாண்டில் 14.54 இலட்சம் எக்டேரில் பயிரிடவும், 1984-85-ல் 14.67 இலட்சம் எக்டேரில் பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அடுத்தாண்டில், நடப்பாண்டு இலாக்கான 14.25 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து, 14.60 லட்சம் மெட்ரிக் டன்னாக பெருக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 10,728 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களை இத்துறை வழங்கியுள்ளது. 1984-85-ல் 12,550 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களை வழங்கக் கருதியுள்ளது.

### கால்நடை வளர்ப்பு.

15. கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம், கால்நடை உற்பத்திச் சிறப்புத் திட்டம் போன்ற பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்கள், கணிசமான அளவுக்குக் கால்நடை உற்பத்தியை முன்னேற்றமடையச் செய்வதற்கு மட்டுமின்றி, நவீன கால்நடை நிர்வாக முறைகளைப் பரவலாகப் பயன்படுத்துவதற்கும் கால்நடை வளத்தைப் பெருக்குவதற்கும் பயன்பட்டுள்ளன.

10. கால்நடைகளுக்குச் சிறந்த முறையில் மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன், புதிதாக 26 கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 3 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவ மனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன; இரண்டு கால்நடை மருத்துவ மனைகள் முதன்மைக் கால்நடை மருத்துவ நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இத்துடன், செங்கற்பட்டு, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் கால்நடை நோய்த் தகவல் சேகரிப்புப் பிரிவுகள் மூன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### பால் பண்ணை வளர்ச்சி.

17. பால் கொள்முதலைத் தொடக்கப் பால் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற அரசின் கொள்கையின் அடிப்படையில், கிராம அளவிலும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, இவ்வமைப்பின் மூலம், பால் கொள்முதல் மற்றும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 1984-85 ஆம் ஆண்டில் 500 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

18. நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலைக் குளிரவைத்துப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை திருநெல்வேலியில் அமைப்பது குறித்த பணியும், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் பாலைக் குளிர வைக்கும் நிலையங்கள் அமைப்பது குறித்த பணியும் நடந்தேறி வருகின்றன. 1984-85 ஆம் ஆண்டில், ரூ. 28 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில், பாலைக் குளிர வைக்கும் நிலையம் ஒன்றை மேற்கொண்டும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வறட்சிப் பாங்கான பகுதித் திட்டத்தின் கீழ் ரூ. 130 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடியில், ஒரு பால்பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது.



19. பால்வளத் திட்டம்-II தற்போது இம்மாநிலத்தில், 9 மாவட்டங்களில் ரூ. 42.37 கோடி மதிப்பீட்டுச் செலவில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் செயல்பட்டு வருவதால், இத்திட்டத்தை, இம்மாநிலத்தில் மேலும் மூன்று மாவட்டங்களுக்கு நீட்டிக்க வேண்டுமென்று, இந்தியப் பால்பண்ணைக் கழகத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### உணவு.

20. 1982, 1983 ஆம் ஆண்டுகளில் பெருமளவுக்குப் பருவமழை பொய்த்ததனால், இம்மாநிலத்தின் உணவு நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு, காலதாமதமாக ஆகஸ்ட் திங்களில் காவிரி நீர் திறந்து விடப்பட்டதனாலும் உணவு உற்பத்தி குறைந்தது. இருப்பினும், பாசன மற்றும் வறட்சி நிவாரண ஈட்டுத் தொகை குவின்டால் ஒன்றுக்கு ரூ. 35 கொடுத்ததாலும், திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள சில வட்டங்களில் அரசின் ஏகபோகக் கொள்முதல் உரிமை நீட்டிக்கப்பட்டதாலும், 1983 ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் ஒரு இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய முடிந்தது.

21. பொது விநியோக முறையின் மூலம் திங்களொன்றுக்கு 70,000 முதல் 80,000 டன் அரிசி வழங்க வேண்டியிருந்ததால், வெளி அங்காடியிலிருந்து மிகவான விலைக்குப் பெருமளவில் அரிசியைக் கொள்முதல் செய்ய வேண்டியிருந்தது. நடப்பாண்டில், மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்கிய வகையில், மாநில அரசுக்குச் சுமார் ரூ. 100 கோடி அளவிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்படுகிறது. இப்பெரும் செலவைக் குறைக்க, தற்போது திங்கள் ஒன்றுக்கு மத்திய அரசின் இருப்பில் இருந்து வழங்கப்படும் 35,000 மெட்ரிக் டன் அரிசியின் அளவை, 80,000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

### கூட்டுறவு.

22. கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களிடம் தொடர்ந்து மிகைப்பற்று இருந்து வருவது, குறுகிய கால வேளாண்மைக் கடன் அளவில் எதிர்பார்த்த வளர்ச்சியைப் பாதித்திருந்த போதிலும், 1982-83 ஆம் ஆண்டில், நீண்ட கால, நடுத்தரக் காலக் கடன் வழங்கும் அளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழில், துணைத் தொழில்கள் மூலம், சிறு

விவசாயிகள் தங்களின் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள, அவர்களுக்கு, நடுத்தரக் காலக் கடன் தொகையின் மொத்த அளவில், 95 சதவீதம் வழங்கப்பட்டுள்ளது என்பதுதான் கடன் வழங்கு அமைப்பு முறையின் முக்கிய அம்சமாகும்.

23. இம்மாநிலத்திலுள்ள வேளாண்மைப் பணித் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், 1982-83 ஆம் ஆண்டில், ரூ. 67.18 கோடி அளவிற்கும், நடப்பாண்டில் 1983 டிசம்பர் வரை, ரூ. 58.04 கோடி அளவிற்கும் குறுகிய காலப் பயிர்க் கடன்களை வழங்கியுள்ளன. பால்பண்ணை, கோழிப் பண்ணை முதலியன போன்ற துணைத் தொழில்களுக்கு, 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 9.79 கோடி அளவிற்கு நடுத்தரக் காலக்கடன் வழங்கப்பட்டிருக்க, 1982-83 ஆம் ஆண்டில், இவற்றிற்கு ரூ. 15.97 கோடி வழங்கப்பட்டது. நடப்பாண்டில், ரூ. 8.33 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டில், நீண்ட காலக் கடன்களுக்கான நிதி ஒதுக்கம், ரூ. 5.52 கோடியாக இருந்தது. அதனைத் தொடக்க நிலவள வங்கிகள் 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 14.35 கோடியாகப் பெருக்கியுள்ளன. 1983-84 ஆண்டில் 1983 டிசம்பர் வரை, ரூ. 9.11 கோடி அளவிற்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

24. சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள நலிந்த பிரிவினர்களுக்குத் தொடர்ந்து 4 சதவீத சலுகை விதத்தில் கடன் வழங்கப்படும். பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், மலைவாழ் பழங்குடியினருக்கு இச்சலுகை வீதத்தில் கடன் வழங்குகின்றன. சிறு உழவர்கள், கடன்களை முறையாகத் திருப்பிச் செலுத்துவதற்காக, 2 சதவீத வட்டி தள்ளுபடி வழங்கும் ஊக்கத்திட்டமும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

25. ஒரு இலட்சம் ஆதி திராவிட குடும்பங்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர, குடும்பம் ஒன்றிற்கு அரசு மானியமாக, ரூ. 100 வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 80,000 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. அடுத்த நிதி ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ. 10 இலட்சம் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

26. விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் முதலிய வேளாண்மை இடுபொருட்களை வழங்குவதில், கூட்டுறவுச் சங்கங்கள் முனைப்பாகச் செயல்பட்டு வந்துள்ளன. அண்மையில் ஏற்பட்ட வறட்சி, வெள்ளப் பெருக்குப் போன்ற பாதகமான பருவகாலங்களில், உழவர்களுக்கு இது பேருதவியாக அமைந்தது. இவை தவிர, சிறு உழவர்களுக்கும், சொற்ப நில உழவர்களுக்கும், பெருமளவில் உதவியளிக்கும் தேசியத் திட்டத்தைச் செயல்படுத்துவதில்,



கடன் வழங்குக் கூட்டுறவு சங்கங்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மைப் பணித் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் சிறு பாசனக் காரியங்களைச் சிறப்பு இலமாகக் கருதி, அவற்றிற்கு நீண்டகாலத் தவணை வேளாண்மைக் கடன்கள் வழங்க 8 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

27. கூட்டுறவுச் சங்கங்கள் இன்றியமையாத பொருட்களை வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இம்மாநிலத்திலுள்ள கிராமப் பகுதிகளில், 11,159 கிராமக் கூட்டுறவுக் கடைகள் பெரும் அளவில் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, காய்கறிகளில் விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்காக, காய்கறி பயிரிடுவோர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் 47 ஏற்படுத்தப்பட்டுள்ளன. 8 மாவட்டங்களில் இச்சங்கங்கள் காய்கறி விற்பனையை மேற்கொண்டுள்ளன. வரும் ஆண்டில், இத்திட்டம் மேலும் 8 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும்.

## காட்டுவளம்.

28. காடுபடு பொருள்களைப் பாதுகாத்து வளர்ப்பதோடு மட்டுமல்லாது, அதிகப் பரப்பளவில் காடு வளர்க்க, இம்மாநில அரசு, பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஸ்வீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் கூடிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 1983 டிசம்பர் வரையில் 285 இலட்சம் மரங்கள் நடப்பட்டுள்ளன. 28 000 எக்டேர் பரப்பளவில் மலைத் தோட்டப் பயிர்கள் வளர்க்கப்பட்டுள்ளன. கரையோரங்களிலும் சாலையோரங்களிலும் 803 கி.மீ. நீளத்திற்குக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. 1983—84 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ. 8.67 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

29. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ், மதுரை கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களில் பல்வேறு காடு வளர்ப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் தவிர 1983-84 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், 2,132 எக்டேரில் யூக்கலிப்டஸ் மரங்களையும், 742 எக்டேர் பரப்பளவில் முந்திரி மரங்களையும் பயிரிட்டுள்ளது.

30. மீனளத்தை மேம்படுத்துவதற்கும், மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தைச் சிறப்படையச் செய்யவும், அரசு, வெவ்வேறு திட்டங்களை வகுத்துள்ளது. மீனவர்களுக்கு உயர்தர மீன்பிடி வலை கிடைக்கச் செய்வதற்காக, 20 டன் மீன்பிடி திறன்கொண்ட வலை தயாரிக்கும் பிரிவு ஒன்றை ஏற்படுத்த, தமிழ் நாடு மீனள மேம்பாட்டுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அவலாஞ்சியில் 'டிரவுட்' வகை மீன் குஞ்சுகளை வளர்க்கும் நவீன திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு அனுமதி வழங்கியுள்ள 9,931 வீடுகளில், 7,535 வீடுகளை, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம், கடலில் மீன் பிடிக்கின்ற மீனவர்களுக்காகக் கட்டியுள்ளது. எஞ்சியுள்ள வீடுகள், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் முன் கட்டி முடிக்கப்படும்.

## பாசனம்

31. 1983—84 ஆம் ஆண்டில், 14,350 எக்டேர் நிலப்பரப்பிற்குக் கூடுதல் பாசன வசதி கிடைக்கும் வகையில், பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் முடிக்கப்படும். 1984—85 ஆம் ஆண்டில், இத்தகைய திட்டங்களுக்குக் மூலதனச் செலவு ரூ. 48.97 கோடி ஆகும். இந்த முதலீட்டின் மூலம் 28,170 எக்டேர் நிலப்பரப்பிற்குக் கூடுதல் பாசன வசதிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

32. நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரம்பிக்குளம்—ஆளியாறு விரிவாக்கத் திட்டம், பெரியாறு, வைகைப் பாசன ஏற்பாட்டை நவீனப் படுத்தும் திட்டம் ஆகிய இரு முக்கியத் திட்டப் பணிகளும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. திட்டமிட்டப்படி, இப்பணிகள் செய்து முடிக்கப்படும்.

33. நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூன்று இந்த ஆண்டு முடிக்கப்பட்டு விடும். பெரியார் மாவட்டத்தில் பெரும்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டப் பணி நடப்பாண்டில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

34. பெரியாறு, வைகை பாசன ஏற்பாட்டை, ரூ. 59 கோடி செலவில் நவீனப்படுத்தும் இரண்டாம் நிலை திட்டச் செயற் குறிப்புக்கு உலக வங்கி ஏற்பளித்துள்ளது. ரூ. 44.50 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிற முதலாம் நிலைப் பணியுடன், இரண்டாம் நிலைப் பணியும் ஒருசேரச் செயல் படுத்தப்படும்.

35. அரசுத் துறைகளைச் சேர்ந்த வெவ்வேறு அதிகாரிகளுக்குப் பணியில்



பயிற்சி அளிப்பதற்காக திருச்சிராப்பள்ளியில், அமெரிக்கா நாட்டு உதவித் திட்டத்தின்கீழ்ப் பாசன நிருவாகப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

36. சென்ற நிதி ஆண்டுத் தொடக்கத்தில், தமிழ்நாடு மின் அமைப்பின் நிறுவுத்திறன் 3,109 மெகாவாட்டாக இருந்தது. கல்பாக்கம் அனல் மின் நிலையம் தொடங்கியதிலிருந்து தற்போது இந்த மின் அமைப்பின் அளவு 3,344 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. நீர்மின் தேக்கங்களை அறிவார்ந்த முறையில் பயன்படுத்தி, மின் உற்பத்தியைச் சீரமைத்தாலும், தூத்துக்குடி அனல் மின் திட்டச் செயல்பாட்டை மேம்படுத்தியதாலும், கூடுதல் மின் உற்பத்தி கிடைத்தது. 1983 ஜனவரியிலிருந்து ஜூன் வரையில் சராசரியாக நாளொன்றுக்கு 23.83 மில்லியன் யூனிட் என்றிருந்த மின் உற்பத்தி, இந்த ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு 33.68 மில்லியன் யூனிட் மின் சக்தி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

37. 1—2—1983 அன்று 128 மில்லியன் யூனிட்டாக இருந்த புனல் மின் உற்பத்தித் திறன் 1—2—1984 அன்று 1,068 மில்லியன் யூனிட்டாயிற்று. இதனால், புனல் மின்வள வாயில்கள் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 1983 டிசம்பரில் 333 மில்லியன் யூனிட் மின்சாரமும், 1984 ஜனவரியில் 344 மில்லியன் யூனிட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது, இந்த அனல் மின் நிலையத்தின் ஒரு சாதனையாகும். எனினும், இந்த அளவு மின் உற்பத்திக்குப் போதிய நிலக்கரி கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. மாதம் ஒன்றுக்கு 2.7 இலட்சம் டன் நிலக்கரி தேவையாகயிருக்க, வழங்கப்படுகின்ற நிலக்கரியின் அளவு 1.5 இலட்சம் டன் மட்டுமேயாகும்.

38. மின்சக்தி நிலைமை சீரடைந்துள்ளதால், மின்வெட்டைக் குறைக்க முடிந்தது. மின்சக்தியைப் பயன்படுத்துவதை குறித்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் இது உதவியது. இந்த ஆண்டில் மின்சக்தியின் பயன்பாடுமீதான கட்டுப்பாடுகளை மேற்கொண்டும் அதிகரிக்காமல் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று மின்வாரியம் நம்பிக்கை கொண்டுள்ளது.

39. மின்சக்தி மேம்பாட்டுத் திட்டங்களை விரைவுபடுத்துவதன் மூலமே, மாநிலத்தில் தொடர்ந்து நிலவும் மின் பற்றாக்குறைக்கு நிலையான தீர்வு காண முடியும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மேட்டூர் அனல் மின் நிலைய நீட்டிப்புத் திட்டம், வட சென்னை அனல் மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் நிலைய நீட்டிப்புத் திட்டம் ஆகிய மூன்று பெரிய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 3

திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இவற்றில், மேட்டூர் அனல் மின் நிலைய நீட்டிப்புக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம், ஒவ்வொன்றும் 210 மெகாவாட் உற்பத்தி செய்யும் இரண்டு பிரிவுகள் சேர்க்கப்படும். பிற இரண்டு திட்டங்கள் மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

40. திட்டப் பணிகளின்கீழ் நிதி ஒதுக்குவதில் மின் துறைக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் மின் துறைக்கு மத்தியத் திட்டக் குழு 237 கோடி ரூபாய் ஏற்பளித்துள்ளது. எனினும், நிலக்கரி, எண்ணெய், இரயில்வே கட்டணம், பிற மாநிலங்களிலிருந்து வாங்கும் மின்சக்திக்கான கட்டணங்கள் ஆகியவை பெரும் அளவில் உயர்ந்துவிட்டதால், தமிழ்நாடு மின்வாரியத்தின் ஆதாரங்களுக்கும், பொறுப்புக்கும் இடையே உள்ள இடைவெளி மிக அதிகமாக உள்ளது. நிலக்கரி விலையைத் தற்போது 25 சதவீதமாக உயர்த்தியுள்ளது. மின்வாரியத்திற்கு ஆண்டு தோறும் சுமார் ரூ. 15 கோடி நிதிச் சுமையைச் சேர்க்கிறது. 1983 ஆம் ஆண்டு மே திங்களில் செய்யப்பட்ட மிதமான மின் கட்டணத் திருத்தம் புதிய திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப் போதுமானதாக இல்லை. தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்ட மாற்று முறைகள் உருவாக்கப்படவேண்டியிருக்கின்றன.

## தொழில் வளர்ச்சி

41. மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பாதிக்கப் பட்டுள்ளது என்றும், நிலையான பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் ஒருசில மட்டுமே மேற்கொள்ளப் பட்டுள்ளன என்றும் ஒரு சில தரப்பினரிடையே ஆதாரமற்ற கருத்து நிலவி வருகிறது. எனினும், மத்திய நிதி நிறுவனங்களிடமிருந்து, மொத்தக் கடன் உதவி ரூ. 1,289 கோடி பெற்ற தமிழ்நாடு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் கடன் முதலீட்டு நிறுவனம், இந்தியத் தொழில் நிதி நிறுவனம் போன்ற பல்வேறு நிதி உதவி நிறுவனங்களிலிருந்து கடன் பெறுவதில், மூன்றாவது இடத்தை வகிக்கிறது. மாநிலத்தில் செய்யப்பட்ட மொத்த முதலீடு மிகவும் அதிகம் என்பதையே இது காட்டுகிறது. தமிழ்நாட்டின் தொழில் வளத்தில் மைய அரசின் முதலீடு மிகவும் குறைவு என்பதையும் நாம் இங்கே குறிப்பிட வேண்டும். தொழில்களில் மத்திய அரசின் மொத்த முதலீடான ரூ. 21.171 கோடி மற்றும் எந்த ஒரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படாத ரூ. 2,422.14 கோடி ஆகியவற்றில் 1981 மார்ச் வரை தமிழ்நாட்டில் செய்யப்பட்ட முதலீடு ரூ. 922.51 கோடி மட்டுமே. ஆறாவது



1984 மார்ச் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசு தமிழ்நாட்டில் ஏற்படுத்திய புதிய தொழில் திட்டம் ரூ. 1.06 கோடி சொற்ப முதலீட்டுடன் தொடங்கப் பட்ட மத்திய "பிளாஸ்டிக் பொறியியல் கருவிகள் உற்பத்தி நிறுவனம்" மட்டுமாகும்.

42. தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் திட்டத்தை அணுகும் முன்னரும், புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தும் முன்னரும், மாநிலத்தில் உள்ள தொழில் வளர்ச்சியின் தன்மைபற்றி ஆய்வு செய்ய வேண்டும். மாநிலத் தொழில் வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் சிறு தொழில் பிரிவுகளின் விரைவான வளர்ச்சியே ஆகும். 31—3—1979 அன்று 22,254 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டிருக்க 31—3—1983 அன்று 40,925 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் சிறு தொழில்களின் எண்ணிக்கை 83 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்பதையே இது காட்டுகிறது. பெருந்தொழிற்சாலைகள் நிறுவப்படாத நிலையிலும், சிறு தொழில் வளர்ச்சிக்குப் பெருமளவில் முதலீடு செய்யப்பட்டிருப்பதையே இது உணர்த்துகிறது. நமது தொழில் வளர்ச்சியின் மற்றொரு குறிப்பிடத் தக்க அம்சம் என்னவென்றால் இது மாநிலம் முழுவதிலும் ஏற்பட்ட பரவலான வளர்ச்சி ஆகும். தமிழ்நாட்டில் எந்த மாவட்டமும், தொழிற்சாலை இல்லாத மாவட்டமாக வகைப்படுத்தப்படவில்லை. மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு மத்திய நிதி உதவி அளிப்பதற்கு இது இடையூறாக இருந்த போதிலும், வட்டார ஏற்றத்தாழ்வுகளை அகற்ற இந்த நிலை உதவி வருகிறது. தொழில் வளர்ச்சியின் மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால் பட்டுப்பூழு வளர்ப்பு, ஏனைய கிராமப்புற குடிசைத் தொழில்கள் போன்ற வேலை இருப்பது ஆகும். இது வேலை வாய்ப்புப் பிரச்சினையைத் திறமையாகச் சமாளிக்க அரசு எடுத்துள்ள பெரு முயற்சியின் விளைவால் ஏற்பட்டுள்ள ஒன்றாகும்.

43. திறமையை வளர்த்துத் தொழில்களைப் பெருக்கி, அதன் மூலம் இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க, முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதையே மேற்சொன்ன ஆய்வு காட்டுகிறது. இந்நோக்கத்தை எய்த, தனியார் பல்தொழில் பயிற்சிப் பயிலகங்களையும் பொறியியல் கல்லூரிகளையும் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. வாழ்க்கைத் தொழில் கல்வி, தொழில் நுட்பக் கல்வி முதலியவற்றை மேம்படுத்த அரசு எடுத்துள்ள முயற்சிக்கு இது உறுதுணையாக இருக்கும்.

44. அரசின் பல்வேறு நிறுவன அமைப்புகள் அவற்றைச் சார்ந்த தொழில் வளத்தை மேம்படுத்த முக்கிய பங்காற்றி வருகின்றன. 1983-84 ஆம் ஆண்டில் டிசம்பர் வரை மாவட்டத் தொழில் மையங்கள், 6,621 சிறு தொழில்

நிறுவனங்களைப் பதிவு செய்துள்ளன. இவை 47,767 பேர்களுக்கு வேலை வாய்ப்பை நல்கியுள்ளன. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ. 16.47 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்கப்படுவதற்காக 10,988 விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றில் 2,079 இனங்களுக்கு இதுகாறும் ரூ. 318.98 இலட்சம் தொகைக்கு வங்கிகள் அனுமதி வழங்கியுள்ளன.

45. சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிட்கோ) நிருவகித்து வரும் தொழில் பேட்டைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் திட்டத்தின்கீழ், 33 அரசு தொழில் பேட்டைகளில் உள்ள 783 பட்டறைகள், 983 மேம்படுத்தப்பட்ட மனைகள் சிறு தொழில் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ், 101 சிறு தொழில் பிரிவுகள், அவற்றின் பட்டறைகளுக்கான தொகை முழுவதையும் செலுத்தி உள்ளன. பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிட்கோ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 55.50 கோடி முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

46. 1983-84 ஆம் ஆண்டில், கதர்-கிராமத் தொழில் வாரியம், ரூ. 83.79 கோடி மதிப்பிற்குப் பொருட்களை விற்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இது ரூ. 101.51 கோடியாக உயர்த்தப்பட உள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் கூடுதலாக 32,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். 41,476 கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்க வாரியம் வகை செய்துள்ளது.

47. தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத் துறை, கூட்டுத் துறையின்கீழ் 26 திட்டங்களை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. பொதுத் துறையிலான அரக்கோணம் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்தின் மீள் உருள் ஆலைத் திட்டம் சோதனை முறையில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. பொதுத் துறையின்கீழ் 3 திட்டங்களும், கூட்டுறவுத் துறையின்கீழ் 7 திட்டங்களும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. பொதுத் துறையின்கீழ் 7 திட்டங்களையும், கூட்டுறவுத் துறையின்கீழ் 17 திட்டங்களையும் உருவாக்கத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுவதும் சொந்தமானதும் அதன் துணை நிறுவனமுமான தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம் ரூ. 10 கோடி செலவில் திருச்சி மாவட்டத்தில், மாயனூரில், ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் திறனுடன் ஆஸ்பெஸ்டாஸ் குழாய்





தயாரிக்கும் திட்டப் பணியை மேற்கொண்டுள்ளது. இது, 1984 செப்டம்பரில் முடிக்கப்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி நிலையில் பின்தங்கியுள்ள பகுதியான புகளூரில், பத்திரிகைக் காகிதம்-பிற காகிதம் தயாரிக்கும் தொழிற் சாலையை, தமிழ்நாடு பத்திரிகைக் காகிதம்-பிற காகித நிறுவனம் அமைத்து வருகிறது ரூ. 195 கோடி மதிப்புள்ள இத்திட்டம் ஆண்டொன்றுக்கு 50,000 டன் பத்திரிகைக் காகிதத்தையும், 40,000 டன் பிற காகிதத்தையும் உற்பத்தி செய்யும். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி அந்நியச் செலாவணி மிச்சமாகும்.

48. நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும், தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிப்காட்) முக்கிய பங்கு வகிக்கிறது. நடப்பாண்டில், 31—1—1984 வரை தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம், ரூ. 23.26 கோடி அளவிற்குக் குறித்த காலக் கடன் உதவிக்கு அனுமதி வழங்கியுள்ளது. உத்தரவாதத்தின்பேரிலும், நேரடியாகத் தொகை அளித்தல் பேரிலும் ரூ. 20.99 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 83.40 இலட்சம் அளவிற்கு அடிப்படை மூலதன நிதியுதவி அளிக்க அனுமதி வழங்கியுள்ளது.

49. இம்மாநிலத்தில் கனிம வளர்ச்சிப் பணி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக, அரசு, மண்ணியல்-சுரங்கம் வெட்டுதல் எனும் தனித் துறை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம், படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் ரூ. 80 கோடி செலவில் "வெப்பத்தாங்கிக் கற்கள் தயாரிக்கும் திட்டம்" ஒன்றை மேற்கொண்டுள்ளது. 1985 மார்ச்/ஏப்ரலில், சுழல் ஊது உலை தொடங்கப்படும்போது, இத்திட்டத்தின் முதற்கட்டப் பணி முடிவடையும்.

50. இம் மாநிலத்தில் உள்ள கனிம வளத்தைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட பொதுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு கனிமவள நிறுவனம் நல்ல முன்னேற்றத்தை எய்தியுள்ளது. இந் நிறுவனத்தின் மொத்த விற்பனை 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 256 இலட்சம் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த ஆண்டில் இந்த விற்பனை ரூ. 350 இலடசமாக இருக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டு விற்பனைத் தொகையான ரூ. 168 இலட்சத்தைப் போல் இது இரண்டு மடங்குக்கு மேலாகும். இந்நிறுவனம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டுள்ள நிறுவனமாதலால் இதன் விற்பனையில் 90 சத வீதம் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கும். சென்னை அருகே மணலியில் ரூ. 385 இலட்சம் செலவில், 100 சதவீதம் ஏற்றுமதிக்காகக் கருங்கற்களை வெட்டி, பளபளப்பாக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் பணியை 'டாமின்' மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக அரசு பங்கு மூலதனமாக ரூ. 30 இலட்சம் ஏற்கெனவே வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலை 1984 ஆம் ஆண்டு இறுதியில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிவகங்கையில் கிடைக்கும் சிறப்பு மிக்க மைக்கல்லை (கிராஃபைட்) பயன்படுத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத் தொழிற்சாலைக்காக ரூ. 30 இலட்சம் முதலீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம் அடைந்துள்ள முன்னேற்றம் அரசுக்கு மனநிறைவு அளிக்கிறது. இந்நிறுவனம் 1983—84 ஆம் ஆண்டில் ரூ. 100 இலட்சம் ஆதாயத்தை எதிர்பார்க்கிறது.

51. பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 1984-85 ஆம் ஆண்டில், ரூ. 91.65 இலட்சம் மூலதனச் செலவில், திட்டங்கள் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இக் கால அளவில், மேலும், 10,000 ஏக்கரில் கூடுதலாக முசுக்கட்டைச் செடி பயிரிடப்படும். 1984—85 ஆம் ஆன்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் முக்கியத் திட்டங்களில் அரசு பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணைகளில், முசுக்கட்டைச் செடிகள் வளர்த்தலும், கோயம்புத்தாரில், ஆண்டிற்கு இருமுறை முட்டையிடும் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தலும் அடங்கும்.



### கைத்தறி—துணிகள்

52. நம் மாநிலத்தில் கைத்தறித் தொழில் சுமார் 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பினை அளித்து வருகின்றது. மொத்தம் 5.56 இலட்சம் கைத்தறிகளில், இதுவரையில் 3,47 இலட்சம் தறிகள், 1,529 தொடக்க நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அமைக்கப்பட்டுள்ளன. கைத்தறி இல்லாத நெசவாளர்களுக்குக் கூட்டுறவு அமைப்புத் திட்டத்தின் மூலம் பொதுவான பணிக்கொட்டகைகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டில் 12 தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில், அத்தகைய நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 15-ஐ அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர்களுக்கென்றே நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 8-ஐ ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

53. இவ்வாண்டில், கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், கோ ஆப்டெக்ஸ் நிறுவனமும், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கைத்தறித் துணிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கைத்தறித் துணிகளை வழங்குவதில் முக்கியப் பங்கேற்றுப் பணியாற்றியுள்ளன. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருகின்போது, கோ-ஆப்டெக்ஸ நிறுவனம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறுகிய கால அளவில், ரூ. 2 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை வழங்க ஏற்பாடு செய்தது.

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

54. உலக வங்கியின் நிதி உதவி பெறும் சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டு விரைவுத் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ், குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ள விரிவான திட்டம், தொடர்ந்து முழு வேகத்துடன் செயல் படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 1-ன்கீழ், சென்னை நகரில்

ரூ. 443.65 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதனால், 24,862 குடும்பங்கள் பயனடைந்தன. 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2-ன் கீழ் ரூ. 354.31 இலட்சம் செலவில் 22,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இந்தத் திட்ட இலக்கான 50,000 குடும்பங்களும் பயனடையும் வகையில் 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், 1984-85 ஆம் ஆண்டில், வீட்டு மேம்பாட்டிற்காக, ரூ. 273 இலட்சம் அளவிற்குக் கடன்கள் வழங்கப்படும்.

55. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், மதுரை கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டும் பணியை மேற்கொள்ளும். இது மதுரை, கோயம்புத்தூர், ஏனைய நகராட்சிகளிலும், குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ளும்.

56. சென்னை அருகே முகப்பேர், நெற்குன்றம் கிராமங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2-ன் கீழ் "மனைகள்-பணிகள்" திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

57. சென்னை மாநகருக்காக, ரூ. 135 கோடி செலவில் விரிவான நகர வளர்ச்சித் திட்டம் ஒன்று M.U.D. P III தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் ஆய்வுக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதே போன்று கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், ஆகிய நகரங்களை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் ஆய்வுக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

58. 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரசுப் பணியாளர்கள் வீடுகட்டும் முன்பணத்திற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், நகராட்சிப் பணியாளர்களுக்கு மட்டும் ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

59. நடப்புத் திட்டக் கால அளவில் கிராமப் பகுதி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், 1978-79லிருந்து மொத்தம் 1,57,766 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம், வீடு கட்டுபவர்களுக்குக் கடனாகவும், உதவித் தொகையாகவும் ரூ. 58.23 கோடி வழங்க, கிராம வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்துள்ளது. இவற்றில், ஆதிதிராவிடர்களால் மட்டும் 1,26,409 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டில், இத் திட்டத்தின்கீழ் மேலும் 40,000 வீடுகள் கட்டக் கருதப்பட்டுள்ளது.



**சாலைகள், போக்குவரத்து, துறைமுகங்கள்.**

60. போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து நல்முறையில் செயல்பட்டு வருகின்றன. 1982-83ல் மூன்று போக்குவரத்துக் கழகங்களைத் தவிர மற்றவை ஆதாயத்தில் செயல்பட்டன. நமது போக்குவரத்துக் கழகங்களில் இரு கழகங்கள் தேசிய உற்பத்தித்திறன் குழுவின் அனைத்திந்திய விருதுகளைப் பெற்றுள்ளன.

61. ஜீவா போக்குவரத்துக் கழகம், நேசமணி போக்குவரத்துக் கழகம், மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் ஆகிய மூன்று புதிய போக்குவரத்துக் கழகங்கள் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து தனித்துச் செயல்படத் தொடங்கியுள்ளன. பல்லவன் போக்குவரத்துக் கழக ஆலோசனைப் பணிப் பிரிவு ஒரு தனி நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

62. 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 9 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. டீசலின் விலை அதிகரிப்பு, நிருவாகச் செலவை மிகவும் உயர்த்தியுள்ளது என்பதை ஈண்டு குறிப்பிடுவது அவசியமாகும்.

63. சாலைகளைப் பராமரிப்பதற்குரிய அடிப்படைத் தேவைப் பொருளான நிலக்கீலின் விலையை மூன்றாண்டு கால அளவில் 75 சதவிகிதத்திற்கு மேல் மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இந்த விலை ஏற்றம் காரணமாக சாலைப் பணிகளின் முன்னேற்றம் தடைப்பட்டது.

64. ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரியைக் கொண்டு வருவதற்காக கப்பல் ஒன்றை வாங்கப் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

65. 1982-83 ஆம் ஆண்டில், இம்மாநிலத்திலுள்ள சிறு துறைமுகங்கள், 3.40 இலட்சம் டன் சரக்கை ஏற்றி இறக்கின. கடலூர் துறைமுகத்திலும், குளச்சல் துறைமுகத்திலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாலி நோக்கத்தில் சிறு துறைமுகத்தை அமைப்பது அனுமதியளிக்கப்பட்டு, பணிகள் நடந்தேறி வருகின்றன.

சுற்றுலா

66. சுற்றுலா மேம்பாட்டிற்கான வழிவகைகள் தமிழ் நாட்டில் ஏராளமுள்ளன. இந்த வழிவகைகளை மேம்படுத்த மாநில அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாமல்லபுரத்தில் திறந்த வெளி அருங்காட்சியகம் ஒன்றை அமைக்கவும். முட்டுக்காட்டில் நிலையான படகுத் துறை ஒன்றைக் கட்டுவது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கன்னியாகுமரி, முதுமலை, பிச்சாவரம் ஆகிய இடங்களில் இளைஞர் உணவகங்களை ஏற்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக ஐந்து சுற்றுலா மையங்களை ரூ. 10 இலட்சம் செலவில் மேம்படுத்துவதற்கான பணிகள் நடந்தேறி வருகின்றன. 1984-85 ஆம் ஆண்டு, மேலும் சில மாவட்ட சுற்றுலா மையங்களை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

67. சுற்றுலா மையங்கள் பற்றி அதிக அளவில் விளம்பரம் கொடுக்கும் பொருட்டு, ரூ. 2 இலட்சம் செலவில் செய்திப் படம் ஒன்றைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பூம்புகார் தொகுப்பில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் கலையும், பண்பாடும்.

68. தமிழர்களின் புகழ்வாய்ந்த பாரம்பரியத்தையும், அவர்களது பண்பாட்டையும் ஒளிபெறச் செய்வதை, அரசு, அறிவார்ந்த கொள்கையாகக் கொண்டிருக்கிறது. புது டில்லியில் முக்கியமானதோர் இடத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 10 அடி உயர வெண்கலச் சிலை ஒன்றை நிறுவக் கருதப் பட்டுள்ளது. மகாகவியின் முழுப்படைப்புகளையும், கவிதைகள், கட்டுரைகள், கதைகள் என மூன்று தொகுதிகளாக வெளியிடவும் எண்ணியுள்ளது. இதற்காக அரசு ரூ. 3 இலட்சம் அனுமதியளித்து, இப் பணியைத் தஞ்சையிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.

69. தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை வல்லுநர் குழு ஒன்று தயாரித்து வருகிறது. தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து அவர் நடத்திய போராட்டத்தை நினைவு கூறும் வகையில் கேரளாவிலுள்ள வைக்கத்தில் பெரியார் நினைவுக் கட்டிடத் தொகுப்பு ஒன்றை அமைக்கக் கருதப்பட்



டுள்ளது. கேரளத்தில், வைக்கத்தில் தந்தை பெரியார் திருவுருவச் சிலையை வைக்க கேரள அரசு இடம் ஒதுக்கித் தந்துள்ளது. அங்கு பெரியார் சிலை அடுத்த ஆண்டுக்குள் தமிழக அரசுச் செலவில் நிறுவப்படும்.

70. தமிழகத்திலுள்ள கோயில்களுக்கு திருப்பணி செய்வதற்கும், பழுது பார்ப்பதற்கும் அரசு ரூ. 15 இலட்சம் மானியமாக அளிக்க முடிவெடுத்துள்ளது.

71. தமிழக அறிஞர்களின் பேருரைகளை அவர்களின் வாயுரையாகவே பெற்று பாதுகாக்க அடுத்த நிதியாண்டில், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் புதிய திட்டம் ஒன்றைக் கொண்டுவரவும் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் கிராமியக் கலைகளைப் பேணிப் பாதுகாத்துப் பிரபலப்படுத்தக் கிராமியக் கலை நிலையம் ஒன்றை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

கல்வி

72. வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்தில், கல்விக்குத் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. கல்வி என்பதன்கீழ் செலவு தொடர்ந்து பெருகிக்கொண்டே வந்துள்ளது. 1984—85 ஆண்டு மொத்த மூலதனச் செலவு ரூ. 404.76 கோடியாகும். முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் காரணமாக 6—11, 11—14 வயதுத் தொகுதியில் கூடுதலாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது உயர்ந்துள்ளது. இது 20 அம்சத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைவிட அதிகமானதாகும். 2 இலட்சம் சிறுவர்கள் என்ற இலக்குக்கு மாறாக, 1983-84-ல் 3.82 இலட்சம் சிறுவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

73. 1983—84-ல் 6—14 வயதுத் தொகுதியில் உள்ள மாணவர்களுக்காக, 390 முறைசாராக் கல்வி நிலையங்கள் இருந்தன. இவை ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1984—85-ல் குடியாத்தம் பகுதியில் மேலும் 10 முறைசாராக் கல்வி நிலையங்களைத் தொடங்கக் கருதப்

பட்டுள்ளது. 1983—84-ல் மொத்தம் 17,047 முதியோர் கல்வி நிலையங்கள் செயல்பட்டன. இந்த நிலையங்களில் 5.50 இலட்சம் முதியோர் பயின்றனர். அவர்களில் 3.55 இலட்சம் பேர்கள் பெண்கள். 1984—85-ல் 1,000 எட்டறிவு நிலைக் கல்வி நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

74. அண்மையில் கொடைக்கானலில் ஏற்படுத்தப்பட்ட அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், மகளிர் நலன் குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்வதுடன் மகளிர் நலத் திட்டங்களுக்காக ஆலோசனை, கண்காணிப்புப் பணிகளையும் நல்கும். ஏற்கெனவே அறிவித்தவாறு, காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1984—85-ல் புதிய பட்டப் படிப்பையும், பட்ட மேற்படிப்பையும் தொடங்க ரூ. 7 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டு சட்டப் படிப்பு 1983—84 முதல் கொண்டு வரப்பட்டுள்ளது.

75. தொழில் நுட்பக் கல்வித் துறையில் புதிய பாடமுறைகளைக் கொண்டு வரவும், தக்க கல்வி வசதிகள் அளிக்கும் பொருட்டும், கட்டிடங்கள், கருவிகள் வகையில் வசதிகளை மேம்படுத்தவும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1983-84-ல் அரசுப் பல்தொழில் பயிற்சிப் பயிலகங்கள் ஒவ்வொன்றிலும், ஸ்ரீலங்காவிலிருந்து திரும்பியுள்ள தமிழ் அகதிகளின் நலன் கருதி 5 இடங்களைக் கூடுதலாக அரசு ஏற்படுத்தியுள்ளது.

76. ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனம் மற்றும் பன்னாட்டுத் தொழிலாளர் நல அமைப்பின் நிதியுதவியுடன், அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கொண்டு வரப்பட்டுள்ள வாழ்க்கை தொழில் நவீன பயிற்சி முறை தற்போது மதுரை தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது, விரைவில் செயல்படத் தொடங்கும். 1983-84 ஆம் ஆண்டில் அரசு, மூன்றாம் ஷிப்டு முறையை, மூன்று தொழில் பயிற்சி நிலையங்களில் கொண்டு வந்துள்ளது. 1984—85 ஆம் ஆண்டில், சேலம் தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் இந்த ஏற்பாடு நீடிக்கப்படும்.

77. ஏற்படுத்தக் கருதியுள்ள அறிவியல்-தொழில் நுட்பவியல் நிலையங்களை அமைத்து, அவற்றைப் பராமரிப்பதற்காக நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

78. 1983—84-ல் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ள 17 தொடக்க சுகாதார நிலையங்கள் மூலம், கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்குச் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் கிடைக்கச் செய்வதில் அரசு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இவற்றோடு மாநிலத்தில் மொத்தம் 424 தொடக்கச் சுகாதார





நிலையங்கள் இருக்கும், சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்த 1984-85-ல் மேற்கொள்ளவிருக்கும் குறிப்பிடத்தக்க திட்டங்களில், கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தல், இராமேஸ்வரம் தீவில் மலேரியா நோய்க் கட்டுப்பாட்டிற்கான பணியாளர்களை நியமித்தல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒரு இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்குச் சுகாதாரத் தகவல் அட்டைகள் வழங்குதல் ஆகியவை அடங்கும்.

79. சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் கிராமப்புறப் பகுதிகளுக்கு சுகாதார வசதிகள் அளிப்பதற்கான டேனிடா நிதியுதவி பெறும் திட்டத்தின் கீழ், 449 சுகாதார துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்க சுகாதார நிலையங்களில் 13 மருந்தகக் கட்டிடங்கள் கட்டும் பணியும், 4 அறுவை சிகிச்சை அரங்குகள் கட்டும் பணியும் நடந்தேறி வருகின்றன. நடப்பாண்டு இறுதியில் மொத்தத் திட்டச் செலவான ரூ. 14.40 கோடியில் 50 சதவீதத் தொகையை நாம் செலவிட்டிருப்போம்.

80. கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் வசதிகளைப் பெருக்குவதற்காக ரூ. 50 இலட்சத்திற்கு மேற்பட்ட செலவில் மருத்துவக் கருவிகள் வாங்கக் கருதப்பட்டுள்ளது. மருத்துவர்கள், ஏனைய மருத்துவப் பணியாளர்கள் ஆகியோரை நியமிப்பதன் மூலமும் மருத்துவக் கருவிகளை வாங்குவதன் மூலமும் மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

81. நம் நாட்டு சித்த மருத்துவ முறைக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கேற்ப சித்த மருத்துவ முறை மேம்பாடு தொடர்பாக அரசுக்கு ஆலோசனை நல்க, தமிழ்நாடு சித்த மருத்துவக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. "தமிழ்நாடு மருந்துச் செடிப் பண்ணை மூலிகை மருந்து நிறுவனம்" கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மூலிகைப் பண்ணைகளை ஏற்படுத்துவதையும், மருந்து தயாரித்து வழங்குவதையும் இந்நிறுவனம் மேற்கொள்ளும். சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனையில் உள்ள மருந்தாக்கியல் பிரிவை ரூ. 5.00 இலட்சம் செலவில் மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

82. அடுத்த நிதியாண்டில் மக்கள் நல்வாழ்வு குடும்ப நலப் பணிகள் துறைக்கான நிதி ஒதுக்கம் ரூ. 131.47 கோடியாகும்.

### குடிநீர் வழங்கல்.

83. மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு மிகவும் முக்கியத்துவம் அளித்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில், குடிநீர் பற்றாக்குறை நிலவிய 10,244 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்க ரூ. 77.73 கோடி செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் மேற்கொண்டும் 2,465 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில், வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ், 22,000 குழாய்க் கிணறுகள் ரூ. 46 கோடி செலவில் அமைக்கப்பட்டன.

84. சென்னை மாநகர குடிநீர் வழங்கல்—கழிவுநீர் அகற்று வாரியம், 1984-85 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் ரூ. 15.25 கோடி செலவில் நீர் வழங்கு திட்டங்களையும், கழிவுநீர் அகற்றுத் திட்டங்களையும் மேற்கொள்ளவிருக்கிறது. கிருஷ்ணா நதி நீர் வழங்கு திட்டப்பணி முன்னேறி வருகிறது. 1984-85 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில், இப்பணிக்காக ரூ. 60 கோடி செலவிட வகை செய்யப்பட்டுள்ளது.

85. கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய மூன்று பெரிய நகரங்களுக்கும் ஏனைய 75 நகரங்களுக்கும் 740 சிற்றூர்களுக்கும் ரூ. 149.42 கோடி செலவில் குடிநீர் வழங்க வகை செய்யும் திட்டம் ஒன்றுக்கு, உலக வங்கியின் உதவியைப் பெறப் பேச்சு வார்த்தைகள் முடிந்துவிட்டன. 14 நகராட்சிகளில் முன்னோடித் திட்டமாகக் குறைந்த செலவில் துப்புரவு வசதிகள் செய்துகொடுக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. 1984-85 ஆம் ஆண்டிற்காக இத் திட்டத்தின்கீழ் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

86. நீர் வள மண்ணியல், செயற்கை முறை மறுச் செறிவு தொடர்பான ஆய்வைத் திட்டப் பணியாகக் கருதி நடத்துவது குறித்த திட்டத்தை இவ்வரசு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்திவருகிறது. 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் முதல் கட்டப்பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, நிலத்தடி நீர்வளத்திற்கு கூடுதல் வாயில்கள் இருப்பதைக் கண்டறிந்து முக்கியமான கருத்துக்களை அளித்துள்ளது. செயற்கைமுறை மறுச் செறிவு, நீர் பயன்பாட்டைச் சிக்கனமாகச் சீரமைத்தல் தொடர்பாக, தொழில் நுட்ப வாய்ப்பு இருப்பதையும் அது புலப்படுத்தியுள்ளது. ஆறுகளுக்குக் குறுக்கே, தக்க இடங்களில், தடுப்பு அணைகள் கட்டுவதன் மூலம் ஆறுகளின் உபரிநீர் கடலில் கலந்து விடுவதைக் குறைக்க முடியும். இத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணி 1984-85 முதல் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆய்விற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பு ரூ. 1 கோடிக்கும் மேல் உதவி



வழங்கியுள்ளது. தமிழ் நாடு அரசும் அதற்கிணையாக தன் பங்கிற்கு நிதி ஒதுக்கி வருகிறது. இம்மாநிலத்தில் நிலவும் கடும் தண்ணீர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு இயன்ற இடங்களிலெல்லாம் பெருமளவிற்கு மழை நீரைத் தேக்கி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சமூக நலன்.

87. ஆதி திராவிடர்கள், ஏனைய பிற்பட்ட வகுப்பினர் நலன்களைப் பாதுகாக்க, சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கொள்கையை அரசு இடையறாது பின்பற்றி வருகிறது. நடப்பரண்டில் 1983 டிசம்பர் வரை, ஆதி திராவிடர்களுக்கு, 16,216 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிட மாணவர்களுக்கும், துப்புரவுப் பணியாளரின் சிறார்களுக்கும், 10 புதிய மாணவர் இல்லங்களையும் அரசு தொடங்கியுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் பள்ளி மாணவிகளுக்காக 12 இல்லங்களையும், பள்ளி மாணவர்களுக்காக 6 இல்லங்களையும், கல்லூரி மாணவிகளுக்காக 8 இல்லங்களையும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆதிதிராவிட மாணவிகளுக்கான இல்லங்களைக் கட்டுவது தொடர்பான மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழும் அரசு கட்டிடங்களைக் கட்டி வருகிறது. 101 மாணவரில்லங்கள் கட்ட அனுமதியளிக்கப்பட்டு 29 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மாணவரில்லங்களைக் கட்டுவதற்கான மாநிலத் திட்டத்தின்கீழ் 66 இல்லங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு 27 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

86. ஐம்பது சதவீத ஆதி திராவிடக் குடும்பங்கள் வறுமைக்கோட்டைத் தாண்ட உதவும் சீரிய நோக்கத்துடன் சிறப்புத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1984-85-ல் 1.80 இலட்சம் ஆதி திராவிடக் குடும்பங்களை மேம்படுத்தம் வகையில், பல்வேறுதுறைகளின் முயற்சிகளை ஒருங்கிணைத்து, ரூ. 122.81 கோடி செலவிடப்படும். இத் திட்டங்களுக்காக ரூ. 12 கோடி சிறப்பு மத்திய உதவியாகக் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. ஆதி திராவிடர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டம் தொடர்ந்து தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி நிறுவனத்தால் செயலாக்கப்பட்டு வருகிறது. ஒரு வீட்டின் கட்டுமான மதிப்பீட்டுச் செலவு நடப்பு நிதி ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ரூ. 4,000லிருந்து ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத் தொகை முழுவதும் உதவித் தொகையாக வழங்கப்படும்.

89. 15,000 பழங்குடியினர் குடும்பங்களின் வருவாயை வறுமைக்கோட்டிற்கும்மேலே உயர்த்தும் நோக்கத்துடன், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 21.67 கோடி செலவில் பழங்குடியினர் துணைத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டுக்கான இத்திட்டச் செலவு ரூ. 6 கோடியாகும். 3,000 குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயன்கிட்டவேண்டுமென்று இலக்கு நிச்சயிக்கப் பட்டிருக்க, இதுவரையில் 2,953 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

90. பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்பினரின் நிலைமைகளைப்பற்றிய சமூக-பொருளாதார ஆய்வு ஒன்றைத் தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் ஆணைக்குழு நடத்தி வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 30.79 லட்சம் செலவில், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்காக மேற்கொண்டு 42 இல்லங்களைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

91. முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் 1,99,639 பேர் பயனடைகின்றனர். இவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 35 ரொக்கமாகப் பெறுவதைத் தவிர, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்தின்கீழ், ஒவ்வொரு நாளும் இலவசமாக மதிய உணவும், வாரம் ஒன்றுக்கு அரை கிலோ அரிசியும் பெறுகின்றனர். உடல் ஊனமுற்றோர் பள்ளிகள் சிலவற்றில் உயர் வகுப்புகளைத் தொடங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காது கேளாத பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன், 1984-85-ல், கிண்டியில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் 16 பேர்களுக்கு ஃபிட்டர் தொழிலில் பயிற்சி அளிப்பதற்காகத் தனிப்பட்ட பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கடும் உடல் ஊனமுற்ற சிறார்களுக்காக மதுரையில் அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிக்குச் செயற்கை உறுப்புக்களையும், சாதனங்களையும் வழங்க, மதுரையில் செயற்கை உறுப்புக்கள் தயாரிப்பு நிலையம் ஒன்று தொடங்கப்பட்டும். விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட மகளிருக்காக, 1984-85-ல் மேற்கொண்டும் ஒரு பணி இல்லம் தொடங்கப்படும்.

92. வறுமையில் உழலும் உடல் ஊனமுற்றோர்க்குத் தேவைப்படும் இன்றியமையாத உதவிகளை ஆராய்ந்து செய்திட தனிப் பரிந்துரைக் குழுக்கள் நாடு தழுவிய அளவில் அமைக்கப்படும். வறுமையில் வாடும் ஆதாரவற்றவர்களாக விளங்கும் முதியோர்களின் சரியான கணக்கு எடுக்கப்பட்டு, அவர்களுக்கு உதவித் தொகை வழங்க முயற்சி மேற்கொள்ளப்படும்.



93. மகளிர் முன்னேற்றத்திற்காகத் தமிழ்நாடு மகளிர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றக் கருதியுள்ளது. ஆறு தொழில்களில் மகளிருக்கான தனிப்பட்ட பிரிவுகள் மூன்று தொழில் பயிற்சிப் பள்ளிகளும், ஒரு பல்தொழிற் பயிற்சிப் பயிலகத்திலும் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## வருவாய் நிர்வாகம் மற்றும் நிலச் சீர்திருத்தம்

94. நடப்பு நிதி ஆண்டில், 1983 டிசம்பர் வரையில், 9029.42 ஏக்கர் பரப்பளவுள்ள சாகுபடி நிலங்கள், நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கப் பட்டன; இதே கால அளவில் 149, 413 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. இவற்றில் 73,224 மனைகள் ஆதி திராவிடர்களுக்கும் 3,767 மனைகள் பழங்குடியினருக்கும் 72,422 மனைகள் ஏனையோருக்கும் வழங்கப்பட்டன.

95. வருவாய் ஆய்வாளருக்கு அலுவலகங்கள்-குடியிருப்புகள் அளிக்கும் திட்டத்தின்கீழ், 958 குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை 609 குடியிருப்புகளுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ஏனைய கட்டிடங்கள் பல்வேறு நிலைகளில் உள்ளன, வட்டாட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சி அலுவலகங்கள் சிலவற்றுக்காக, 1984-85-ல் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

96. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைப் பதிவேடுகள் சட்டத்தின்கீழ், 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று உள்ளவாறு 439,464 குத்தகைக்காரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந் நிலங்களின் மொத்தப் பரப்பளவு 636,513 ஏக்கர் ஆகும். பதிவேட்டு அலுவலருக்கு உதவுவதற்காக வட்ட அளவில் அலுவல் சார்பற்ற ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது.

97. உபரி நில ஒப்படைதாரர்களுக்கு நிதி உதவி அளிக்கும் மத்திய அரசுத் திட்டத்தின்கீழ், 1983-84 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 10 லட்சத்தில் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்று வரை ரூ. 7,00,873 செலவிடப்பட்டுள்ளது.

## காவல் துறையும் நீதிமன்றங்களும்.

98. நடப்பு நிதி ஆண்டில், சட்டம்-ஒழுங்கு நிலைமை, நல்ல முறையில், மன நிறைவளிப்பதாக உள்ளது. காவல் துறையின் செயல் திறனுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். காவல் துறையை நவீனமயமாக்கவும், வலுப்

படுத்தவும், காவலர்களின் நலனைப் பேணிக் காக்கவும், மாநில அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. காவலர்களின் நலத் திட்டத்தின்கீழ், ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டு அவர்களுக்கு மலிவு விலையில் அளிக்கப்பட்டுவரும் இன்றியமையாப் பொருட்களான அரிசி, எண்ணெய், கோதுமை, சர்க்கரை முதலியவற்றின் மான்ய அளவைப் பெருக்கக் கருதப்பட்டுள்ளது. அவர்களுக்குச் சீருடை துண்கள் வழங்குதவற்காக ரூ. 62.50 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

99. மீ உயர்அலைக் கோபுரங்கள் அமைப்பது, மீ உயர் அலைச் சாதனங்கள் வாங்குவது ஆகியவற்றின் மூலம் காவல் துறையின் தகவல் போக்குவரத்து வசதி மேம்படுத்தப்படும். இத்துடன், வழக்கமான பணிகளும், குடியிருப்புக் கட்டிடங்கள். அலுவலகங்கள் கட்டுதல் தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்படும்.

100. நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளைத் துரிதமாக விசாரித்துத் தீர்ப்பு வழங்க, அரசு புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்தவும் கருதியுள்ளது.

## இருபது அம்சத் திட்டம்.

101. நம் மாநிலம் அனைத்து நிலைகளிலும் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக, மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காகப் பாரதப் பிரதமர் அறிவித்துள்ள புதிய இருபது அம்சத் திட்டத்திற்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதிலும், இத் திட்ட இலக்கை எய்துவதிலும் குறிப்பாக இத் திட்டத்தில் உள்ள வருவாய் திரட்டும் பொருளாதார நடவடிக்கைகளில் இலக்கை எய்துவதிலும் தொடக்கத்திலிருந்து தமிழ்நாடு பிற மாநிலங்களைவிட முன்னணியில் இருந்து வந்துள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தின்கீழ் சாதனை புரிந்ததில், தமிழ்நாடு, பிற மாநிலங்களைவிட முதன்மையாக விளங்கியது. இவ்வகையில், மாநிலங்களின் சாதனையைத் தீர்மானிக்க திட்டக்குழு தெரிந்தெடுத்துக் கொண்ட 16 அம்சங்களில் 14 அம்சங்களின் கீழ் சாதனை புரிந்தமையில் தமிழ்நாடு முதன்மையாகத் திகழ்ந்தது. ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு ஆற்றியுள்ள பணி, சாதனை இலக்கில், 120.2 சதவீதமாக இருந்தது. கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டத்தைச் செயல்படுத்தியதில், இம்மாநிலத்தின் சாதனை, மிக உயர்ந்து 242.2 சதவீதமாக இருந்தது. 1984 சனவரி திங்கள் இறுதிவரை தமிழ்நாடு, பின்வரும் துறைகளில் 80 சதவீதத்திற்கும் அதிகமாக இலக்கை எய்தியுள்ளது. அவை யாவன ; கிராமப் வேலைவாய்ப்பு தேசிய திட்டம் (83,5 சதவீதம்) ; வழங்கப்



பட்ட உபரி நிலம் (92.7 சதவீதம்); மறுவாழ்வு அளிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் (158 சதவீதம்); பயனடைந்த ஆதி திராவிடர் குடும்பங்கள் (96.6 சதவீதம்); வழங்கப்பட்ட வீட்டு மனைகள் (112 சதவீதம்); உதவி அளிக்கப்பட்ட குடிசைப் பகுதி மக்கள் தொகை (88.4 சதவீதம்); நடப்பட்ட மரங்கள் (86 சதவீதம்); நிறுவப்பட்ட கரிம வாயுத் தொழிற்சாலைகள் (110.6 சதவீதம்); கருத்தடை அறுவை சிகிச்சை (94.7 சதவீதம்); கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவிப்பதிலும் கருத்தடை அறுவை சிகிச்சை எண்ணிக்கையிலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளது. வீட்டு மனைகள் வழங்குவதிலும் கரிம வாயு தொழிற்சாலைகள் அமைப்பதிலும் தமிழ்நாடு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி விட்டது. மத்தியத் திட்டக் குழு, 1984 சனவரியில் செய்த ஆய்வில் தமிழ்நாட்டின் சாதனையை 80 சதவீதத்திற்கு மேற்பட்ட சாதனை புரிந்த தொகுதியில் சேர்த்துள்ளது. இடைவிடாது இத்தகைய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதனால் நடப்பு ஆண்டிலும் இம் மாநிலம் முன்னணியிலேயே இருந்து வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

102. ஓர் ஆண்டில், நாள்தோறும் மாநிலம் முழுவதுமாக சுமார் 65 இலட்சம் குழந்தைகளுக்கு உணவளிக்கும் இத் திட்டம் தொடர்ந்து சிறப்பான திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இத் திட்டம், முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கும் 1983 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15 ஆம் நாள் முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை பெறும் சுமார் 1,99,639 பேர் இத் திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றனர். இவர்களில், 43,888 பேர் ஆதரவற்ற விதவைகள், 14,471 பேர் உடலூனமுற்றோர், மற்றும் 30,000 பேர் வேளாண்மைத் தொழிலாளர்கள். தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல நிதியிலிருந்து முதியோர் உதவித் தொகை பெறுகின்ற முன்னாள் படைவீரர்களுக்கும் இத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

103. இத் திட்டம் கொண்டுவரப்பட்டதன் பயனாக, பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை பொதுவாகப் பெருகியுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 2.63 இலட்சம் சிறார்களும், 1983-84 ஆம் ஆண்டில் 3.82 இலட்சம் சிறார்களும் பள்ளிகளில் அதிகமாகச் சேர்ந்துள்ளனர். இத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருமுன், பள்ளிகளில் ஆண்டொன்றுக்கு கூடுதலாகச் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை சராசரியாக 1.75 லட்சம்தான் இருந்தது. கூடுதலாகச் சேர்க்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை கணிசமாக கூடியதிலிருந்து

இத் திட்டத்தின் நன்மைகள் தெளிவாகத் தெரிகின்றன. மேலும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ், குழந்தைகள் நலனைப் பேணும் வகையில் விரிவான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது. மருத்துவப் பணியாளர்கள் சிறார்களின் நலன் தொடர்பான அட்டைகளைப் பராமரிப்பதுடன், சிறார் நல மையங்களையும் முறையாகப் பார்வையிடுகின்றனர். அம்மைப்பால் குத்தும் திட்டமும், நோய்த் தடுப்பு ஊசி போடும் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட சிறார் நல மையங்களில் மாதிரி ஆய்வு ஒன்று நடத்தப்பட்டதில், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் சிறார்களின் உயரம், எடை, பொதுவான உடல்நலன் கூடியிருப்பது தெரிய வந்துள்ளது.

104. இவ்வாறாக, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களான சிறார்களின் கல்வி, சுகாதாரம், பிறநலன் ஆகியவை நிறைவடைந்து வருகின்றன. வரும் ஆண்டுகளில் இத்திட்டம் தொடர்ந்து முனைப்பாகச் செயல்படுத்தப்படும்.

## வேலைவாய்ப்பு.

105. வேலையில்லாப் பிரச்சினையைப் போக்குவதில் அரசு உரிய கவனம் செலுத்தி வருகிறது. இப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேலை வாய்ப்புப் பணிகள் துறை ஏற்படுத்தப்பட்டு தாற்காலிகமான மற்றும் நிலையான தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மோசமான பருவநிலைகளால் பாதிக்கப்பட்ட நிலமற்ற உழவர்கள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோரிடையே நிலவிய வேலைவாய்ப்பில்லா பிரச்சினைக்குத் தீர்வு காண, வறட்சித் துயர் தணிப்பு நடவடிக்கைகளும், கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசியத் திட்டப் பணிகளும், படித்தவர்களுக்கிடையே நிலவிய வேலை வாய்ப்பில்லா பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பல்வேறு திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

106. மத்திய அரசு உதவியுடன் செயலாக்கப்படும் திட்டமாகிய கிராம வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்தின்கீழ், 1979-80 முதல் 1984 சனவரி முடிய உள்ள கால அளவில், 171,010 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 36.85 கோடியாகும். 1984-85 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 42.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் சிறப்புத் தன்மை என்னவென்றால் வேலையற்ற ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்ப



துடன் கிராம மக்களுக்கு இன்றியமையாதத் தேவைகளான சாலைகள், சமுதாயக்கூடங்கள், பள்ளிக் கட்டிடங்கள் போன்ற வசதிகளும் இதனால் உருவாகியுள்ளன.

107. வேலை தேடுவோருக்கு மேலும் சிறந்த பணி வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கம்பியூட்டர் முறையைக் கொண்டுவர அரசு கருதியுள்ளது. இத் திட்டம், படிப்படியாகச் செயல்படுத்தப்படும். சென்னையிலுள்ள ஐந்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 1984-85 ஆம் ஆண்டு ரூ. 6 இலட்சம் செலவில் கம்பியூட்டர் முறை செயல்படுத்தப்படும்.

108. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1984 சனவரித் திங்கள் முடிய 173,431 பேர்களுக்கு நன்மை பயக்கும் வகையில், ரூ. 54.51 கோடி மானிய உதவித் தொகையாகவும் கடன் வழங்கும் நிறுவனங்கள் அளிக்கும் கடன் தொகையாகவும் திரட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 61,933 ஆதி திராவிடர்களும், பழங்குடி மக்களும் பயனடைந்துள்ளனர். இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் 1984-85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிலைநாட்டப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

109. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் வறுமைக்கோட்டைக் கடக்க இயலும் வகையில் ஏழை எளிய மக்களுக்குக் கடன் உதவி வழங்க, அரசு 1983 ஆம் ஆண்டில் நிறுவன நிதித் துறை என்ற தனிப்பட்ட துறையை ஏற்படுத்தியுள்ளது. இது ஏற்படுத்தப்பட்ட இரண்டு திங்களுக்குள் 170,564 பேர்களுக்கு ரூ. 30.16 கோடி அளவிற்குக் கடன்களும், மான்யமும் வழங்கியுள்ளது. இவர்களில் 56,966 பேர் ஆதி திராவிடர்களாவர். மார்ச் 1984-ல் இத் துறை இந்த மாநிலத்திலுள்ள 175,000 ஏழை எளிய மக்களுக்கு சுமார் ரூ. 40 கோடி வங்கிக் கடன் உதவி வழங்கத் திட்டமிட்டுள்ளது.

## திட்டச் செலவு.

110. மத்தியத் திட்டக் குழு முடிவு செய்த நிதி ஒதுக்கத்திற்கும் மேல் தன் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில், தமிழ்நாடு அரசு தனது பெருமைக்குரிய நிலையைக் காத்து வந்துள்ளது. 1983-84 ஆம் ஆண்டு, மத்தியத் திட்டக் குழு ரூ. 845 கோடிக்கு அனுமதியளித்தது. திருத்த மதிப்பீட்டில் ரூ. 861.87 கோடி செலவாகும் என நாம் எதிர்பார்க்கிறோம். அடுத்த ஆண்டிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ள ரூ. 927 கோடி நிதி ஒதுக்கத்திற்கு மாறாக,

ரூ. 979.22 கோடி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை உருவாக்கியுள்ளோம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை, அது தொடர்பான பணிகள், பாசனம், தொழில், போக்குவரத்து, சாலைகள் போன்ற முக்கியத் துறைகளின் கீழ் ஏற்பளிக்கப்பட்ட திட்டச் செலவிற்கு அதிகமாகவே மாநில அரசு செலவிட்டுள்ளது. வளர்ச்சித் துறைகளுக்கு மாநில அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது என்பது இதிலிருந்து தெரியவரும். தொடர்ந்து இரு முறை வறட்சியும், வெள்ளப் பெருக்கும் ஏற்படாது இருந்திருப்பின், நமது சாதனை மேலும் நல்ல முறையில் அமைந்திருக்கும். குறைந்த அளவு தேவைகள் திட்டத்திலும் மாநில அரசு தொடர்ந்து திட்ட இலக்கை எய்தியுள்ளது; சில நேரங்களில் அத்திட்ட இலக்கையும் தாண்டியுள்ளது. ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் ரூ. 241 கோடி நிதி ஒதுக்கத்திற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்க, இத் திட்டத்திற்கு 1983-84 வரை, மாநில அரசு ரூ. 256 கோடி செலவிட்டது. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய மாநில அரசு எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதை இது காட்டுகிறது. குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட செலவுடன் மாநில அரசு, இத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதைக் கருத்திற்கொண்டு தன்னிறைவுத் திட்டங்களுக்கு ரூ. 207 கோடி செலவிட்டுள்ளது.

### தொழிற் கல்வி.

111. வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு முக்கியமான மனித ஆற்றலைப் பெறச் செய்யும் பொருட்டு கல்வி முறையைச் சீரமைப்பது குறித்து அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது. ஆடவருக்கும், மகளிருக்கும் தேவையான ஆற்றலைக் கல்வி கொடுக்க வேண்டும்; அப்போதுதான், அவர்கள் தங்களுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் தொழிலை அல்லது சுய வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ள முடியும். இந்தக் குறிக்கோளை அடைய பள்ளியின் எல்லா நிலைகளிலும் கல்வியை வாழ்க்கைத் தொழிலுக்குகந்ததாக ஆக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரும் நிதித் தேவையைக் கருத்திற்கொண்டு, கல்வியின் வெவ்வேறு நிலைகளில் மாணவர்களுக்குச் சிறந்த ஆற்றலை அளிக்க வகை செய்வதுடன். கல்வி முறையை மாற்றியமைக்கும் பணியை மேற்கொள்ள எட்டாவது நிதிக் குழுவிடம் நிதி உதவியை நாம் கேட்டுள்ளோம். அப்போதுதான், வட்டாரங்களுக்கும், பகுதிகளுக்குமான வேலைவாய்ப்பு வசதிகள் முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்ளப் படலாம். பாடத் திட்டத்தில் தக்க மாறுதல்களைச் செய்து, சீரமைப்பது உட்பட இதற்கான



விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. 1985-86-லிருந்து படிப்படியாகச் செயலுக்குக் கொண்டு வருவதற்காக, வரும் ஆண்டில் இந்திய அரசுக்கு அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

### அரசுப் பணியாளர் நலன்.

112. அரசு மேற்கொண்ட பல்வேறு பணியாளர் நல நடவடிக்கைகள் பற்றி ஏற்கெனவே ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. ஓய்வுகாலப் பயனை உயர்த்துவது பணியாளர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளில் ஒன்றாகும். அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 என்ற வீதத்தில், அத்தொகை கூட்டு வட்டியுடன் ரூ. 5,000 ஆகச் சேருகிற வரையில் செலுத்த வேண்டுமென்றும், பணியாளர் ஓய்வு பெறும்பொழுது அவர்கள் செலுத்தியுள்ள தொகையுடன் அரசு ரூ. 5,000 கொடுக்கும் என்றும் இதற்காக வகை செய்யும் திட்டம் ஒன்று, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்கு வரும் என்றும் அரசு அறிவித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், அரசுப் பணியாளர்கள் திங்கள் ஒன்றுக்கு செலுத்தும் ரூ. 20. அதற்கான வட்டித் தொகையுடன் ரூ. 5,000 சேரும் வரையில் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டும், இத் தொகை சேர்ந்தவுடன் பணியாளர்கள் தொகை செலுத்த வேண்டியதில்லை. இக்கணக்கின்படி பார்த்தால் சுமார் ரூபாய் 3,000-க்குத்தான் எந்த அரசு ஊழியரும் இத்திட்டத்தில் முதலீடு செய்ய நேரிடும். வருங்கால வைப்பு நிதிக்குக் கொடுக்கப்படும் அதே கூட்டு வட்டிக்குச் சமமாக இத்தொகைக்கும் வட்டி கொடுக்கப்படும். அரசுப் பணியாளர் இயல்பாக ஓய்வு பெறுகையில் அரசு கொடுக்கும் ரூ. 5,000 இத்தொகையுடன் சேர்த்துக் கொடுக்கப்படும். இவ்வாறாக. 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளுக்குப் பின்னர், அரசுப் பணியாளர்கள் இயல்பாக ஓய்வு பெறுகையில், நிர்ணயித்த ரூ. 5,000-மும், அவர்கள் செலுத்திய தொகையையும், அதற்குரிய கூட்டு வட்டியுடன் சேர்த்துப் பெறுவர். அரசுப் பணியாளர்கள் செலுத்தும் தொகை அதற்குரிய கூட்டு வட்டியுடன் ரூ. 5,000 ஆக சேரும் நாளும், அவர்கள் பணியிலிருந்து இயல்பாக ஓய்வு பெறும் நாளும் ஒன்றாக இருக்கும் நேர்வில், அவர்கள் ரூ. 10,000 பெறுவர். அந்த நாளுக்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்கள் அதற்கேற்ப அதிகமான தொகை பெறுவர். புதிதாகப் பணியில் சேரும் ஒருவர் அவர் எத்தனை ஆண்டுகள் பணியாற்றியுள்ளாரோ அதைப் பொறுத்து அத் தொகை ரூ. 30,000-க்கும் மேற்படலாம். அரசுப் பணியாளர்களின் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து வகுக்கப்பட்ட இத் திட்டம் அரசுப் பணியாளர்கள் அனைவரின் ஒருமித்த பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

113. ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருந்ததற்கு இணங்க நான்காவது ஊதிய ஆணைக் குழு (சம்பளக் கமிஷன்) சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஒருவர் தலைமையில் ஒரு நபர் குழுவாக 1984 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 1 ஆம் நாள் அன்றிலிருந்து செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொறுப்பேற்கும் நீதிபதியின் பெயர் பின்னர் அறிவிக்கப்படும்.

### வரவு-செலவுத் திட்ட விவரம்.

114. 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் திட்டங்களுக்கும், திட்டத்தில் சேராத திட்டங்களும் இயன்ற அளவு நிதி ஒதுக்கம் செய்யப் பட்டது. இருந்தபோதிலும், செலவைச் சிக்கனப்படுத்த எல்லா முயற்சி களையும் மேற்கொண்டபோதிலும் நடப்பாண்டில் வருவாய்க் கணக்கில் சுமார் ரூ. 200 கோடி கூடுதல் செலவு ஏற்படலாம் என்பது திருத்த மதிப்பீட்டி லிருந்து தெரிய வருகிறது. கிருஷ்ணா நதி நீர் திட்டத்திற்காக ரூ. 30 கோடி யும், வறட்சி நிவாரணத்திற்காக ரூ. 55 முதல் ரூ. 60 கோடியும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு உதவித் தொகை வழங்க ரூ. 30 கோடியும் ஒதுக்கியதே இக் கூடுதல் செலவிற்கு முக்கிய காரணமாகும். இதைத் தவிர, மைய அரசுத் திட்டங்களின் காரணமாகவும், மற்றத் திட்டச் செலவுகள் பெருகியதன் மூலமாகவும் இந்தப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

### நிதிநிலை.

115. சென்ற ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்துடன் கொடுக்கப்பட்ட 1982-83 திருத்த மதிப்பீட்டில் இறுதிப் பற்றாக்குறை ரூ. 89.02 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 1982-83 ஆம் ஆண்டுக்குரிய இறுதிப் பற்றாக்குறை ரூ. 4.04 கோடியாகவே அமைந்தது. 1983-84 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கின் வரவுகள் ரூ. 1,892.86 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கில் வரவினம் இவ்வாறிருக்க, வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 1,869.33 கோடியாக இருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, வருவாய்க் கணக்கில் ரூ. 23.53 கோடி உபரி இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. மூலதனக் கணக்கில் செலவு ரூ. 186.32 கோடியாகும். பொதுக் கடன் என்பதன் கீழ் ரூ. 148.03 கோடி உபரியாக இருக்குமென்றும் கடன் செலவின்கீழ் நிகரப் பற்றாக் குறை ரூ. 233.86 கோடியாக இருக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்ட கணக்கின்படி தொகு நிதியின்கீழ் ரூ. 248.62 கோடி பற்றாக்குறை இருக்கும். அதே சமயத்தில் பொதுக் கணக்கின்கீழ் ரூ. 124.35 கோடி உபரி எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மொத்தப் பற்றாக்குறை ரூ. 125.27 கோடி



யாகக் குறையும். தொடக்கப் பற்றாக்குறையான ரூ. 4.04 கோடியையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், நடப்பாண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 129.31 கோடியாக இருக்கும்.

116. 1984-85 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்படி, வருவாய்க் கணக்கில் வரவு ரூ. 2,065.43 கோடியாகும். வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 1,946.38 கோடியாகும். இதன்படி வருவாய்க் கணக்கில் ரூ. 119.05 கோடி உபரி இருக்கும். மூலதனச் செலவு ரூ. 178.43 கோடியாக இருக்கு மென்றும், பொதுக்கடன் என்பதன்கீழ் நிகர உபரி ரூ. 145.76 கோடியாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடன்கள்-முன்பணங்கள் என்பதன் கீழ் நிகரமாக ரூ. 272.92 கோடி பற்றாக்குறை இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. மொத்தத்தில் தொகு நிதியில் ரூ. 186.54 கோடி பற்றாக்குறை இருக்கும். பொதுக் கணக்கில் ரூ. 114.35 கோடி உபரி இருக்கலாம். 1984-85 வரவு-செலவுத் திட்டத்தின்படிக்கான ரூ. 72.19 கோடி பற்றாக்குறையையும் தொடக்கப் பற்றாக்குறையான ரூ. 129.31 கோடியையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் அடுத்த நிதி ஆண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 201.50 கோடியாக இருக்கும்.

117. மாநில அரசின் வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையே பெரிய அளவில் பற்றாக்குறை இருப்பதைக் கருதி, கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான அவசியத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் உணர்ந்து கொள்வர்.

118. கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ஒரு சில இனங்கள் குறித்து நுழைவு வரி விதிக்கக் கருதியது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவில் வைத்திருப்பார்கள். எனினும், சமுதாயத்தின் பல்வேறு பிரிவைச் சேர்ந்த பிரதிநிதிகள் முறையிட்டுக் கொண்டதைக் கருத்தில் கொண்டு வணி கர்கள், பொது மக்கள் ஆகியோரின் நலனைப் பாதிக்காமல் செயலுக்குக் கொண்டுவரக்கூடிய மாற்று வரி ஆதாரங்களை ஆய்ந்து அரசுக்கு அறிவிக்க, அரசு, குழு ஒன்றை நியமித்தது. கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற் காக நுழைவு வரிக்குப் பதிலாகக் கூடுதல் விற்பனை வரியை உயர்த்தலாம் என்று மேற்படி குழுவின் அரசு சார்பற்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித் தனர். எனினும், இவ்வரிச் சுமையை, வணிகர்கள், நுகர்வோர்கள்மீது சுமத்தக்கூடாது என்றுள்ள தடையை எடுக்கவேண்டும் என்று அவர்கள் கருத்து தெரிவித்தனர். தமிழ் நாட்டிற்கும், அண்டை மாநிலங்களுக்கும் இடையே தற்போதுள்ள விற்பனை வரியில் கணிசமான அளவு வேறுபாடு

இருக்கும் இனங்களில் எல்லாம், கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் பொருட்டு, தமிழ்நாட்டில் அத்தகைய இனங்கள் தொடர்பாக விற்பனை வரியை உயர்த்துவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் குழு கருத்து தெரிவித்துள்ளது. கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான செயற்குறிப்புகளை வகுக்கையில், இக் குழுவின் கருத்துக்களை அரசு கருத்தில் கொண்டுள்ளது. எனினும், தற்போது விதிக்கக் கருதப்பட்டுள்ள கூடுதல் விற்பனை வரி வீதங்கள், வரி விதிக்கத் தக்க விற்பனைத் தொகை ரூ. 3 இலட்சத்திற்கு மேற்பட்டால்தான் விதிக்கப்படலாம் என்பதைக் கருத்தில் கொண்டு, இத்தகைய கூடுதல் வரி வீதங்கள், வணிக சமுதாயத்திற்குச் சுமையாக இருக்காது என்றும் எனவே. வரிச்சுமையை, நுகர்வோரிடமிருந்து வசூலிக்க வேண்டியதில்லை என்று கருதப்படுகிறது.

119. எனவே, கீழ்க்கண்ட வரி விதிப்புகளைச் செயலுக்குக் கொண்டுவரக் கருதப்படுகிறது—

(1) ஆழ்ந்த ஆலோசனைக்குப் பின்னர், கூடுதல் விற்பனை வரி வீதங்களை 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு கீழ்க் குறிப்பிட்டவாறு உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது:—

(அ) ரூபாய் 3 இலட்சத்திற்குமேல் ரூ. 5 இலட்சம் வரையுள்ள வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0.4 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதமாக உயர்த்துதல்.

(ஆ) ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் ரூ. 7 இலட்சம் வரை வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரிவீதத்தை 0.5 சதவீதத்திலிருந்து 0.7 சதவீதமாக உயர்த்துதல்.

(இ) ரூ. 7 இலட்சத்திற்குமேல் ரூ. 10 இலட்சம் வரையுள்ள வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0.6 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக உயர்த்துதல்.

(ஈ) ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0.7 சதவீதத்திலிருந்து 1.25 சதவீதமாக உயர்த்துதல்.



வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மேற்குறிப்பிட்ட வரி விதிப்புகள் ஏற்ற விதத்தில் அமைந்துள்ளதால், வணிகர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் வரியினால் அவர்களுக்கு அதிகச் சுமை ஏற்படாது. இத்தகைய வரி விதிப்புகளினால் கூடுதலாக வருவாய் ரூ. 20.25 கோடி அளவிற்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) தற்போது தமிழ்நாட்டில் ஒருசில பொருள்களின்மீது விதிக்கப்படும் விற்பனை வரி வீதம், அண்டைய மாநிலங்களான கருநாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களில் விதிக்கப்படும் வரி வீதங்களைவிடக் குறைவாக உள்ளது. எனினும், இத்தகைய பொருள்களில் ஒரு சிலவற்றின் மீது, குறிப்பாகப் பெட்ரோலியம் பொருள்கள் மீது மட்டுமே, விற்பனை வரி வீதத்தை உயர்த்தக் கருதப்படுகிறது. இவ்வாறு உயர்த்தப்படும் விற்பனை வரிவீதங்கள் அறிவிக்கை நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். இதன் விவரங்கள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| (அ) பெட்ரோல் | 11 சதவீதத்திலிருந்து உயர்த்தப்படுகிறது. | 14 சதவீதமாக |
| (ஆ) விமான டர்பைன் எண்ணெய். | 7 சதவீதத்திலிருந்து உயர்த்தப்படுகிறது. | 10 சதவீதமாக |
| (இ) உயர்வேக டீசல் எண்ணெய். | 11 சதவீதத்திலிருந்து உயர்த்தப்படுகிறது. | 14 சதவீதமாக |
| (ஈ) இலகுவான டீசல் எண்ணெய். | 11 சதவீதத்திலிருந்து உயர்த்தப்படுகிறது. | 14 சதவீதமாக |
| (உ) மசகு எண்ணெய் வகையறா. | 8 சதவீதத்திலிருந்து உயர்த்தப்படுகிறது. | 10 சதவீதமாக |
| (ஊ) கனிம எண்ணெய் | 8 சதவீதத்திலிருந்து உயர்த்தப்படுகிறது. | 10 சதவீதமாக |

இவ்வரி விதிப்புகளினால், கூடுதலாக ரூ. 27 கோடி வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(3) கோன், ஹோசைரி நூல் நீங்கலாக பருத்தி நூல் விற்பனைமீது விதிக்கப்படும் விற்பனை வரியை 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 5 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 3

120. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள 46 வது திருத்தத்தினால், மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தவணைக் கொள்முதல், பணி ஒப்பந்தக் குத்தகை போன்ற நடவடிக்கைகள் மீதும் விற்பனை வரி விதிக்க மாநில அரசுக்கு இயலும் வகையில் அதிகாரம் அளிக்கும் சட்ட முன்வடிவு ஒன்று இச்சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படுகிறது. மேலும். சிப்பம் செய்யப்படும் பொருள்களின்மீது விதிக்கப்படும் வீதங்களிலேயே சிப்பப் பொருள்களுக்கும் சிப்பக் கட்டணங்களுக்கும் வரி விதிக்கவும் வகை செய்யும் சட்ட முன்வடிவு ஒன்றும் இச்சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுகிறது. இந் நடவடிக்கைகளினால் 5 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

121. கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான இத்தகைய நடவடிக்கைகளினால் மொத்தம் ரூ. 57.25 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

122. அதே சமயத்தில், கீழ்க்காணும் வரிச் சலுகைகளையும் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர்:—

(அ) தற்போது ரூ. 50,000 மொத்த விற்பனைத் தொகை வரையில், பல்முனை விற்பனை வரி விதிப்பினின்றும் விலக்கு அளிக்கப்படுகிறது. இத்தகைய விலக்கு அளிப்பதற்கான வரம்பை ரூ. 1,00,000 ஆக உயர்த்த தற்போது கருதப்படுகிறது. இதனால், சுமார் 20,000 வணிகர்கள் பயனடைவர் என்று பார்க்கப்படுகிறது. இதனால் ரூ. 3 கோடி அளவில் வருவாய் இழப்பு ஏற்படும்.

(ஆ) ரூபாய் 30,000 க்குக் குறையாத மொத்த விற்பனைத் தொகையைக் கொண்ட வணிகர்கள் தமிழ்நாடு பொது விற்பனைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று தற்போது வகை செய்யப்பட்டுள்ளது. இந்த மொத்த விற்பனைத் தொகையை ரூ. 50,000 ஆக உயர்த்தத் தற்போது கருதப்பட்டுள்ளது.

(இ) கையினால் தயாரிக்கப்படும் விளையாட்டுப் பொருட்கள், கலைப் பொருட்கள் ஆகியவற்றின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனை மீது விதிக்கப்படும் வரியைப் பொறுத்தவரையில், 4 சதவீத சலுகை வீதத்தை இத்தகைய பொருள்களுக்கும் நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



1984 மார்ச் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(ஈ) கோழித் தீவனம், கால்நடை கலவைத் தீவனம் ஆகியவற்றின்மீது, தற்போது 5 சதவீத பல்முனை விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இதனை மாற்றி இப்பொருள்கள் மீது 5 சதவீத ஒருமுனை விற்பனை வரியை விதிக்க தற்போது கருதப்பட்டுள்ளது. இதனால் ரூ. 25 இலட்சம் வரையில் வருவாய் இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) கனரக மோட்டார் வண்டிகளின் அடிச் சட்டங்கள் மீது அண்டை மாநிலங்களான புதுச்சேரி, கருநாடகம் ஆகிய மாநிலங்களில் விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளதால், இத்தகைய கனரக மோட்டார் வண்டிகளின் அடிச் சட்டங்கள் மீதான விற்பனை வரி வீதத்தை, இத்தகைய அடிச்சட்டங்கள் ஒப்படை விற்பனை அடிப்படையில் விற்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, 9 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கக் கருதப்பட்டுள்ளது.

123. மேற்குறிப்பிட்ட வரிச் சலுகைகளினால், ரூ. 3.25 கோடி அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது. எனவே, தற்போது, வரி விதிப்பு நடவடிக்கைகளின் மூலம் கூடுதலாகக் கிடைக்கக்கூடிய நிகர வருவாய் ரூ. 54 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய நடவடிக்கைகளின் பலனாக அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூ. 1,47.50 கோடியாகக் குறையும்.

124. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் பலனாக எல்லா வகையிலும் சிறார்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மை பற்றி நான் எடுத்து விளக்கி உள்ளேன். சிறுவர்கள் தங்களது வாழ்க்கையின் முக்கியமான பருவதில் பட்டினிக் கொடுமையிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பது முதல்வரின் உன்னதமான நோக்கமாகும். அப்போதுதான் அவர்கள் கல்வி பயில்வதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகும். எனவே, நடப்பாண்டில், அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளாகிய செப்டம்பர் 15 ஆம் நாளிலிருந்து குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை இம்மாநிலத்திலுள்ள எல்லாப் பள்ளிகளிலும் 10—16 வயது வரையுள்ள மாணவர்களுக்கு நீட்டிக்க அரசு முடிவு செய்திருப்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய சத்துணவு அவர்களுக்கு ஆண்டில் பள்ளி நாட்கள் அனைத்திலும் கிடைக்கும். சத்துணவுத் திட்டத்தை இவ்வாறு நீட்டித்த பிறகு, தமிழ் நாட்டிலுள்ள சிறுவர்களும் சிறுமியர்களும் பள்ளி செல்லத் தொடங்கும் நிலைக்கு முன்பிலிருந்து பள்ளிக் கல்வியை முடிக்கும் நிலை வரை இத் திட்டத்தின் பயனை அவர்கள் பெறுவர். இத் திட்டம் நம் மாநிலத்தின் மனித வளத்தில் செய்யப்படும் கணிசமான முதலீடாகும். இத் திட்டத்தினால், வரும் ஆண்டில் ரூ. 20 கோடி அளவிற்குக் கூடுதல் செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இச் செலவுப் பொறுப்பையும் கணக்கில் கொண்டால், ஆண்டு இறுதியில் நிகரப் பற்றாக்குறை ரூ. 167.50 கோடியாக இருக்கும். பொருளாதாரத்தின்

பல்வேறு வளர்ச்சித் துறைகளில் எதிர்பார்க்கப்படுகிற மேம்பாடும், திட்டம் சாராச் செலவினங்களில் கண்டிப்பான சிக்கன முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய சேமிப்பும் இப்பற்றாக் குறையைச் சரிக்கட்ட நமக்கு உதவியாக இருக்கும் என நாம் நம்புகிறோம். இயற்கைச் சீற்றங்களினால், நடப்பாண்டில் நமது மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாட்டை இந்திய அரசு நன்கு புரிந்து கொண்டு நமக்குப் பெருமளவுக்கு உதவி செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம் என்பதை நான் ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளேன்.

### உழவுத் தொழிலாளர்க்குக் காப்புறுதித் திட்டம்.

125. நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள். சொற்ப நிலமுள்ள உழவர்கள் போன்ற சமுதாயத்தின் நலனுக்காக உழைக்கும் இந்தப் பிரிவினர்க்குப் பாதுகாப்பும் காப்புறுதி திட்டத்தின்கீழ் நன்மையும் அளிப்பது அவசியம். இயற்கைச் சீற்றங்கள் நேரிடும்போது இவர்கள் கையறு நிலையில் அகப்பட்டுத் தவிக்கின்றனர். மாநில அரசு அவ்வப்போது இவர்களுக்கு அளிக்கும் வேலைவாய்ப்புத் திட்டங்களினாலும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் இவர்களுக்கு அளிக்கும் சலுகைகளினாலும் ஏற்படக்கூடிய நன்மை, இயற்கைச் சீற்றங்களினால் அறவே பயனற்றுப் போய்விடுகிறது. இன்றியமையாப் பொருள்களைப் பொதுப் பங்கீட்டு முறையின் மூலம் பொது மக்களுக்கு அளித்தல், அரிசி போன்றவற்றை குறைந்த விலைக்கு இவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்தல், முதியோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கான உதவித் தொகைத் திட்டம் ஆகிய நடவடிக்கைகளையும், சத்துணவுத் திட்டத்தை முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வருபவர்களுக்கும் கிடைக்கும்படிச் செய்ய அண்மையில் அறிவிக்கப்பட்ட திட்டம், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேட்டி, சேலை ஆகியவற்றை அளிக்கும் திட்டம் போன்ற பல்வேறு வகை உதவித் திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த அரசு பதவி ஏற்குமுன் தேர்தலின்போது உறுதியளித்தது போல் பயிர்க் காப்புறுதித் திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது உழவர்களுக்கும், உழவுத் தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைக்குப் பாதுகாப்பளிக்கும் இந்தத் திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இந்தத் திட்டம் அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

126. நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்காகவும், சிறு உழவர்கள். சொற்ப நிலமுள்ள உழவர்கள் போன்ற நலிந்த பிரிவினர்களுக்காகவும். தொழிலாளர் நலத் துறையில் ஒரு தனி பிரிவு ஏற்படுத்தப்படும். அதில் ஒவ்வொரு விவசாயத் தொழிலாளரும் சிறு உழவர்களும் தகவில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். வட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப்



பார்வையின்கீழ் ஆங்காங்கே உட்பிரிவுகள் நிறுவப்படும். வெள்ளம், வறட்சி போன்றவைகளால் ஏற்படும் இழப்பை உறுப்பினர்களுக்கு ஈடு கட்டிப் பாதுகாப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல் தொழில் செய்யும்போது ஏற்படும் உயிர் இழப்பிற்கு குடும்ப நிலைக்கு ஏற்ப குறைந்தது ரூ. 5,000 முதல் ரூபாய் 10.000 வரை உதவி அளிக்கப்படும். உறுப்பினர் ஆகும் நபர்களை ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் தமிழக அரசே பதிவு செய்ய ஏற்பாடு செய்து, அதற்குத் தேவையான சந்தாத் தொகையில் ஒரு பங்கை அரசே ஏற்கும் என்றும் கூற விரும்புகிறேன். ஆகவே எதிர்பாராத இழப்புக்கள் நேரிடும் போது இவர்களுக்கு, காப்புறுதிக் கழகத்தின் மூலமாகவும், எந்த அளவிற்குச் சட்டப்படி முடியுமோ அந்த அளவுக்கு அரசின் நேரடி ஈடுபாட்டின் மூலமாகவும் தேவைகளை அனுசரித்து உதவி செய்ய அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இச் சிறப்புத் திட்டத்திற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 கோடி ஒதுக்கப்படும்.

தேர்தல் அறிக்கையில் பயிர்ப் பாதுகாப்பை இவ்வரசு மேற்கொள்ளுமென்று வாக்குறுதி அளித்தோம். அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இப்போது தேர்தலில் சொல்லாத ஆனால் மிகவும் அவசியமான, உழைக்கும் உழவர்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில், இத் திட்டத்தை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்த இருக்கிறோம்.

தலைவர் அவர்களே!

127. தொடர்ந்து நடைபோட்டுச் செல்லும் அரிமா, ஓரிடத்தில் நின்று. தான் ஏறுநடை போட்டு வந்த தொலைவைத் திரும்பிப் பார்த்து, தான் செல்ல வேண்டிய தொலைவை ஏறெடுத்துப் பார்க்குமாம். அதுபோல, இந்த நிதிநிலை அறிக்கை, சென்ற கால நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டும் பணியையும் எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி எடுத்துக்கூறும் பணியையும் செய்கின்றது.

128. தமிழகம் எல்லா வகைகளிலும் செழித்து ஓங்க வேண்டும், தமிழ் மக்கள் எல்லா வழிகளிலும் சிறப்புற்றுத் திகழ வேண்டும் என்பதை எண்ணத்தில் கொண்டு, இதுகாறும் மேற்கொண்ட நற்பணிகள் பற்றியும். 1984-85 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் புதிய பணிகள் பற்றியும் ஓரளவுக்குக் கோடிட்டுக் காட்டினேன்.

129. இந்த நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொள்ள இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள். ஆன்ற அறிவோடும், ஆழ்ந்த சிந்தனையோடும், பரந்த நோக்கத்தோடும், தூய எண்ணத்தோடும், பாங்கான பண்போடும் எடுத்துரைக்கும் கருத்துக்கள். நாட்டை நல்வழிப்படுத்தவும், மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவும் பெரிதும் பயன்படும் என்று எதிர்பார்க்கிறேன் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும். மக்களாட்சி மரபுகளுக்கு மதிப்பளித்து, அவையின் கட்டுப்பாட்டைக் காத்து, கண்ணியம் போற்றி, கடமை

யாற்றி அவையின் புகழையும், பெருமையையும் நிலை நாட்ட, முழு ஆதரவையும். ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று விழைந்து கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் உவந்து அளிக்கின்ற உறுதுணையான ஆதரவு, இருந்திடும் நலிவுகளையெல்லாம் போக்கிடவும், விரும்பிடும் நலங்களையெல்லாம் எய்திடவும் பெரிதும் பயன்படும் என்று உறுதிகொள்கிறேன்.

130. இந்த நிதி நிலை அறிக்கையை உருவாக்கிட எனக்குச் சிறப்பான உதவியையும், செம்மையான ஒத்துழைப்பையும் தந்த நிதித் துறைச் செயலாளர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவருடன் ஒருங்கிணைந்திருந்து அரும்பணியாற்றிய அதிகாரிகள்—அலுவலாளர் ஆகியோர்க்கும். அரசின் பல்வேறு துறையினர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1984-85 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அன்புடன் ஏற்குமாறு அவையினரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் (செவ்வாய்க்கிழமை) 6—3—1984 அன்று காலை 9-30 மணிக்குக் கூடும்.

5—3—1984 அன்று கூட்டம் இல்லை.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4-37)

## 2. அவையில் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

இல்லை.

### ஆ. அறிக்கைகள். அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

23. 1984-85 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை அவை முன் வைத்து நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

24. 1984-85 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

25. 1984-85 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).



26. 1984-85 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் நிதி நிலை விவரம் (வரவு-செலவுத் திட்டம்) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

27. நிதி நிலைக் குறிப்பு 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

28. நிலைக் குறிப்பின் இணைப்புகள் 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

29. 1984-85 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி II திட்டங்கள்) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

30. ஆண்டுத் திட்டம் 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

31. 1984-85 ஆம் ஆண்டின் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

32. பதவிகள்-சம்பள விதங்கள் பற்றிய விவர அறிக்கை, 1984-85 (ஆங்கிலம்).

33. 1984-85 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

34. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 37—சாலைகளும் பாலங்களும், 52—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்து மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி பற்றிய விவரங்கள் (ஆங்கிலம்).

(*a*) whether it is a fact that erstwhile Secretarial Assistants are eligible for incentive increments for acquiring M.A. or M.Ed. qualifications ; and

(*b*) if so, the reasons for not extending this privilege to the erstwhile bifurcated staff in Agriculture Section ?



1984 மார்ச் 6]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) முன்னர் செக்ரடேரியல் பாட ஆசிரியர்களுக்கு எம்.ஏ. பட்டம் பெற்றால் மட்டும் அதற்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வு தரப்பட்டு வந்தது. எம்.எட். பட்டத்திற்கு அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு தரப்பட்டு வரவில்லை. தற்பொழுது 5—9—1983-க்குப் பின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையிலிருந்து வெளியான அனைத்துத் துறைகளுக்கும் பொதுவான அரசாணை (நிலை) எண் 843, நாள் 5—9—1983-ன்படி ஊக்க ஊதிய உயர்வுத் திட்டங்கள் அனைத்திற்கும் பதிலாக ஒட்டுமொத்தத் தொகைகளே தரப்பட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கேற்ப பள்ளி ஆசிரியர்களில் பல்வேறு நிலையினரில் உயர்படிப்புகளுக்குத் தரக்கூடிய ஒட்டுமொத்தத் தொகையை நிர்ணயித்து அரசாணையை விரைவில் கல்வித் துறை வெளியிடவிருக்கிறது. செக்ரடேரியல் பாட ஆசிரியர்களின் பல்வேறு உயர் படிப்புகளுக்கும் உரிய தொகை நிர்ணயிக்கப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வி போட அவ்வளவுக்கும் டாக்டர் சனார்த்தனம்தான் என்பதை நான் முடிவு கட்டி விட்டேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, யாரும் இல்லாததால் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதனாலே எல்லாவற்றுக்கும் கேள்வி கேட்க வேண்டிய அவசியமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மைப் பிரிவிலிருந்த அவர்களுக்கும் சலுகை வழங்கப்பட்டிருக்கிறதா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, செக்ரடேரியல் பாட ஆசிரியர் மேல்நிலைப் பள்ளி வகுப்பு அமுலாவதற்கு முன்பு உயர்நிலைப் பள்ளிகளில் கற்றுத் தரப்பட்டுவந்த இரு முனைப் பாடங்களில் ஒன்றாகிய செக்ரடேரியல் பாடத்தைக் கற்றுத் தந்தனர். அவர்களுக்குத்தான் இந்தச் சலுகை என்று சொல்லப்பட்டது. அந்த இருமுனைப் பாடங்களிலே இருந்து வந்த தோட்ட ஆசிரியர்களுக்கும் அது பொருந்தும்.

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அனைத்து ஆசிரியர்களுக்குமே ஒட்டுமொத்தமாக ஒரு தொகையைக் கொடுக்க 5—1—1983-லிருந்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள்.

ஆனால் அனைத்து ஆசிரியர்களும் மீண்டும் தங்களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பல்வேறு ஆசிரியர் சங்கங்களும் தங்களுக்கு மட்டும் தந்து வந்த ஊக்க ஊதிய உயர்வை, இந்தப் பொதுவான உத்தரவுக்குப் பிறகும் தொடர்ந்து தரவேண்டுமென்று கேட்டு வருகிறார்கள். ஆக அவர்களுடைய கோரிக்கைகளை அரசு பரிசீலனையில் எடுத்துக்கொள்ளும்.

### மத்திய செகண்டரி கல்விக் கழகத்துடன் இணைந்த பள்ளிகள்

*54 **வினா.**—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய செகண்டரி கல்விக் கழகத்தின் (Central Boara of Secondary Education) அனுமதியோடு, தமிழ் நாட்டில் நடைபெறும் உயர்நிலைப் பள்ளிகளைக் கண்காணிக்க, மாநில அரசு ஏற்பாடு ஏதேனும் செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(உ) அப்பள்ளிகளில் நடைபெறும் தவறுகளை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(எ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, சென்ட்ரல் போர்ட் ஆஃப் செகண்டரி எஜுகேஷன் நிர்வாகத்தின்கீழ் நடைபெறும் கல்வி நிறுவனங்களின் கல்விக் கொள்கைகளும் தமிழ் நாட்டில் உள்ள கல்விக் கொள்கைகளுக்கு இணையாக இருக்கின்றனவா ? அப்படி இணையாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்த நமக்கு வாய்ப்பிருக்கின்றதா ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அவர்களுடைய கல்வித் திட்டத்திற்கும் நம்முடைய கல்வித் திட்டத்திற்கும் கொஞ்சம் வேறுபாடு இருக்கிறது. அதிலே குறிப்பாக அவர்கள் மும்மொழித் திட்டத்தை ஆதரித்து அந்த அடிப்படையிலே அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். பொதுவாக மத்திய அரசிலே வேலை செய்கின்றவர்கள் மாறுதல் பெற்று, பல்வேறு இடங்களுக்குச் செல்கின்றபோது, ஒரே மாதிரியாகக் கல்வி கிடைக்க வேண்டுமென்பதற்காக, பல்வேறு இடங்களிலே மத்திய அரசே பல்வேறு பள்ளிகளை நடத்திவருகின்றது. அதோடு, தனிப்பட்டவர்களும் அத்தகைய கல்வித் திட்டங்களை ஏற்றுக்கொண்டு அதுபோன்ற கல்வி நிறுவனங்களை நிறுவுகின்றார்கள். அவர்களுக்கு 'சென்ட்ரல் போர்ட் ஆஃப் எஜுகேஷன்' தந்திருக்கிறது. அப்படிப்பட்ட கல்விக் கழகங்களும் நடைபெற்று வருகின்றன.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, கேள்விக்கு பதில் கூறும்போது, மத்திய செகண்டரி கல்விக் கழகத்தின் கல்விக் கூடங்கள் அனுமதியோடுதான் நடைபெறுகின்றன என்றும் அதற்கு ஓரளவு கண்காணிப்பு இல்லை என்ற மாதிரியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து அறிகிறேன். தமிழ் நாட்டில் அந்தப் பள்ளிகளிலே நிறைய மாணவர்கள் படிக்கின்றார்கள். அவர்களுக்கு அங்கு சரிவரச் சொல்லிக்கொடுக்கின்றார்களா என்று கண்காணிப்பதில் அரசுக்கு ஒரு பங்கு இருக்கவேண்டாமா ? அப்படி கண்காணிக்க அதிகாரிகள் அதில் ஒரு பங்கு பெற நாம் என் முயற்சி செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிகளைக் கண்காணிக்க வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளவேண்டிய ஒன்று. மத்திய செகண்டரி கல்விக்கழகத்தின் அதிகாரிகளை வைத்திருக்கின்றார்கள். அதை அவர்களே செய்து வருகின்றார்கள். ஆனால் மாநில அரசு அதை கண்காணிக்கின்ற அதிகாரம் இப்போது இல்லை.

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அந்த ஆய்வாளர்கள் அங்கே கணக்கு வழக்குகளைப் பார்ப்பதற்காகத்தான் பொறுப் பேற்றிருக்கின்றார்கள். அந்தப் பள்ளிகளில் மாநில அரசு மற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு அந்தக் கல்விக் கழகத்தின் ஒப்புதலைப் பெற பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகளிலே ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால், அவற்றைத் திருத்துவதற்கான ஒரு நெறிமுறை வகுக்கப்பட்டு அதில் மாநில அரசுக்கும்

பங்கு இருக்க வேண்டுமென்ற அளவுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொல்லிக் கொண்டு வருகிறேன். இப்போது நம்மிடம் புகார்கள் வந்தால், இங்கே இருக்கின்ற அதிகாரிகளை அனுப்புவதன் மூலம் அந்தப் பிரச்சினையை அவர்கள் பரிசீலிப்பதற்கு நடவடிக்கை நாம் எடுத்து வருகிறோம். தம்முடைய மாநில அரசு அதிகாரிகளையே அங்கு அதிகாரிகள் என்ற முறையிலே போட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### புதிதாகத் தொடங்கப்பட்ட உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்

*55 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1981 ஆம் கல்வி ஆண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட அல்லது உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(இ) பொதுமக்களால் விண்ணப்பிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்ட பள்ளிகள் எத்தனை?

(உ) அவை எவை, எவை? அவற்றிற்குரிய காரணங்கள் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ), (இ) மற்றும் (உ) அவை முன் விவர அறிக்கை ஒன்று @ வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, சென்ற கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக பல பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். கல்லூரிப் படிப்பையும் சேர்த்திருக்கிறார்கள். வரும் கல்வி ஆண்டில் அதே அளவிலே மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குகின்ற யோசனை அரசுக்குண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே. பல்வேறு இடங்களில், மேல்நிலைப் பள்ளிகளை அனுமதிக்கவேண்டிய அளவுக்குத் தேவை இருப்பதை அரசு உணர்கின்றது. என்றாலும், இதுவரையிலும் அனுமதிக்கப்பட்ட பள்ளிகளில் போதுமான அளவுக்கு மாணவர்கள் இல்லை என்ற சூழ்நிலை சில பள்ளிகளிலே இருப்பது கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அந்த நிலைமைகளையெல்லாம் பரிசீலித்து, அதற்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு நினைத்துக்கொண்டிருக்கிறது.

---

@ 202-210 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



### Upgrading post of A.E.O.|D.I. of Schools to cadre of Headmaster.

*56 Q.—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru D. Santosham, and Thiru P. R. Thomas): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received from the Tamil Nadu Graduate Teachers' Union, Nagercoil (Reg. No. 19|71) to upgrade the post of Assistant Educational Officers and Deputy Inspectors of Schools to the cadre of Headmaster; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) உதவிக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளித் துணை ஆய்வர் பதவிகளை தலைமையாசிரியர் பதவியின் தரத்திற்கு உயர்த்த நியாயமான காரணம் எதுவுமில்லை எனக் கருதப்படுகிறது.

### சாலைகளுக்கு தார்

*57 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் மற்றும் திரு. க. மீனாட்சி சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1982-83 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு சாலைகள் போட மத்திய அரசு வழங்கிய தார் அளவு எவ்வளவு?

(இ) தமிழகத்திற்கு சாலைகள் போட ஆண்டுக்கு சராசரி எவ்வளவு தார் தேவைப்படுகிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 1982-83 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு சாலைகள் போட மத்திய அரசு 1,00,000 டன் தார் வழங்கியது.

(இ) தமிழகத்திற்கு சாலைகள் போட ஆண்டிற்கு சராசரி 1,00,000 டன் தார் தேவைப்படுகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பெரு மழையின் காரணமாக பாதைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தார் போட்ட சாலைகளை மேற்கொள்ள இருக்கின்ற நிலையிருப்பதால், மேலும் அதிக அளவிலே தார் பெறுவதற்கு அரசு வற்புறுத்துகிறதா? அப்படி இல்லையென்றால் நாமே வெளிநாடுகளிலேயிருந்து தார் பெறுகின்ற உரிமையைப் பெறுகின்ற நோக்கம் அரசுக்குண்டா?

[1984 மார்ச் 6

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நமக்குத் தேவையான தார் ஒரு லட்சம் டன்தான். அந்தத் தாரைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனாலும், தாரின் விலைதான் அதிகமாகிக் கொண்டே வருகிறது. கடந்த 1973 ஆம் ஆண்டிலே ஒரு மெட்ரிக் டன் ஏறத்தாழ 600 ரூபாய்க்கு விற்றது. ஆனால் இப்போது மூவாயிரம் ரூபாய்க்குப் போயிருக்கிறது. ஆகவே தாரின் விலை ஏற்றம் ஐந்து மடங்காகி இருக்கிறது. எப்படி பெட்ரோல் விலை ஏறிக்கொண்டே போகிறதோ அதே போல தாரின் விலையும் ஏறிக்கொண்டே வருகிறது. அதைத்தான் மத்திய அரசுக்கும் நாம் எடுத்துச் சொன்னோம். பெட்ரோலியம் விலையைக் கணக்கில் வைத்துக்கொண்டு தாரின் விலையை ஏற்றக்கூடாது என்று சொன்னோம். பெட்ரோல் எண்ணெயை யார் யார் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், தாரை நாம் எதற்காகப் பயன்படுத்துகிறோம் என்பதும் மத்திய அரசுக்குத் தெளிவாகப் புலனாக வேண்டும். ஏனென்றால் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மிக மிக முக்கியமானது சாலைகள்தான். ஆகவே சாலைகளைக்கூட கோர் செக்டாரிலே கொண்டுவர வேண்டும். தாரின் விலை 1973-லேயிருந்த அளவிற்குக் குறைக்கப்பட வேண்டும் என்றுகூட நாம் கேட்டிருக்கின்றோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததிலிருந்து தார் விலை ஏறி, அது ஒருவேளை கான்கிரீட் விலைக்கு வருவதைப் போலத் தெரிகிறது. கோவை-மேட்டுப்பாளையம் சாலை, 15 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கான்கிரீட் சாலை, இப்போதும் சிறப்பாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே தார் போடுவதைக் குறைத்து சில பகுதிகளிலே கான்கிரீட் ரோடுகளாகப் போடுவது இந்த விலையேற்றத்திற்கு ஒப்ப உதவியாக இருக்குமானால், அதை அரசு சிந்திக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது சிமெண்ட் கூட பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. ஆகவே நமக்கு வேண்டிய போதிய அளவு சிமெண்ட் நமக்குக் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட நிலையில் கான்கிரீட் ரோடு போடுவது என்பது முடியாத காரியம். ஆகவே அதற்கும்கூட மத்திய அரசுதான் முன்வர வேண்டும். ஆனால் மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலைகளுக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கும் கூட கடந்த பத்தாண்டுகளில் அனுமதி கொடுக்கவில்லை. ஏற்கெனவே



1984 மார்ச் 6]

1,867 கி.மீ. தூரம் தேசிய நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. அவைதான் பராமரிக்கப்பட்டு வருகின்றனவே தவிர, புதிய தேசிய நெடுஞ்சாலைகளுக்கு இவர்கள் அனுமதி கொடுப்பதில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, ரப்பரைக் கலந்து ஒரு கலவையாகச் செய்து மலேசியா, சிங்கப்பூர் பகுதிகளிலே சாலைகள் அமைக்கிறார்கள். அப்படி அமைத்தால் செலவும் குறைவாக ஆகிறது என்று சொல்கிறார்கள். அதுபோல் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு ஏதுமுண்டா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, அதுபோன்று உத்தேசம் ஏதுமில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, இந்த ஒரு டன் தாரின் விலை ஐந்து மடங்கு அதிகமாக ஆகியிருக்கிறபோது, சர்வதேச மார்க்கெட்டில் இந்த அளவிற்கு அதன் விலை உயரவில்லை என்று நினைக்கிறேன். மத்திய அரசு அடிக்கடி பெட்ரோல் விலையை உயர்த்துவதுபோல் இதையும் உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நமக்குத் தேவைப்படுகிற தாரை அவர்களிடமிருந்து வாங்குவதற்குப் பதிலாக, வெளியிலிருந்து வாங்க அனுமதி கேட்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தாரின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற அந்த அதிகாரம் எல்லாம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட நிலையிலே அதிகாரம் எல்லாம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இப்போது வைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையிலே நாம் இருக்கின்றோம். நமக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. ஜேப்பியார் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே தார் ரோடுகள் எத்தனை கிலோ மீட்டர் இருக்கின்றன என்று அவைக்கு அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில், 1,867 கிலோ மீட்டர் தூரம் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதிலும்கூட 128 கி.மீ. தூரம் அர்பன் லிங்குகளாக அவையெல்லாம் இன்றைக்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதுபோக மாநில நெடுஞ்சாலைகள் 1,814 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அதேபோன்று எம். டி. ஆர். என்று சொல்லக்கூடிய மேஜர்

டிஸ்ட்ரிக்ட் ரோடு 14000 கிலோ மீட்டர் தூரம் நாம் பராமரித்து வருகின்றோம். ஓ. டி. ஆர். என்று சொல்லக்கூடிய அதர் டிஸ்டிரிக்ட் ரோடு 19000 கிலோ மீட்டர் தூரம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ரூரல் ரோட்ஸ்-பஞ்சாயத்து ரோடுகளாக ஏறத்தாழ ஒரு லட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்குப் பராமரித்து வருகிறோம். மொத்த சாலைகள் நீளமே ஒரு லட்சத்து நாற்பத்தோராயிரம் கிலோ மீட்டர் தூரம்தான்.

### *Non-sanction of Selection Grade/Special Grade to Teachers in Dindigul Municipal Schools.*

* 58 *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru P. R. Thomas): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that Selection Grade and Special Grade have not been awarded to many teachers in Dindigul Municipal Schools;

(*b*) if so, the number of teachers affected; and

(*c*) the reasons for the non-sanctioning of such posts?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(இ) மற்றும் (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண்கள் 59 மற்றும் 60 ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேதகு ஆளுநரிடமிருந்து 25—2—1984 தேதியிட்ட கீழ்க்கண்ட செய்தி வந்துள்ளது :—

"நான் 13—2—1984 அன்று சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உரையாற்றியதற்காக தாங்கள் அனுப்பிய நன்றி அறிவிப்புத் தீர்மானத்தினை மனநிறைவுடன் பெற்றுக்கொண்டேன்."



### (2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984).

2. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 13/1984).

3. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984).

4. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1984).

5. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1984).

6. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1984);

## 3. கவன ஈர்ப்பு.

### குமரி மாவட்டத்தில் 3,000-க்கும் அதிகமான தனியார் தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"குமரி மாவட்டத்தில் 3,000-க்கும் அதிகமான தனியார் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 17—10—1983 முதல் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் தொழிலாளர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து"

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஒரு விளக்கமான அறிக்கை @ அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, தனியார் துறை நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமாக பஞ்சப்படி உயர்வு தர முடியாது என்று கூறியதால், அங்கே நான்கு மாத காலமாக வேலை நிறுத்தம் நடந்தது. அதனால், தொழிலாளர்களுக்கு நான்கு மாத காலம் வேலை இல்லாமல் போய், சம்பள இழப்பு ஏற்பட்டுள்ளதால், அதை ஈடு செய்யும் முறையில் நான்கு மாத காலத்திற்குச் சம்பளம் தர வேண்டுமென்ற கோரிக்கையை தொழிலாளர்கள் சார்பிலே கன்சிலியேஷன் ஆபிசர் முன் வைததிருக்கிறார்கள். அரசு மற்ற பிரச்சினைகளை தொழில் கோர்ட்டுக்கு அனுப்பியுள்ளதுபோல, இந்தக் கோரிக்கையையும் டிரிப்யூனலுக்கு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவரவர்களே, அங்கே எழுப்பப்பட்ட முக்கியமான பிரச்சினை, பஞ்சப்படி கொடுத்து வந்ததை 1—4—1982லிருந்து நிறுத்திவிட்டார்கள் என்பதுதான். அதைத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று, செக்ஷன் 10 (பி) யை 'இன்வோக்' செய்து உத்திரவு போட்டிருக்கிறோம். அது தவிர, 11—12—1982 அன்று ஓர் ஒப்பந்தம் செய்து, அதன்மூலம் 50 காசு பஞ்சப்படியும், பிறகு ஒரு ரூபாய் பஞ்சப்படியும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றும் முடிவு செய திருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தையும் செயல்படுத்த வேண்டும், அதிகமாகப் பஞ்சப்படி தர வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். மற்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரை, எவையெவை நீதி மன்றத்திற்குப் போக வேண்டுமென்று அரசு கருதியதோ, அவைகளையெல்லாம் நீதி மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை. தொழிலாளர்களுக்கு நான்கு மாதங்களுக்கு வேலையில்லாமல் போனதற்குக் காரணம், நிர்வாகம் அவர்களுக்கு சட்டப்படி பஞ்சப்படி தர மறுத்ததால்தான் என்பதைத் தெரிவித்துக்

@ 210-212 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கொள்கிறேன். அதனால் நஷ்ட ஈடு தர வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை கோர்ட்டுக்கு அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும், அரசு ரப்பர் தோட்டங்களிலும் இது போன்று பஞ்சப்படி தாராமல் இருக்கிறார்கள். அதைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் ஏற்கெனவே சொன்னேன். அதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல விரும்பாததற்குக் காரணம்—இந்தப் பிரச்சினை குறித்து 17—10—1983 முதல் வேலைநிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் செய்த காலத்திற்கு ஊதியம் கொடுக்க வேண்டுமென்றும் தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பக்கூடாதா என்றும் கேட்டார்கள். அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்னால் அரசை அணுகி அல்லது நேராக அமைச்சரவர்களை அணுகி. "செக்ஷன் 10 (பி)"-ஐ 'இன்வோக்' செய்யுங்கள் என்று சொல்லியிருக்கலாம். அரசு இதைப் பற்றிப் பரிசீலனை செய்யும்போது, எந்தெந்தப் பிரச்சினைகளைத் தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பினால், தொழிலாளர்களுக்கு, நிர்வாகத்திற்கு. அந்தத் தொழில் தொடர்ந்து நடப்பதற்கு உபயோககரமாக இருக்கும் என்பதைப் பரிசீலனை செய்து, அவற்றை அரசு நீதி மன்றத்திற்கு அனுப்புகிற அந்தக் கொள்கையைத்தான் பின்பற்றி இருக்கிறோமென்று சொன்னேன்.

(முற்பகல் 10-00)

அரசு ரப்பர் தோட்டம் பற்றிச் சொன்னார்கள். அதுகுறித்து சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேசியிருக்கிறேன். அவர்கள் இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அரசுப் பொறுப்பிலே இருக்கின்ற ரப்பர் தோட்டங்களில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு இதுவரை கொடுக்கப்படாமல் இருக்கின்ற அகவிலைப்படி உயர்வுகளை முறையாகக் கணக்கிட்டு நிதிநிலைமைக்கு ஏற்றவாறு தவணை முறைகளில் பிரித்து உடனே வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை ரப்பர் தோட்ட நிர்வாகிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1984).

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

Thirumathi TARA CHERIAN: Hon. Chairman, Sir, I was listening to the speech of the Hon. Minister in the Assembly and I have read the Bill also. This Bill which relates to the screening of Tamil films is only an Amending Bill and it will be automatically passed by a steam-roller majority. But certain things have to be looked into. This being an Amending Bill so many rules are going to be made and so many amendments to the existing rules are going to be made so many times. Whether all these will ensure freedom of thought, speech and action is one of the things that struck me while I was reading this Bill. We are appointing many Inspectors and there will be any number of inspections by those Inspectors on the managements of the cinema-houses. In the process, malpractices could easily occur. Since the whole of Tamil Nadu is to be covered by this measure, harassment will be there. I was thinking whether it would not be much better if we resorted to censoring and also told the film Directors what type of film should be produced and shown. Now, we say that the Government may, in the interest of the general public of the State of Tamil Nadu who speak mainly Tamil which is the

@ 213 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



official language of the State, issue directions from time to time to any class of licensees. While passing a Bill of this nature, it is very necessary for us to avoid any ambiguity. The Government should not say that they 'may be' changing something. The Inspectors may not know what the Government mean by the word 'may' The Government should simplify the wording used in the Bill. They should say that Tamil films should compulsorily be shown for three months instead of saying 'it may be shown for nine months' because the latter does not give a clear picture.

Sir, I come to the next point. It seems that the Hon. the Minister for Information has mentioned in the Assembly that this measure will keep intact the Tamil culture and Tamil heritage, that the showing of Tamil films for more number of days will remove from the minds of Tamil citizens the feeling that they are second-class citizens, etc. All this does not hold much of argument or high point of view if we are to judge it applying the yardstick of the type of Tamil films that are shown and the kind of cinema-posters that are exhibited. Especially, the cinema-posters do nothing to depict Indian culture or to heighten the status of Indian womanhood. Sir, I may be permitted to say that many Members of the Cabinet are well-versed in film-making. The Hon. the Minister for Information himself has been a Director and producer. Therefore, it is all the more necessary that we should have only those films which present a correct image of Indian womanhood and, particularly, the Tamil womanhood of which we are proud. அடக்க ஒடுக்கமாக இருப்பது, சரியாக உடை உடுத்துவது, இதையெல்லாம் காட்டாமல், what do the present-day films show? Almost 99 per cent of the body of a woman is exposed.

Sir, to save time, I would also like to bring to the notice of the Hon. Minister that immediately after this Bill is passed, we should devise a machinery to control the type of posters that can be allowed to be exhibited in Madras city as well as in the District centres. I am glad to say that the posters have been removed from the walls of the Thousandlights Mosque which is a place of worship. But next to it, there is the Church Park Convent where children from Kindergarten standard to Higher Secondary standard are studying. The educational institutions are also sacred places and thousands of children are passing through the place. Whether it is a question of revenue to the Corporation or not, we should control the type of posters that could be exhibited in the hoardings. There are hoardings all around the Church Park Convent and there is kissing show. Sometimes the parents kiss their children on their lips and even this is not hygienic and we will have to teach the children about this. The

[Thirumathi Tara Cherian] [1984 மார்ச் 6

posters that are exhibited do not bring respect to Indian womanhood and the Hon. Minister's statement that the exhibition of Tamil films will help improve the culture of Tamil Nadu is far-fetched. We are now a free country and people have full freedom and in Tamil Nadu there are only Tamil films shown in a majority of the theatres and in districts, there are no films in other languages shown. It is not correct to say that by the films shown our heritage could be preserved. Regarding the music broadcast by All India Radio, I would like to say that many of our children desire to listen to music broadcast by Radio Sri Lanka. Many of them like to listen to popular music and we cannot ask them to hear only classical music. As soon as the Bill is passed, we should have a high-power committee to decide the type of hoardings that we can have. If that is done, it will be much more helpful in preserving our heritage and culture. Thank you.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே. தமிழ்த் திரைப்படங்கள், தமிழகத் திரையரங்குகளில் ஒன்பது மாதங்கள் கட்டாயமாகக் காட்டப்பட வேண்டுமென்ற கருத்தில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஆண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்த் திரைப்படங்கள் தமிழ்த் திரையரங்குகளில் காட்டப்பட வேண்டுமென்று ஆணையிட்ட போதிலும், அது ஒரு சட்ட பூர்வமானதாக இல்லையென்ற அளவில், இப்போது அதை ஒரு சட்ட முன்வடிவாகக் கொண்டு வந்திருப்பதன் மூலம், அந்த ஆணையைச் சரியாகப் பயன்படுத்த அதிக அளவில் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்ற அளவில் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். தமிழ் நாட்டில் தமிழ்த் திரைப்படங்களை தமிழ்த் திரையரங்குகளில் திரையிட வற்புறுத்தி ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டிய நிலை இருப்பது குறித்து, நமக்கெல்லாம் வருத்தம் தான் ஏற்படுகிறது. காரணம் அந்த அளவில் ஆங்கிலத் திரைப்படங்களையும், பிற மொழிப் படங்களையும் காட்டுவதில் அரங்க உரிமையாளர்கள் அக்கறை காட்டுவதைப் பார்க்கும்போது, நமக்கு வேதனைதான் ஏற்படுகிறது. அந்த அளவுக்கு பிற மொழிப் படங்களையும் ஆங்கிலப் படங்களையும் காட்டுகிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது. ஆங்கிலப் படங்களை யார் மிகவும் விரும்பிப் பார்க்கிறார்கள் என்றால், வசதி படைத்தவர்கள் தான். ஆகவே ஒன்பது மாத காலம் கட்டாயம் தமிழ்த் திரைப்படங்களைக் காட்ட வேண்டும் என்று கொண்டுவருகிறபோது, நகரின் மையப் பகுதிகளில் தமிழ்ப் படங்களைக் காட்ட வேண்டுமென்று வைத்து, நகரின் வெளியே தள்ளியிருக்கிற பகுதிகளில் ஆங்கிலம் மற்றும் பிற மொழித் திரைப்படங்களைக் காட்டிக் கொள்ளலாம் என்று அந்தப் படங்களுக்கும் கட்டுப்பாடு விதித்தால் கூட சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 மார்ச் 6]

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இப்போதே எல்லா வீடுகளிலும் வீடியோ வந்து பெரிய அவஸ்தையாகப் போய்விட்டது என்று சொல்லுகிறார்கள். இதில் நகரத்திற்கு வெளியே பிறமொழிப் படங்களைக் காட்டுவது என்று வைத்தால், எப்படி இருக்கும் . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** திரைப்படங்களைப் பொறுத்தவரையில், மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். "நான் விரும்புகிறபடி திரைப்படம் ஒன்றை எழுதி படமாக்க அனுமதித்தால், நான் எண்ணுகிற எண்ணத்தை என்னால் ஈடேற்றிக் காட்ட முடியும்" என்று திரைப்படங்களைப் பற்றி அந்த அளவுக்கு வலிமையான ஆயுதமாகக் குறிப்பிட்டு சொன்னார்கள். அந்த அளவுக்கு வலிமையான ஆயுதங்களாக இருக்கிற திரைப்படங்கள் மூலமாக மக்கள் பெறுகிற கருத்துகளையும், நலன்களையும் எண்ணிப் பார்க்கிறபோது, தமிழ்ப் படங்கள் ஓரளவுக்கு அந்தப் பணிகளை நல்ல முறையில் ஆற்றியிருக்கின்றன என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய பல திரைப் படங்களும். அவருக்குப் பின்னாலே வந்த நல்ல தமிழ் உணர்வு பெற்றவர்கள் எழுதிய பல திரைப்படங்களும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடித்துள்ள பல திரைப்படங்களும் தமிழ் நாட்டில் மக்களிடையே நல்ல உணர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் அதிக இடங்களில் திரையிடப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, அவைகள் எந்த வடிவில் இருக்க வேண்டும் என்பதையும் அவைகளையெல்லாம் எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதிலும் அரசு அக்கறை காட்ட வேண்டும். அதுமட்டுமல்ல, சென்சார் போர்டிலேயே தமிழ் நாட்டு மக்களின் எண்ணங்களையும். தமிழக அரசின் கருத்துக்களையும் வரையறுத்துச் சொல்லி அவற்றிற்கேற்ப படங்களைத் தயாரிப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது 40 திரைப்படங்கள் எடுக்கப்பட்ட நிலைமைகள் மாறி, 130 படங்கள் ஆண்டுதோறும் எடுக்கப்படுகின்றன என்பது மன நிறைவை அளிப்பதாக இருந்தாலும்கூட, இந்தத் திரைப்படத் தொழிலில் எவ்வளவு பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது, எத்தனை படங்கள் முழுமையாகத் தயாரிக்கப்பட்டு வெளியே திரையிடப்படாமல் இருக்கின்றன, இதனால் திரைப்படத் தொழில் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை

யெல்லாம் அரசு அக்கறையோடு கவனித்தாக வேண்டும். தற்போது திரைப் படத் தொழிலில் இருக்கும் நிலைமை மிகுந்த வேதனை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. காரணம் அதற்குத் தேவையான முதலீடு அதிகம் என்பதோடு பலர் ஆசை காரணமாகவும் அங்கே போய் அவஸ்தைப்படுகிறார்கள். காரணம் அந்தத் தொழிலுக்குத் தேவைப்படும் பணத்திற்கு வாங்கப்படும் வட்டி மிகவும் அதிகமாக இருக்கிறது. தமிழ் நாட்டில் 33,000 வட்டிக் கடைகள் இருக்கின்றன என்று பார்க்கிறபோது, அவைகள் எல்லாம் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை முழுங்கிவிடுகிற அளவுக்கு இருக்கின்றன. இந்த தொழிலில் ஈடுபட்டவர்களை முழுங்கிவிடும் திமிங்கலங்களாக அந்த வட்டிக் கடை முதலாளிகள் இருக்கின்றனர் என்பதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகத் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கிற நோக்கத்தோடு கொண்டுவரப்படுகிற இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். தமிழ் மக்களின் நலன்கள் என்பவை இங்கே மட்டும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதல்ல. அண்டையில் உள்ள ஸ்ரீலங்காவிலும் சரி, எல்லா இடங்களிலும் தமிழர்களின் நலன்கள் காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. தற்போது திரு. அமிர்தலிங்கம் அவர்கள் அங்கே செல்ல இருக்கிறார்கள். நம்பிக்கையற்ற ஒரு சூழ் நிலையில் இருக்கிற அந்த மக்களை பாதுகாக்கிற நிலையில் செல்ல இருக்கிறார்கள். எனவே அங்கே இருப்பவர்களின் நலன்களையும் நாம் காத்தாக வேண்டும். அண்மையில் அந்தமானில்கூட 500 தமிழர்களின் கடைகளை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். நேற்றையதினம் பெங்களூரில் ஒரு தமிழ் மகன் இறந்து போயிருக்கிறான். படப்பிடிப்பையொட்டி ஏற்பட்ட சம்பவங்களாக இருந்தாலும், பாதிப்புக்கு உள்ளாகியிருப்பது ஒரு தமிழன் தான் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சட்ட முன் வடிவின்மீது அது சம்பந்தப்பட்டவற்றை மட்டுமே பேச வேண்டும். நாட்டில் நடக்கிற நிகழ்ச்சிகளையெல்லாம் இங்கே பேசக் கூடாது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவே தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. "தமிழ் ஒழிக, தமிழர்கள் ஒழிக" என்று பெங்களூரில் குரல் கொடுக்கப்படுகிற காரணத்தால் . . .





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த உணர்வு வேண்டாம். அதைச் சொல்லுவதற்கு வேறு வழிமுறைகள் இருக்கின்றன. அந்த முறையில் மசோதாவைப்பற்றி மட்டும் இங்கே பேச வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மரபுக்காகச் சொல்கிறேன். வேறு அவையில் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி தன்னுடைய உணர்வைத் தெரிவிக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட இதிலே ஒரு தவறான எண்ணம் வந்துவிடக் கூடாது என்று அங்கே இருந்த மாவட்ட அதிகாரியை — அவர் நல்லவராக இருந்து சரியாகச் செயல்பட்டிருந்தாலும்கூட—மாற்றியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நாம் நடந்து கொண்டிருக்கிறோம் என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் தமிழர்களின் நலன்களைக் காக்க, அதிலும் திரைப்படத்துறையைப் பொறுத்தவரையில் காப்பதற்காக, அரசு சட்டபூர்வமாக எடுத்திருக்கிற இந்த முயற்சிக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில் திரையரங்குகளின் உரிமையாளர்கள் இந்தக் கட்டுப்பாடுகளை மீறினால், அதற்காக வேறு மாற்று முறைகளைக் கையாண்டால், அதை முறியடிக்க அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே 12 வாரங்கள் திரையிடவேண்டும் என்று கேட்டதும் தமிழ் மக்களின் நலன் கருதித்தான். தமிழ் நாட்டு மக்களும், தமிழ்ப்பட விநியோகஸ்தர்களும் பட உரிமையாளர்களும் தங்களின் சங்கங்கள் மூலமாக வேண்டுகோள் விட்டதன் காரணமாகத் தான் 12 வாரங்கள் கண்டிப்பாகத் தமிழ்ப் படங்களைத் திரையிட வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. அதை நியாயமாக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் என்ன நிலைமை ஏற்பட்டது என்பது நம் அனைவருக்கும் தெரியும். இவ்வளவு வளர்ச்சி ஏற்பட்ட பிறகுதான், நாம் "தமிழ் மொழியில் மனுக்களைத் தரலாம்" என்று விளம்பரம் செய்ய வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறோம். இப்படிப்பட்ட முறையில் அரசு தமிழ் மக்களுக்குப் பாது காப்பு தர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பது ஒரு வகையில் வேதனையாக இருந்தாலும், இது இன்றையதினம் ஒரு அவசியமான காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே ஒன்பது மாதங்கள் தமிழ்த் திரைப்படங்களைத் திரையிட வேண்டும் என்று ஆணையிடுகிற இந்த முயற்சியை வரவேற்கிறேன். அதிலும் நல்ல தமிழ்ப் படங்கள், தமிழ்ப் பண்பாட்டைக் கெடுக்காத படங்கள், தமிழ்ப் பண்பாட்டைக் காக்கும் படங்கள் திரையிடுவதற்கான முறையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல சில கருத்துப்

படங்களை வெளியிட வேண்டும் என்று மாற்றம் ஏற்பட்டிருப்பதையும் இப்போது பார்க்கிறோம். நல்ல அறிவுப் படங்களையும் கருத்துப் படங்களையும் மக்களுக்கு நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்கிற படங்களையும் தயாரித்தாக வேண்டும். இப்போது எப்படி செய்திப் படங்கள் தயாரிக்கப் படுகின்றனவோ அப்படி அவைகளும் தயாரிக்கப்பட வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில அரசின் சார்பில் ஒரு படத்தை வெளியிட முடியுமா என்று நினைத்ததன் முதற் கட்டம்தான் திரைப்படம்பற்றிய தொழில்களைப் பயிலுகிற கல்லூரி இங்கே வருவதற்குக் காரணமாக அமைந்தது. அதைப் போல அரசு திரைப்படத் தொழிலின் மூலம் நல்ல கருத்துப் படங்களைத் தயாரிக்க வேண்டும். தமிழர் வரலாற்றைத் தயாரிக்க வேண்டும். ஏனெனில் பல வரலாறுகள் நமக்கும் தெரியவில்லை, மக்களுக்கும் தெரியவில்லை. அதனால்தான் சம்புவராயர் என்றால் யார் என்று கேட்கக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே நம்முடைய வரலாற்றை திரைப்படமாகத் தயாரித்து அதைக் காட்ட வேண்டிய நிலையை சட்டத்தின் வாயிலாக ஏற்படுத்தித் தர வேண்டும். நல்ல கருத்துள்ள படங்களை எடுத்துக் காட்டலாம். யார் அப்படிப்பட்ட படங்களை எடுக்கப் போகிறார்கள்? லாபம் கருதி யாரும் அப்படி எடுக்கப் போவதில்லை. யாரும் மக்கள் நலன் கருதி செய்யப்போவதில்லை. அதை அரசுதான் செய்ய வேண்டும். அதற்காக அதிக நிதி ஒதுக்கி மக்களை நல்வழிப் படுத்துகிற படங்களை, மக்களை மதுவிலிருந்தும், லாட்டரிச் சீட்டிலிருந்தும், சூதாட்டத்திலிருந்தும் காப்பாற்றுகிற அளவிற்கு கருத்துப் படங்களை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் சினிமா படங்கள் 12 வாரங்களுக்குக் குறையாமல் காட்டப்பட வேண்டும் என்று ஏற்கெனவே இருந்த அவசரச் சட்டத்திலே இருந்தது. இப்போது இந்தச் சட்ட முன்வடிவில் ஒன்பது மாதங்களுக்கு மேற்படாமல் தமிழ்த் திரைப் படங்களைக் காட்ட வேண்டும் என்று திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கான காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது விளக்குவார்கள் என்று நினைக்கிறேன்.

அவசரச் சட்டத்தில் உள்ளது போலவே, 12 வாரங்கள் அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாமல் தமிழ் நாட்டிலுள்ள தியேட்டர்களில் தமிழ்ப் படங்கள் காட்ட வேண்டுமென்ற ஷரத்தைக் கொண்டு வந்தால். நல்லது என்று நினைக்கிறேன். அப்படியில்லாமல் ஒன்பது மாதங்களுக்கு மேற்



படாமல் தமிழ்த் திரைப்படங்களைக் காட்ட வேண்டுமென்று வற்புறுத்தினால், தியேட்டர் உரிமையாளர்கள் அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தி "எங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது" என்று கூறி "குறைந்த பட்சம் மூன்று மாதங்கள்" என்று இருக்கக்கூடியதைக்கூட அடிக்கக்கூடிய அளவிற்கு "சேலஞ்ச்" பண்ண முற்படுவார்கள். ஆகவே அவசரச் சட்டத்திலே உள்ளதைப் போலவே மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் என்று போடலாம். அதற்கு மேல் தேவைப்படும்போது நோட்டிபிகேஷனை வெளியிட அரசுக்கு அதிகாரம் வைத்துக் கொள்ளலாம். ஆகவே "ஒன்பது மாதங்கள்" என்பது அவசியம்தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

இதிலே இன்னுமொரு விஷயம். தமிழ் நாட்டிலே கன்னடம், மலையாளம், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிப் படங்களைக் காட்ட வேண்டிய நிலை இருந்து வருகிறது. தமிழ் நாட்டிலே ஒரு "காம்போசிட் கல்ச்சர்"- இந்தியப் பண்பாட்டை, இந்திய கலாச்சாரத்தை உருவாக்க முயற்சிக்கும் போது, பிற மாநிலங்களுடைய பழக்க வழக்கங்கள், பிற மாநில மக்களுடைய சமுதாயப் பிரச்சினைகள் ஆகியவற்றையெல்லாம் பிரதிபலிக்கக்கூடிய படங்களைத் தமிழர்களும் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே மற்ற படங்களும் அவசியம். ஆகவே 'ஒன்பது மாதங்களுக்குக் குறையாமல்' என்று சொன்னால் மற்ற படங்களுக்கு கால அவகாசம் இல்லாமல் போகும் என்ற எண்ணம் ஏற்படும். இந்திய கலாசாரத்திற்கு எதிராக இந்த அரசு இருக்கிறது என்ற குற்றச்சாட்டிற்கு இடம் அளிக்காத அளவிற்கு இருக்க வேண்டும். ஆகவே மூன்று மாதங்களுக்குக் குறையாமல் என்று இருந்ததை இப்போது மாற்ற வேண்டிய அவசியம் என்ன வந்தது என்று நான் அறிய விரும்புகிறேன்.

மேலும் மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் அவரவர்கள் மொழிப் படங்களைத்தான் ஒன்பது மாதங்களுக்குக் காட்ட வேண்டுமென்று சட்டம் கொண்டுவந்தால், மற்ற மாநிலங்களில் உள்ள தமிழர்களுக்கு அது பாதகமாக அமையும். கேரளாவில், பெங்களூரில், பம்பாயில் அதிகமாகத் தமிழர்கள் வசிக்கிறார்கள். அப்படித் தமிழர்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதிகளில் இப்படிப்பட்ட நிலைமை வந்தால். அவர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே அரசு ஏற்கெனவே அவசரச் சட்டத்திலே கூறியிருப்பதைப் போல, "மூன்று மாதங்களுக்குக் குறையாமல்" என்று இருந்தால், அரசின் நோக்கம் நிறைவேறும். அப்படி இருக்கும்போது, வேறு சந்தேகங்களுக்கு இடம் அளிக்கக் கூடிய அளவிற்கு "ஒன்பது மாதங்களுக்குக் குறையாமல்" என்று போடுவானேன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரவையிலே பேசும்போதுகூட மாண்புமிகு

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 மார்ச் 6

அமைச்சர் அவர்கள் மூன்று, நான்கு மாதங்களுக்குக் காட்ட வேண்டுமென்று பேசியிருப்பதாக பத்திரிக்கையிலே நான் படித்தேன். அந்த அடிப்படையிலே இந்தத் திருத்தத்தை வைத்துக் கொள்ளலாம் என்று பொதுவாகச் சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில். எனக்கு ஆட்சேபணையில்லை. இந்தப் பிரச்சினை குறித்து அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 'இந்த அவையின் முன்னால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னால் 1979ஆம் ஆண்டிலே ஒரு அரசாங்க உத்தரவு மூலமாகத் தமிழ் நாடு திரை அரங்குகளிலே தமிழ் படங்களை 15 வாரங்களுக்குக் குறையாமல் காட்ட வேண்டுமென்று போடப்பட்ட உத்திரவை நீதிமன்றம் சட்டப்படி செல்லுபடி ஆகாது என்று கூறிய காரணத்தாலே, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவு நீதிமன்றத்தினுடைய ஆதாரத்தை எந்த அளவுக்கு நிலை நிறுத்துகின்றது என்பது எனக்குத் தெரியவில்லை. சட்ட வல்லுனர்கள் தான் இதற்குக் கருத்து கூற முடியும் என்று நான் நம்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவிலே திரையரங்கு உரிமையாளர்களைவிட, உறுப்பினர்களை விட, திரைப்படம் பார்க்கும் மக்களுக்குத்தான் நிபந்தனை விதித்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அந்த நிபந்தனை எந்த அளவுக்குச் செல்லுபடியாகுமென்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும், இங்கு நம்முடைய நண்பர் டாக்டர் சனார்த்தனம் சொன்னது போல, தமிழ் நாட்டு மக்களுக்கு இப்போது தமிழ் உணர்வு குறைந்து விட்டதோ என்ற நிலையில்தான் இந்த மசோதா இங்கு வந்திருப்பதாக நான் கருதுகிறேன். தமிழ் நாட்டைச் சேர்ந்த திரையரங்குகளிலே தமிழ்ப் படங்கள் காட்டப்பட வேண்டுமென்று சட்டத்தின் மூலமாக நிர்ப்பந்திக்க வேண்டிய நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதற்கு உள்ளபடியே நாம் எல்லாம் வருந்த வேண்டுமென்று நான் கருதுகிறேன். இந்தச் சட்ட முன்வவில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னது போல, ஒன்பது மாத காலம் தமிழ்ப் படம் காட்ட வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. மாண்புமிகு



1984 மார்ச் 6] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

அமைச்சரவர்கள் சட்டமன்றப் பேரவையிலும் வெளியிலும் "ஒன்பது மாத காலம் அல்லது குறைந்தபட்சமாக இருக்கலாம்" என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு விளக்கங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்று திரையரங்கங்களில் தமிழ் படங்களைத்தான் காட்ட வேண்டுமென்று கொண்டுவந்திருக்கிற சட்டம் ஒரு நல்ல சட்டம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நம்முடைய, இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினராகிய திருமதி தாரா செரியன் சொன்னது போல, இந்த சினிமா படங்களின் தரம் குடும்பத்தோடு அவற்றைப் பார்க்க முடியுமா என்ற நிலையைத்தான் தோற்றுவித்திருக்கின்றன என்பதை நாம் இன்றைக்குப் பார்க்கிறோம். தமிழ் நாட்டு தாய்மார்களுடைய நிலைகளை 'இழிவுபடுத்தும் நிலையிலே படங்கள் வெளியிடப்படுகின்றன. அதிலே குறிப்பாக சுவரொட்டிகளைப் பார்ப்போமானால், ஆபாசச் சுவரொட்டிகள் இன்று சென்னை மாநகரத்து வீதிகளை அலங்கரித்துக்கொண்டிருப்பதை நாம் கண்டு வேதனைப் படத்தான் வேண்டும். திருமதி தாரா செரியன் சொன்னதுபோல. இன்றைக்கு வணக்கத் தலங்கள், பள்ளிக்கூடங்கள், மாதா கோவில்கள் இவை போன்றவைகளில் எல்லாம் ஆபாசமான சுவரொட்டிகளை ஒட்டுவதன் மூலமாக மனிதனுடைய உணர்வுகளைத் தூண்டுகின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். அவைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்துக்கு உண்டு. மாநகராட்சிக்கு உண்டு. மாநகராட்சி நிர்வாகமானாலும், அரசாங்க நிர்வாகமானாலும், கண்ணை மூடிக்கொண்டு இதுபோன்ற ஆபாசச் சுவரொட்டிகளை சென்னையிலே முக்கிய தெருக்களிலே அனுமதித்திருப்பதை, குறிப்பாக அண்ணா சாலையிலே இருப்பதை நாம் பார்க்கிறோம். அது குறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மொழிப் பிரச்சினையைப்பற்றிப் பேசும்போது அது உணர்ச்சி பூர்வமான பிரச்சினையாக உருவாகிறது. அது உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய நிலையிலே இருக்கிறது. நாம் தமிழ் மொழியைப்பற்றிப் பேசும்போது. மற்ற மொழிகளைப்பற்றிப் பேசி இன்றைக்கு ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகளை உருவாக்குகின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். அதுபோன்ற நிலைமைகள் எல்லாம் உருவாகாமலிருப்பதற்கு நாம் எல்லா மொழிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையை ஒட்டித் தான் பேசவேண்டுமென்று சொன்ன காரணத்தினாலே, நான் வேறு பிரச்சினை

களுக்குச் செல்ல விரும்பவில்லை. உதகமண்டலத்தில் நடைபெற்ற சம்பவங்கள், அதைத் தொடர்ந்து இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு நமக்கு. வேர் ஊட்டத் தக்கவையாக இருக்கின்றன. அதற்கான காரணங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்படவேண்டிய நிலைமை இன்றைக்கு இருக்கின்றது. அதைப்பற்றி நான் இப்போது பேச விரும்பவில்லை. ஆனாலும். இன்றைக்கு தமிழுக்கு. ஆபத்து என்று சொன்னாலும், தமிழர்களுக்கு ஆபத்து என்று சொன்னாலும், தமிழ் நாட்டிலே மாத்திரம் அல்ல வேறு மாநிலத்திலே ஆனாலும்; வேறு நாடுகளிலே ஆனாலும். இன்றைக்கு இருக்கின்ற தமிழக மக்கள் கட்சி பேதம் இல்லாமல். ஜாதி பேதம் இல்லாமல், எந்தவித பாகுபாடும் இல்லாமல் உணர்வு பூர்வமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். எனவே இந்த உணர்ச்சிகளை மதித்து, உடனடியாக இந்த, சர்க்கார், செயல்பட்டு, தமிழகத்திலே இருந்தாலும் சரி. மற்ற அண்டை மாநிலங்களில் ஆனாலும் சரி தமிழர்களையும், தமிழ் மொழியையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தும்போது தவறு ஏற்படாத அளவு பார்த்துக்கொள்ளவேண்டும். ஒன்பது மாதங்கள் என்றால், அது எந்த அளவுக்கு சாத்தியம் என்று தெரியவில்லை. உரிமையாளர்களின் கருத்து தெரியவில்லை. எனவே இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து திரைப்பட உரிமையாளர்களுக்குக் கஷ்டம் ஏற்படாமல், நிலைமைகளைச் சமாளிக்க வேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொண்டு, இந்த அளவோடு கருத்தைச் சொல்லி, முடிக்கிறேன்.

* மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட திரைப்படங்கள் முறைப்படுத்துதல் சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கிய அதே நோக்கில், இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றிருக்கின்றார்கள் என்பதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அந்தச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் உரிமை பெறவேண்டிய ஒரு துரதிருஷ்ட வசமான சூழ்நிலைக்கு வரும்படி, தமிழகத்திலே உள்ளவர்கள், திரைப்பட அரங்கை நடத்தி தொழில் செய்துகொண்டிருப்பவர்கள் அந்த உணர்வுக்கு ஆட்படுத்தப்பட்டதை எண்ணி நான் உண்மையிலேயே வருந்துகிறேன். இந்தியா முழுவதும் ஓரே நாடு, ஒன்றுபட்டு வாழ வேண்டும், ஒருமைப்பாட்டு உணர்வோடு வாழ வேண்டும் என்பதில்





இந்தியாவுக்கு வழி காட்டுகின்ற முதல் மாநிலம், தலைசிறந்த மாநிலம் தமிழ் மாநிலம் என்பதை இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விவாதங்களே எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. இல்லையானால், ஒரு மாநிலத்தினுடைய சட்டமன்றத்தில், அந்த மாநில மொழியிலே தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்களைத் திரையிட வேண்டும் என்பதற்கான சட்ட முன்வடிவு வந்து விவாதிக்கப்படுகின்ற நேரத்திலே, வேற்று மொழிப்படங்கள் இங்கே வராமல் தடுக்கின்ற முயற்சியாக இது அமைந்துவிடக்கூடாது என்று சொல்கின்ற உணர்வை, இந்திய ஒருமைப்பாட்டு உணர்வை, தமிழக சட்ட மன்றம் இன்றைக்கு எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கின்றது என்பதை உணர்ச்சி வசப்பட்டு, வன்முறைகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற மற்ற மாநிலங்களிலே இருப்பவர்கள் பாடமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இதிலே மிகுந்த ஆச்சரியம் என்னவென்றால் நீண்டகாலமாக தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும். தமிழ் இனத்திற்கும் வாழ்வளிப்பதையே தன்னுடைய இலட்சியமாகக் கொண்டிருக்கின்ற திராவிடர் இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களும், நமது அருமைமிகு டாக்டர் சனார்த்தனம் அவர்களும் இங்கே வேற்றுமொழிப் படங்கள் வருவதை அல்லது வேற்றுமொழிப் படங்களைப் பார்க்கின்ற உரிமையை மக்களிடத்திலேயிருந்து பறிப்பதாக இந்தச் சட்ட முன்வடிவு அமைந்துவிடக்கூடாது என்று பேசுகின்ற அளவுக்கு இன்றைக்கு இந்திய ஒருமைப்பாட்டை, ஒற்றுமையை வலியுறுத்துகின்ற உணர்வை இந்தச் சட்ட மன்றம் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றது. நல்ல சூழ்நிலையிலே, நல்ல நேரத்திலே, தமிழ் மக்களுடைய உள்ளுணர்வுகளை எடுத்துக் காட்டுகின்ற வகையிலே இந்த விவாதங்கள் அமைந்திருப்பதற்காக நான் உண்மையிலேயே நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இங்கே இதே கருத்திலே விவாதித்தார்கள். வேற்று மொழிப் படங்கள், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி படங்கள், மற்ற மொழிப் படங்கள் தமிழகத்திலே திரையிடப்படுகின்ற ஒரு சூழ்நிலையை நாம் தடுக்க முனைந்தால், அந்த மாநிலங்களிலே இருப்பவர்கள் நம்முடைய படங்கள் திரையிடப்படுவதை ஏன் தடுக்க மாட்டார்கள் என்ற ஒரு வினாவை இங்கே எழுப்பினார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது, இந்த அவையின் மூலம் நாட்டிற்கும் தெரிவித்துக்கொள்வது, தமிழைத் தவிர வேற்றுமொழிகளை, இந்திய தேசிய மொழிகளிலே ஒன்று என்று கருதப்படுகின்ற ஆங்கிலம் உட்பட, எந்த வேற்று மொழிப் படமும், தமிழகத்திலே திரையிடப்படவே கூடாது,

[திரு. இராம. வீரப்பன்] [1984 மார்ச் 6

திரையிடப்படுவது அனுமதிக்கப்படக்கூடாது என்ற குறுகிய நோக்கத்திலே இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படவில்லை. ஆனால் ஒரு உண்மையை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு தமிழ் படங்கள் திரையிடப்பட வேண்டுமென்று வருகின்ற சட்டத்தின் மீது மற்ற மொழிகளுக்காக இங்கே பரிந்து பேசி அதனுடைய உரிமைகளுக்காக வாதாடுகின்ற, இந்தச் சட்டமன்றத்திலே பங்கு ஏற்றுக்கொண்டிருக்கின்றவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். தமிழ் மக்கள் பெங்களூர் நகரத்திலே லட்சக்கணக்கிலே வாழ்கின்றார்கள். பம்பாய் மாநகரத்திலே லட்சக்கணக்கிலே வாழ்கின்றார்கள். டெல்லி நகரத்திலே, கல்கத்தா நகரத்திலே மற்றும் பல நகரங்களிலே, இந்தியாவின் தலைநகரத்திலே, மாநிலங்களில் உள்ள தலைநகரங்களிலே எல்லாம் லட்சக்கணக்கிலே தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அந்த மாநிலங்களிலே உள்ள அரங்குகளிலே ஒரு நாள்கூட தமிழ் படத்தைப் பார்க்க முடியாது என்ற ஒரு சூழ்நிலை வளர்ந்துகொண்டு வருகிறது. அது நிறைவேற்றப்பட்டுக்கொண்டு வருகிறது என்பதை நான் மற்றவர்களுக்குத்

(முற்பகல் 10-30)

தெரிவிக்க விரும்பவில்லை. இந்திய அளவிலே கட்சியை நடத்தி இந்திய மக்களுக்காகத் தங்களுடைய கொள்கைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், இந்தக் கருத்தை மராட்டிய மாநில கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சொல்லி அங்கு ஒரு தீர்மானத்தைப் போடச் செய்யலாம். மராட்டிய மாநிலத்திலே பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள். பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள், தமிழ்மொழி பேசுகிறவர்கள் அதிகமாக வாழ்கிற மூன்றாவது நகரம் பம்பாய் நகரம். அங்கே சில ஆண்டுகளுக்கு முன்னாலே இரண்டு திரையரங்குகள் தமிழ்ப்படங்களைத் திரையிட்டன. ஆனால் இன்றைக்கு ஒரு காட்சி திரையிடுவதற்குக்கூட அங்கே அரங்குகள் இல்லை. பம்பாய் நகரத்திலே தமிழ் மக்கள் தமிழ்ப் படத்தைப் பார்க்க முடியாத ஒரு துரதிர்ஷ்ட நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபோலத்தான் டில்லியிலே, கல்கத்தாவிலே பல நகரங்களிலே தமிழ் மக்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இந்த உணர்வை மற்ற மாநில கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கும் சொல்லி அந்த அந்த மாநில கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் ஆங்காங்கே இருக்கிற தமிழ் பேசுகிற சிறுபான்மை மக்களுக்கு இந்த உரிமையை வாங்கித் தரவேண்டும். காரணம் சிறுபான்மை மொழியினர், சிறுபான்மை இனத்தவர்களது உரிமைகளைப்



1984 மார்ச் 6] [திரு. இராம. வீரப்பன்]

பாதுகாக்கிற மாநிலம் தமிழ் மாநிலம். ஆகவே இங்கே யாரும் அவர்களுக்காக வாதாட வேண்டிய அவசியமே இல்லை, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற அந்த உணர்வை உருவாக்கி அந்த நிலையிலே இவ்வளவு அமைதியாக இருக்கிறோம், இவ்வளவு பொறுமையாக இருக்கிறோம். வாழை ஆடினாலும் வாழைக்குத்தான் சேதம், முள் ஆடினாலும் வாழைக்குத்தான் சேதம் என்று தமிழ் மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவேதான் உணர்ச்சி வசப்படாமல் வன்முறையாளர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது, அவர்களுக்கு ஆதரவு அளிக்கக்கூடாது என்பதை தமிழகம் இன்றைக்கு ஆட்சியிலேயும் சரி, சமுதாய வாழ்க்கையிலேயும் சரி, தொழிலிலேயும் சரி நிரூபித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டமன்றம் தமிழகத்தின்மூலம், தமிழுக்கு மாத்திரம் அல்ல, எல்லா தேசிய மொழிகளுக்கும் நாங்கள் வாதாடுகிறோம் என்பதை நிரூபிப்பதைப்போல, மற்ற சட்டமன்றங்களிலும் இந்த உணர்வை ஏற்படுத்த, அனைத்து இந்திய அளவிலே கட்சி நடத்துகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் போன்றவர்கள் முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எந்த மொழியையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது இந்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கம் அல்ல. ஆனால் தமிழகத்திலே, தமிழ் மக்களுடைய உதவியோடு அரங்குகளை ஏற்படுத்தி தொழில் நடத்துகின்றவர்கள், "நான் தமிழ்ப் படத்தை திரையிட மாட்டேன்" என்று சொல்லுகிற உணர்வைப் பெறுவதற்கு, தமிழ்ச் சமுதாயம், தமிழக அரசு, இந்தச் சட்டமன்றம் நிச்சயமாக இடம் தராது, அந்த உரிமையைப் பாதுகாப்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய அடிப்படை நோக்கம்.

"இதிலே ஒன்பது மாதங்களுக்கு மேற்படாமல்" என்று இருக்கிறதே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு திருத்தத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவர்கள் திருத்திக் கொள்ள வேண்டும். அவசரச் சட்டமாக வந்தபோதும் இதே பகுதிகள்தான் இருந்தன. அதிலேயும், 'not more than 9 months' என்றுதான் போடப்பட்டிருந்தது. அவசரச் சட்டத்திலே 'மூன்று மாதங்கள்' என்று இருந்து, இப்போது 'ஒன்பது மாதங்களுக்கு மேற்படாமல்' என்று மாற்றப் படவில்லை. ஆனால் எப்போது மூன்று மாதங்கள் என்று சொன்னோம் என்றால், இந்தத் தமிழ் மாநிலத்திலே தமிழ் மக்களை வைத்துப் பிழைப்பு நடத்துகிற தியேட்டர் உரிமையாளர்கள், தமிழ் மக்களைக் கொண்டு பிழைத்துக்கொண்டிருக்கிறவர்கள், தமிழ் மக்களுக்கு மதிப்பை அளிப்பார்கள் என்று எண்ணி அரசாங்கம் "ஆண்டிலே ஒரு மூன்று வாரங்களுக்காவது தமிழ்ப் படங்களைப் போடுங்கள்" என்று சொல்லியது. மிகச் சிறந்த திரை

யரங்கு என்று பெயர் பெற்றிருக்கின்ற திரையரங்குகள், அந்தத் திரையரங்குகளிலே, தமிழ்ப் படங்களைப் பார்ப்பதற்கு இந்தத் தமிழன் உரிமை பெறவில்லை. அதற்குக் காரணம் உயர்ந்த திரையரங்கு. அந்த உயர்ந்த திரையரங்கு, தமிழ் நாட்டிலே தமிழன் பார்க்கமுடியாத திரையரங்கு, தமிழ் மொழியிலே படம் பார்க்க முடியாத திரையரங்கு என்று அவர்கள் மறுத்தார்கள். எனவேதான் அரசு ஆணையாகப் பிறப்பித்தது. அவர்கள் உடனே நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றம், "அரசு சட்டத்தின்படி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. ஆகவே ஆணை பிறப்பிக்க முடியாது" என்று சொன்னதனாலே, நாம் இன்றைக்குச் சட்டத்தின்மூலம் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள இந்தச் சட்ட முன்வடிவை இங்கே வைத்திருக்கிறோம். ஆனால், அரசு ஆணை பிறப்பிக்கிறபோது, மூன்று மாதங்கள் என்று சொன்னோம், ஆணை என்பதை சூழ்நிலைகளுக்கேற்ப, நிலைமைகளுக்கேற்ப, அடிக்கடி மாற்றலாம். ஆனால் ஒரு சட்டமாக இடம் பெறுகிற நேரத்தில் அப்படி அடிக்கடி மாறுகிற சூழ்நிலையிலே சட்டத்திலே நாம் பிரிவுகளைச் சேர்க்க முடியாது. சட்டம் என்றைக்கும் இருப்பது. அதனாலேதான் இந்தச் சட்டத்தின்படி ஒன்பது மாதங்கள் என்று நாம் 'mandatory' யாக வைக்கவில்லை. ஒன்பது மாதங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவுக்குள், அரசாங்கம் விரும்புகிற சூழ்நிலைக்கு ஏற்றவாறு, எவ்வளவு காலம் என்று நிர்ணயிக்க முடியுமோ, அப்படி நிர்ணயித்து ஆணை பிறப்பிக்கலாம். இதுதான் இந்தச் சட்டம் அரசாங்கத்திற்குத் தரும் அதிகாரமாகும். இதிலிருந்து யார்மீதும் திணிக்க வேண்டும் அல்லது உரிமைகளைப் பறிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கில்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். நாம் இதைத் தொழிலாகவும் பார்க்கிறோம்; ஒரு வளர்ச்சியின் அடிப்படையிலும் பார்க்கிறோம்; தனியாருடைய உரிமைகளையும் பார்க்கிறோம். இது என்ன, அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமில்லையா? தனியாருடைய உரிமையிலே கை வைப்பதாகாதா என்று கேட்டார்கள். இதிலே எனக்கு இருக்கிற ஆச்சரியமெல்லாம் மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் இப்படி தனி மனிதருடைய உரிமைக்காக வாதாடுகிற ஒரு சூழ்நிலை வருகிறதே என்பதுதான். தனி மனிதன் உரிமை என்று "ஒரு சமுதாயத்தை அழிப்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்வேன்; எனக்கு வெறுப்பு ஏற்பட்டால் ஒன்பது பேரைக் கொலை செய்வேன்" என்று ஒருவன் சொன்னால், அதைத் தனி மனிதன் உரிமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. 'ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன்ஸ்' என்று அரசியல் சட்டத்திலே இருக்கிறது. தனி மனிதன் உரிமை பாதிக்கப்படக் கூடாது. ஆனால் அந்தத் தனி மனிதர் உரிமை என்பதன் மூலமாக சமுதாயத்தினுடைய உரிமைகள் . . .



**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்போது கம்யூனிஸ்ட்கள் எப்போதுமே தனி மனிதர் உரிமைகளுக்கு எதிரானவர்கள் என்ற முறையில் பேசுபவர்கள் போலவும், இப்போதுதான் தனி மனிதர் உரிமைகளுக்கு ஆதரவாகப் பேசுவதுபோலவும் சொல்லுவது சரியல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், மூன்று மாதங்களுக்குக் குறையாமல் காட்ட வேண்டுமென்று நாம் எடுக்கிற உரிமை இருக்கிறதே அதை வேறு காரணங்கள் காட்டி மறுபடியும் அடித்துவிடக் கூடாது என்று சொன்னேனே தவிர, அந்த உரிமையைத் தர வேண்டுமென்று கூறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அவர்கள் பேசுவது தனி மனிதர் உரிமைகளுக்கு விரோதமாக இருந்ததென்ற கருத்தில் நான் சொல்லவில்லை. அவர்கள் எந்தப் பிரச்சினையையும் சமுதாயக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறவர்கள். ஆனால் இந்தப் பிரச்சினையில் மாத்திரம் ஏன் அந்த உணர்வோடு பார்க்கிறார்கள்? இதையெல்லாம் பார்ப்பதற்குத்தான் வழக்கறிஞர்கள் படித்துவிட்டு இருக்கிறார்களே. அவர்களுக்கு இதுதான் வேலை.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அரசுக்கு ஆதரவாகத்தான் சொல்லுகிறார். கோர்ட்டுக்குப் போய் அடிபடக்கூடாது என்றுதான் சொல்லுகிறார்.

***மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றினாலும், அது நீதி மன்றத்திற்கு முன்னால் அடிபடுகிறதா, பாதிக்கப்படுகிறதா என்பதையெல்லாம் பார்த்து, எந்தப் பிரச்சினையையும் அணுக முடியாது. மக்களுடைய நன்மையைப் பாதுகாக்க அரசாங்கங்கள் இருக்கின்றன. மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். இருக்கிற சட்டங்களை வைத்துக்கொண்டு, சில சட்டங்களை நிறைவேற்றுகிறோம். அவை சட்ட விதிகளுக்குள்ளே, ஷரத்துகளுக்குள்ளே வரவில்லை என்று சொல்லும்போது, அதை மாற்ற முயல்கிறோம். சட்டம் அதை ஒப்புக் கொள்கிறதா என்று கேட்டால், ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. இந்திய அரசியல் சட்டம் அளித்துள்ள உரிமைகளை மனதிலே வைத்து, இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு முதன்

முதலில் வழி வகுத்துத் தந்தது வங்காள மாநிலம்தான். அங்கேதான் 'மூன்று மாதங்களுக்கு' என்று உத்தரவு போட்டார்கள். அதற்கு பிறகு கர்நாடகம் அதைக் கடைபிடித்தது. அதையொட்டித்தான் நாமும் சொன்னோம். அங்கேயெல்லாம் வழக்கு மன்றத்திற்குப் போகிறவர்கள் இல்லை. அப்படிப் போனாலும் பொது மக்களே பார்த்துக்கொள்வார்கள் என்ற எண்ணமோ என்னவோ. ஆனால் தமிழ் படம் போட மாட்டேன், தமிழ் மொழியிலே போட மாட்டேன் என்று சொல்கிற ஆணவத்தை தமிழ் நாட்டிலே பிழைப்பை, தொழிலை நடத்திக் கொண்டிருக்கிற தியேட்டர் உரிமையாளர்கள் அந்தப் பெரிய மனிதர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தமிழனுடைய உரிமையை, தமிழ் மொழி பேசும் மக்கள் எவருக்கும் தாழ்ந்தவர்கள் அல்ல என்ற உணர்வை எடுத்துக் காட்டுவதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம். மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள்ளேதான் இப்போது அரசாங்கக் கட்டுப்பாடு இருக்கும். அதுவும் தேவைக்கு ஏற்றபடி. சென்னை நகரத்திலே தான் இது இருக்கிறது; வெளி ஊர்களிலே தமிழ் படம்தானே போடுகிறார்கள் என்றார்கள். நெருப்பு இங்கேதான் பிடிக்கிறது. அது பாயும்போது கடைசி வரை செல்கிறது. இந்த நெருப்பு டவுன் பஞ்சாயத்து அளவிலே பரவ ஆரம்பித்துவிட்டது. எந்தப் படத்தைப் போட்டால் பணம் திரட்டலாம்; எப்படி லாபம் சம்பாதிக்கலாம் என்பதுதான் அவர்கள்—தொழில் நடத்துபவர்கள்—குறிக்கோள். ஆகவேதான் இன்றைக்கு மற்ற மொழிப் படங்களை ஏதேதோ காரணங்களைச் சொல்லிக்கொண்டு போட்டுவிட்டு, தமிழ்ப் படங்களைப் புறக்கணிக்கும் செயலுக்கு, இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ள சிலர் வந்திருக்கிறார்கள். அதனால் திரைப்படத் தொழிலின் பிரதிநிதிகளாக

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-40)

இருக்கின்ற பிலிம் வர்த்தக சபை கேட்டுக்கொண்டதால்தான், அந்த ஆணையைப் பிறப்பித்தோம். அதையே எதிர்த்து தடை பெற்று விட்டார்கள். இந்தத் தொழிலை நடத்துபவர்களின், திரை அரங்குகளின் உரிமையாளர்களின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையில், அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்துகின்ற வகையில், அவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகின்ற வகையிலே இந்தச் சட்ட முன்வடிவு பயன்படுத்தப்பட மாட்டாது. ஆனால் தமிழ் நாட்டில் தமிழ் பேசுகிற மக்களைத் தாழ்த்தி நடத்துவதை, எந்த வகையில் தொழில் நடத்துபவர்களாக இருந்தாலும், இந்த அரசு அனுமதிக்காது. அரசியலமைப்புச் சட்டமும் அதற்கு இடம் வகுக்கிறது.



மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் பேசுகிறபோது, "ஆபாச சுவரொட்டிகள் ஒட்டுகிறார்களே, பெண்களைக் கேவலப்படுத்துகிறார்களே. அதைத் தடுக்க வேண்டாமா?" என்று கேட்டார்கள். ஆபாசம் எது என்று தீர்மானிப்பதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அதற்குள்ளே நுழைந்தால் முடிவு காண முடியாது. ஆனால் அதைத் தீர்மானிக்கிற உரிமை மத்திய சென்சார் போர்டுக்கு இருக்கிறது. அதற்குள்ளே நாம் தலையிட உரிமையில்லை. அங்கே பெண்கள் எல்லாம் இருந்துதான் படத்தைப் பார்க்கிறார்கள். ஒருவேளை படத்தைப் பார்க்கிற அந்தப் பெண்களுக்கு அது ஆபாசமாகத் தெரியவில்லையோ என்னவோ. ஆனால் படங்களை சென்சார் போர்டுக்கு அனுப்பி, அவர்களிடமிருந்து சென்சார் செய்யப்பட்டதற்கான சர்ட்டிபிக்கெட்டை பெற்றுத்தான் படம் திரையிடப்படுகிறது. ஆபாச சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்களைப் பொறுத்தவரையில், தமிழக அரசு அவற்றை மிகக் கடுமையாகக் கவனிக்கிறது. மிக விரைவிலே அவற்றைத் தடுத்து ஒழுங்குபடுத்துவதற்கான சட்ட முன்வடிவினை சட்டமன்றத்திலே இந்த அரசு கொண்டுவர இருக்கிறது. சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கு முன்னாலே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், காவல் துறைக்கு அதற்கான அதிகாரம் இருக்கிறது. அவர்கள் பள்ளிக்கூடங்களில், தொழுகின்ற இடங்களில், இப்படிப்பட்ட வணங்குகின்ற புனிதமான இடங்களில் சுவர்களிலே சுவரொட்டிகள் ஒட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள். அதைத் தடுத்து, நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். அதேநேரத்தில் சுவருக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் சுத்தமாக சுவரை வெள்ளையடித்து போஸ்டர்கள் ஒட்டக் கூடாது என்று அறிவிக்க வேண்டும். அதையொட்டி இச்சட்ட முன்வடிவு விரைவிலே கொண்டு வரப்பட இருக்கிறது. அது கடுமையான அளவிலே வர இருக்கிறது. அதற்கு முன்னாலே புனித இடங்களில், பொது மக்கள், குழந்தைகள், பிஞ்சு உள்ளங்கள் நடமாடுகின்ற இடங்களில் தவறான முறையிலே சுவரொட்டிகள் ஒட்டுவது, விளம்பரங்கள் வைப்பது ஆகியவற்றைத் தடுத்து நிறுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். திரைப்படங்களில் பெண்களையெல்லாம் கேவலப்படுத்துகிறார்களே என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஏன் திரையரங்குகளுக்குப் போகிறார்கள்? வீடுகளுக்கு உள்ளேயே ஆபாசம் வருகிறது. அதுவும் பெண்களாலே வருகிறது. இன்றைக்கு வீடுகளிலே திங்கட்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வரை தினந்தோறும், நாள் தவறாமல் ஏதாவது சஞ்சிகைகள் வந்து விழுகின்றன.

Thirumathi TARA CHERIAN: Mr. Deputy Chairman, I hope you will permit me to say this Two wrongs can never make one right.

வீடுகளிலே தவறு நடைபெறுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் தடுக்க வேண்டும். நான் கார்ப்பரேஷனில் மேயராக இருந்ததால் தெரியும். There are posters on the walls but there are also hoardings on the pavements. Sometimes they are hand in gloves and no action is taken.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஒரு தவறு இன்னொரு தவறுக்குச் சான்றாக அமைந்து விடாது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். நான் சான்றாகச் சொல்லவில்லை. எங்கே தவறு இருக்கிறது, யார் ஆதரிக்கிறார்கள் என்றால், வீடுகளுக்கு உள்ளே ஆபாசக் கதைப்புத்தகங்கள் வரும்போது யாராவது தடுக்கிறார்களா என்பதுதான். அந்தப் புத்தகங்களில் எழுதப்படும் கதை, படம் போன்றவற்றைப் பார்த்து திரைப்படம் எடுப்பவர்களும் இப்படிப் படம் எடுத்தால்தான் ஓடும் போல் இருக்கிறது என்று நினைத்து அந்த வகையில் படம் எடுக்கிறார்கள். மக்களும் அதை ஆதரிக்க முனைகிறார்கள். அங்கேதான் தவறு நிகழ்கிறது. அதற்காக நாம் தவறை அனுமதிக்கக் கூடாது என்றால் கூட, அதற்கும் தடையை ஏற்படுத்தலாம். சட்டத்தின் மூலமாக மட்டுமே நாம் எல்லாத் தடையையும் கொண்டு வர முடியாது. அதை மக்கள் உணர்ந்துதான் திருத்தியாக வேண்டும். அதிலே இன்னும் மிகப் பெரிய வருத்தத்துக்குரிய விஷயம் என்னவென்றால், இந்தக் கதைகளே பெண்களால் தான் எழுதப்படுவதாகச் சொல்கிறார்கள். அல்லது ஆண்களே பெண்களின் பெயரால் அந்தக் கதைகளை எழுதுவதாகச் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு நாட்டிலே அந்த உணர்வு வளர்க்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், ஆங்கிலப் படங்களைப் பார்க்கவிடாமல் தடுக்கிறார்களே, மிகச் சிறந்த நுட்பங்கள் ஆங்கிலப் படத்தில் இருக்கிறதே என்று சொல்கிறார்களே, அவர்களுக்குச் சொல்வேன். சென்னையிலே ஒரு ஆங்கிலப் படம் ஓடுகிறது. வேதனையோடும் வருத்தத்தோடும் சொல்கிறேன். இந்தியாவுக்குள்ளே இறக்குமதி செய்து வினியோகம் செய்திருக்கிறது மத்திய அரசைச் சார்ந்த தேசிய திரைப்பட வளர்ச்சி நிறுவனம். (National Film Development Corporation) அவர்கள்தான் ஆங்கிலப் படங்களை இறக்குமதி செய்து செய்து ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, பெண்களைக் கேவலப்படுத்துவதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் கூடச் சொன்னார்கள். நான் அந்த ஆங்கிலப் படத்தைப் பார்க்கவில்லை. பார்க்கக் கூடிய அளவுக்கு எனக்கு நேரமும் கிடைப்பது இல்லை, அப்படிப் பார்க்க வேண்டிய உணர்விலும் இல்லை. காரணம் நான் ஆங்கிலம் தெரியாதவன், அதனால் அதிலே அக்கறை காட்டுவதில்லை.





**ஓர் மாண்புமிகு உறுப்பினர் :** அமைச்சர் அவர்களுக்கு வயதாகிவிட்டதால் இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அப்படி வயது குறுக்கிடுவதாக எனக்குத் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் வயதானவர்களுக்குத் தான் இதிலே அதிகமாக அக்கறை இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தங்களுக்கு அப்படியொன்றும் வயதாகிவிட்டதாகத் தெரியவில்லை. (சிரிப்பொலி)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அந்த ஆங்கிலத் திரைப்படத்தில்—அதை எந்த அடிப்படையில் எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இங்கேயுள்ள உறுப்பினர்களும் பார்த்திருப்பார்கள். பத்திரிகையாளர்களும் பார்த்திருப்பார்கள்—ஒரு பெண், ஒரு ஆணைத் தேர்ந்தெடுப்பதற்காக, அந்த ஆண்களை வரிசையாக, நிர்வாணமாக நிற்க வைத்துப் பார்த்து, தேர்ந்தெடுக்கிறாள் என்ற ஒரு காட்சி, படமாக்கப்பட்டு காட்டப்படுகிறது. அதைப் பார்ப்பதற்கு மிகப் பெரிய அளவில் கூட்டம் கூடுகிறது. இன்றைக்கும் ஹவுஸ் ஃபுல்-லாக தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது அந்த ஆங்கிலப் படம். இதைக் காட்டுவதற்காகத்தான் தியேட்டர்காரர்களும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் பார்க்கிறபோது, இங்கே தமிழ்ப் படங்களைத் தயாரிக்கிற துரதிருஷ்டசாலிகளையும் நினைத்துப் பார்க்கிறேன். தமிழ்ப் படங்களைப் பார்க்கும்போது சன்னியாசி உணர்வுதான் வருகிறது, சன்னியாசிக்காகத்தான் இந்தப் படங்களைத் தயாரிக்கிறார்கள், நான்கு நாள், மூன்று நாள் கூட ஓடுவதில்லை என்று சட்டமன்றப் பேரவையில் நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். "நல்ல உணர்வுகளைக் காட்டுகிற படங்களைத் தயாரிக்கக்கூடாதா?" என்றும் கேட்டார்கள். தரமான படங்களைத் தயாரித்து, நல்ல உணர்வு பூர்வமான படங்களைத் தயாரித்துக் காட்டினால், சன்னியாசிப் படங்கள் என்று சொல்லி, 'எங்களுக்கு வேண்டாம்' என்று மறுத்துவிடுகிறார்கள். நல்ல போதனை உள்ள படங்கள் வேண்டாமா என்றால், எனக்குத் தேவையில்லை என்று சொல்கிற அந்த உணர்வை இந்தச் சமுதாயத்தில் நாம் தெரிந்தோ, தெரியாமலோ வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு யார் பொறுப்பு என்பதல்ல, எந்தத் துறை பொறுப்பு என்பதல்ல பிரச்சினை. இன்றைக்குத் தமிழ்ப் பத்திரிகைகளில், தமிழ்ச் சஞ்சிகைகளில் படங்கள் அச்சிடப் படுகின்றன. பார்க்கிறோம். அவைகள் ஆங்கிலச் சஞ்சிகைகளிலிருந்து

அச்சிடப்படுகின்றன. அதுவும் அனுமதிக்கப்படுகிறது. தவறுகளை நாம் தேடிக்கொண்டிருந்தால், அதற்கு முடிவே இருக்காது. ஆனால் எப்படியும் தவறைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். அந்த உணர்வுகளைக் கட்டுப் படுத்தியாக வேண்டும். அதற்கான பாதையைக் காட்டியாக வேண்டும். அதற்கு வலிவு மிக்க சாதனமாக இந்தத் திரைப்படத் துறையை, பத்திரிகைத் துறையை நாம் பயன்படுத்தியாக வேண்டும்.

இன்னொன்றைச் சொல்லியாக வேண்டும். எந்தத் திரைப்படத்தில் ஆபாசக் காட்சிகள் வருகின்றனவோ, எந்த ஆங்கிலச் சஞ்சிகைகளில் ஆபாசப் படங்கள் வருகின்றனவோ அவற்றை எடுத்து, தங்கள் பத்திரிகையிலே போட்டு, இந்தப் படம் அந்தத் திரைப்படத்தில் வருகிறது என்று கண்டித்து எழுதுகிறார்கள். 'இந்தப் படம் அந்த ஓவியக் கண்காட்சியில் வருகிறது' என்று எடுத்துக் காட்டுகிற அந்தக் கூத்தையும் நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். மக்களை எப்படி ஏமாற்றுவது, அவர்களுடைய பலவீன உணர்வுகளை எப்படிப் பயன்படுத்தி பணம் செய்வது என்ற உணர்வுதான் அவர்களுக்கு இருக்கிறது.

ஒரு காலத்தில் திரைப்படங்கள் எடுக்கப்பட்டன. காதல் காட்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் அவைகள் எவ்வளவு நாகரிகமாக இருந்தன என்பது நமக்குத் தெரியும். இன்றைக்கு என்ன நிலைமை? 'நியூ வேவ்' என்று சொல்லக்கூடிய புதிய சிந்தனைகள், புதிய தத்துவங்கள் என்ற பெயரால், முழுக்க முழுக்க நம்முடைய பண்பாட்டைச் சிதற அடிக்கிற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்ட படங்கள் எப்படிப்பட்ட வரவேற்பைப் பெற்றிருக்கின்றன என்று சொன்னால், இப்போது சமீபத்தில் வெளியாகி விமரிசனத்திற்கு ஆளாகியிருக்கிற படத்தை பெண்கள்தான் அதிகமாகப் பார்க்கிறார்கள் என்று புள்ளிவிவரம் கூறுகிறது. அந்தப் படம் மாதக் கணக்கில் ஓடுகிறது. அது எப்படிப்பட்ட படம், எங்கே ஓடுகிறது என்ற விபரத்துக்குள் நான் நுழைய விரும்பவில்லை. ஆனால் அந்தப் படத்தைப் பார்க்கிறவர்களின் தொகை, ஆண்களை விட பெண்கள்தான் அதிகம். அதுவும் குடும்பத்தோடு பார்க்கிறார்கள். ஆகவே, எங்கே ஆபாசம் இருக்கிறது என்பதைத் தீர்மானிக்க முடியாத ஒரு நெருக்கடியான நிலையில், இருட்டுக்குள்ளே இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரைப்படத் துறையைப் பாதுகாக்க வேண்டும், அப்படிப் பாதுகாக்கிற முயற்சியில் அரசு நிச்சயம் ஈடுபடும். இந்தக் கருத்துக்களை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதால், அது தொடர்பான கருத்துக்களைச் சொல்கிறேனே தவிர வேறல்ல. அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன்.



மிழகச் சட்டமன்றத்திலேதான் வேற்று மொழிக்காரர்களையும் பாதுகாக்கிற வாதம் நடக்கிறது என்று இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்கள், சட்ட ன்றங்கள், மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

(முற்பகல் 10-50)

வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற தமிழ் மாநிலம், வழி காட்டிக் கொண் ருக்கிற தமிழ் மக்கள், வழி காட்டிக் கொண்டிருக்கிற தமிழகச் சட்ட மன்றம் . . .

Thirumathi TARA CHERIAN: Mr. Deputy Chairman, on a point of information, before the Amending Bill is passed, may I ask a question of the Hon. Minister? I think the Hon. Minister has stated that there are lakhs and lakhs of Tamilians in Bombay and that they are not able to witness Tamil films. Most of them are well-placed and are in a very good position. Is it the Government there that has not allowed them to see Tamil films? There is the big Shanmugananda Hall and other places where the Tamilians could gather together. If they are so patriotic or so attached to Tamil language and culture, they can have their own programmes. Have the Government in that State objected to any such activity? Have they not allowed Tamilians to see Tamil films? I hope the Hon. Minister will be able to answer me. For what reason are our pictures not exhibited or wanted? Is it because those films are not playing to the gallery? Is it because our actors or actresses are not liked? Some of our Tamil actresses have gone over to the Hindi cinema world. What is the reason for our Tamil pictures not being popular there? I also want our Hon. Minister to tell us the number of Tamil films which are exported to places like Singapore, Malaysia and other eastern countries where our films are very much appreciated. Even in countries like U.S.S.R. our films are much appreciated. The information will be an enlightenment to us before the Amending Bill is passed.

Mr. DEPUTY CHAIRMAN: Probably this is a very long question of the hon. Lady Member, trying to get information on 'why' and 'where' of the film industry. Most probably the Hon. Minister may also take his own time and tell the House all information through a long answer. But I think the Hon. Minister may explain them to the hon. Member on a separate occasion.

இது இந்த மாநில மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பிரச்சினைதான். ஆகவே நான் இதற்குள் நுழைந்து பதில் சொல்ல ஆரம்பித்தால் நேரம் இருக்காது. மேலும் பல சட்ட முன்வடிவுகளை இந்த அவை இங்கே நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. எனவே நான் இந்தப் பிரச்சினைக்குள் அதிகமாகப் போக விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பம்பாய் நகரத்தில் அரசாங்கம் தடைப்படுத்தியதா என்றால் இல்லை. அங்கே அரசாங்கம் தடைப்படுத்தவில்லை, தடைப் படுத்தவும் முடியாது. ஆனால் இலாப நோக்கத்தோடு, அதையே குறிக் கோளாகக் கொண்டிருக்கிற கொட்டகை உரிமையாளர்கள் அந்த மக்களுடைய பெயரைச் சொல்லி இன்றைக்கு மூழ்கடித்துவிட்டார்கள். நஞ்சை வயலாகத் தான் இருந்தது. ஆனால் கரை புரண்டு வந்த வெள்ளம் நஞ்சை வயலையே மண்மேடாக ஆக்கிவிட்டது. அந்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்துவதுதான் இந்தச் சட்டம். ஒரு காலத்தில் இம்மாதிரியான ஒரு முன்மாதிரி, ஒரு விழிப்புணர்ச்சியில்லை என்றால் தமிழ் நாட்டிலேயேகூட தமிழ்ப் படத்தைக் காட்டுவதற்கே அரங்குகள் இல்லாமல் போய், கிராமப்புறங்களுக்குப் போகிற துரதிருஷ்டம்கூட வரலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து உணர்ந்துகொள்ள வேண்டும்.



காரணத்தால் வந்தாலும், அவைகளை நீக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்ற உணர்வின் அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொழிலைப் பாதிக்காத வகையில் அமைந்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். தேசிய ஒருமைப்பாட்டிற்கு உரிய நோக்கத்தோடு, அதைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். ஆனால் ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமிழ் படம் தயாரித்தால்தான் அதைத் திரையிடுகிற நிலை இருக்க முடியும். தயாரிப்பிலேயே சில சிரமங்கள் வந்திருக்கின்றன. திரு. எஸ். எஸ். சந்திரன் போன்றவர்கள் எல்லாம் படப்பிடிப்பை நடத்த முடியாது வந்த கட்டத்தையொட்டி இப்போது ஒரு செய்தி வந்திருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கர்நாடக முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அரசியல் பாதுகாப்புச் சட்டத்திலே இடமிருந்தால், வெளி மாநிலங்களில் கன்னட மொழிப் படப்பிடிப்பு நடைபெறுகிறபோது, கன்னட நடிகர்களுக்குக் காவல் துறைப் பாதுகாப்பு ஏற்பாடு செய்து தருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் போலவே நம்முடைய மாநிலத்தில் செய்ய முடியாதா? வி.ஐ.பி. போகிற போது அவர்களுடன் பாதுகாவலர்கள்தான் போகலாம், காவல் துறையினர் போக முடியாது. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திற்கு அப்படி அரசியல் சட்டம் இடம் அளித்தால் தமிழ் நாட்டிற்கும் இடமளிக்கும், தமிழ் மக்களுக்கும் இடமளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

[மேலவைத் துணைத் தலைவர்] [1984 மார்ச் 6

பிரிவுகள் 2 மற்றும் 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1984).**

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

@ 214 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1984 மார்ச் 6] [மேலவைத் துணைத் தலைவர்]

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு, சுமார் 400 அபெக்ஸ் கூட்டுறவு சொசைட்டிகளின்கீழ் ஸ்பெஷல் ஆபிசர்களாக உள்ளவர்களின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ளது. இப்படி தொடர்ந்து பல வருடங்களாக தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கக் கொண்டுவரப்படுகிற சட்ட முன்வடிவு தமிழக அரசுக்கு கௌரவம் அளிக்கக் கூடியதாக இல்லை என்பது என்னுடைய கருத்து. ஏற்கெனவே நான் இந்த அவையில் இதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் சட்டமன்றங்களைத்தவிர பல மட்டங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு பிரதிநிதிகள் வரக்கூடிய அளவிற்கு சட்டங்களில் இடமிருந்தும் அந்தத் தேர்தல்கள் நடத்தப்படாமல் தேர்தலைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வருகிறது இந்த அரசு. இப்போது இச்சட்ட முன்வடிவின் "ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்" என்ற பகுதியில், "விதிகளை இயற்ற காலம் தேவைப் படுகிறது" என்று கூறியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கச் சட்டங்களையெல்லாம் ஒருங்கிணைத்து "இன்டகிரேடெட் ஆக்ட்"-ஆக கொண்டு வருவதற்காக கூட்டுறவுச் சட்ட முன்வடிவு ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு, இரண்டரை ஆண்டுக் காலமாக விவாதிக்கப்பட்டு சட்டமாக ஆக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தின்கீழ் விதிகளை இயற்ற அந்த ஆய்வுக் குழுவிற்கு அதிகாரம் இல்லையென்றாலும்கூட, இச்சட்டத்தின்கீழ் விதிகளை இயற்றும்போது, ஆய்வுக் குழு உறுப்பினர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுப்போம் என்று முன்பிருந்த கூட்டுறவுச் சட்ட அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது விதிகள் இயற்றப்படும் என்று கூறியிருக் கிறார்கள். அந்த விதிகள் இயற்றப்பட்டனவா, இல்லையா என்பது தெரிய வில்லை. விதிகளை இயற்ற பல மாதங்கள் ஆகும் என்பதால் மேலும் ஆறு மாதங்களுக்கு தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே தமிழ் நாட்டிலுள்ள பத்தாயிரக் கணக்கான கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுகின்றன. இந்த விதிகள் இயற்றப்பட்டால்தான், அங்கே தேர்தலை நடத்த முடியும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதற்கு ஆறு மாதங்கள் தேவைதானா? பஞ்சாயத்துத் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் சட்டத்தில்

மூன்று மாதங்கள் என்று போட்டுவிட்டு, தேவைப்பட்டால் அதை இரண்டு மாதமாகக் குறைத்து ரத்து செய்ய அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். மேலவைத் தேர்தல் கூட்டத்தில் பேசும்போது ஆசிரியர்

(முற்பகல் 11-00)

தொகுதிக்கு இப்போதைய சட்டத்திலே பயிற்சி கொடுப்பதற்குக் கூட கால அவகாசம் வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் பேசினார்கள் என்பதாக பத்திரிகையில் நான் பார்த்தேன். அப்படி நம்முடைய அதிகாரிகள் கூட்டுறவுத் திட்டங்களை அமுல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதிலே சில மாற்றங்கள் செய்வதற்கு மாதக்கணக்கான பயிற்சி தேவையில்லை என்பது என்னுடைய கருத்தும் கூட. ஆகவே ஆறு மாதம் என்பதைக்கூட மூன்று மாதமாகக் குறைத்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வந்தால், எங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். அப்படி அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு, இந்த ஆறு மாதத்திற்கு மேல் போகாது என்றால் நல்லது. ஏனென்றால் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் இது மினி ஜெனரல் எலக்ஷன் மாதிரி இருப்பதால் ஓட்டுப் போடுவதில் பிரச்சினைகள் வரலாம் என்று கூறலாம். ஆனால் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருப்பதன் காரணமாக இதாவது கடைசி ஒரு தவணைக் கட்டமாக இருக்குமா என்று நான் கேட்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த நேரத்திலே வேறு ஒரு விஷயத்தையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அரசு விவசாயிகளுடைய பிரச்சினைகளைக் கவனிப்பதற்காக ஆளும் கட்சியைச் சேர்ந்தவரும், முன்னாள் சட்டமன்றப் பேரவையின் தலைவருமான திரு. முனு ஆதியின் தலைமையில் ஒரு விவசாய உயர்மட்டக் குழுவை நியமித்திருக்கிறார்கள். அந்த விவசாய உயர்மட்டக் குழு விவசாயி யினுடைய கூட்டுறவுக் கடன் சம்பந்தமாக ஏகமனதாக தீர்மானித்திருக்கிறது. அதாவது சிறு விவசாயிகளுக்கு அவர்கள் பெற்றிருக்கிற கடனையும், வட்டியையும் முழுவதுமாகத் தள்ளுபடி செய்வது, நடுத்தர விவசாயிகளுக்கு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து, வட்டியையும், முதலையும் தவணைகளில் வசூலிப்பது, பணக்கார விவசாயிகளைப் பொறுத்தமட்டிலும் அபராத வட்டியை மட்டும் தள்ளிவிட்டு, வட்டியையும், முதலையும் வசூலிக்க அரசு முன்வர வேண்டும். இப்படிச் சலுகை கொடுத்தால், மொத்தம் 60 கோடி ரூபாய்தான் விவசாயிகளுக்குச் சலுகை அளித்ததாக ஆகுமென்று கூறி, சர்வ கட்சிகளையும் கொண்ட அந்த விவசாய உயர்மட்டக் குழுவிலே, தலைவர் திரு. முனு ஆதி தலைமையிலே ஏகமனதாக செய்யப்பட்ட அந்த சிபாரிசு



இப்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனையிலே இருக்குமென்று நினைக்கிறேன். அது சம்பந்தமாக அரசு ஒரு சாதகமான முடிவை சீக்கிரம் எடுக்க வேண்டுமென்று நான் விவசாயி களின் சார்பிலே விண்ணப்பித்துக்கொள்கிறேன். மேலும் அமைச்சர் அவர்கள் இந்த ஆறு மாதம் என்பதை மூன்று மாதமாகக் குறைத்துக்கொள்வதற்கு முன்வந்தால் அல்லது ஆறு மாதத்தை, மூன்று மாதத்திற்குள் முடித்து விட்டால் நல்லது. அதற்குள்ளாகவே எலக்ஷனை நடத்தி விடுகிறோம், ஸ்பெஷல் ஆபீசருடைய பதவிக் காலத்தை நீட்டிக்கவேண்டிய அவசியமில்லை என்று கூட அவர்கள் வாக்குறுதி கூற முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தாமலேயே காலம் கடத்த இடம் தரக் கூடிய மசோதாக்களை அடுத்தபடியாகவாவது இந்தச் சட்டமன்றத்திற்குக் கொண்டுவர வேண்டாமென்று கேட்டு அமைகிறேன்.

*** திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுக்கு தனி அதிகாரிகள் எந்த எந்தத் துறையில் இருக்கிறார்களோ—உள்ளாட்சித் துறை, கூட்டுறவுத் துறை—அங்கு அவர் களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கிற திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்து பழக்கமாகிவிட்டது. ஆகவே ஆட்சியிலுள்ளவர்கள் இருக்கிற இடத்திலே ஏற்பட்ட சங்கடம் தானோ என்னவோ? காரணங்களை நான் அறிய விரும்பவில்லை. ஆனால் ஜனநாயகம் என்பது மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடத்துவதில் மட்டும் இல்லை. ஜனநாயகத்தினுடைய வேர்கள் அல்லது சல்லி வேர்கள் என்று சொல்லக் கூடிய—ஆங்கிலத்தில் 'கிராஸ்ரூட்ஸ்' என்று சொல்கிறார்கள்—தன்மையை நாம் நடைமுறைக்குக் கொண்டுவரா விட்டால், ஆபத்து. அதனாலே கால நீட்டிப்புக்காகக் கொண்டு வந்துள்ள திருத்தத்திற்கு நான் என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவது, தனி அதிகாரிகள் பழக்கத்திலே கட்டுத் திட்டங் களுக்கு உட்படாத நிலையில் பல தவறுகளைச் செய்யலாம். அதைத் தட்டிக் கேட்பதற்கு வழி இல்லை. எவ்வளவுதான் வழி முறைகள் இருக்கின்றன என்று சொன்னாலும், தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் நடக்கக் கூடிய ஒவ்வொன்றையும் புகாராகக் கொண்டுவந்து அதற்கு நிவாரணம் காண்பது கஷ்டம். பல இடங்களிலே தனி அதிகாரிகள், கிட்டத்தட்ட தனி ராஜ்யமாக நடந்து கொண்டிருக்கிற குறைபாடு இருக்கிறது. நான் தனி அதிகாரிகள்மீது கோபத்தினாலோ, ஏதாவது குரோதத்தினாலோ கூறவில்லை. ஆனால் நடைமுறையில் சில இடங்களில் தனி அதிகாரிகள் அப்படித் தவறாக நடந்து

கொள்கிறார்கள். இருப்பினும் அனுபவத்தில் நடைமுறைப் பழக்கத்தில், யாருக்கு அதிகாரம், செல்வாக்கு இருக்கிறதோ அவர்கள் மூலமாக காரியங்கள் நடக்கின்றன. இது நாட்டு நடப்பு." அந்த முறையிலே இந்த கூட்டுறவுக் கோட்பாடு இருக்கிறது. நடைமுறையில் அந்தக் கோட்பாடே சிதற அடிக்கப் படுகிறது. இன்னும் சாகடிக்கப்படவில்லை. அது சிதற அடிக்கப்படுகிறது. இது மிகவும் ஆபத்தான போக்கு. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் 'மூன்று மாதம்' என்று கால நிர்ணயம் கேட்டார்கள். நான் மூன்று மாதம் என்று கேட்கவில்லை. அந்தத் தேர்தல்கள் எப்போதுதான் நடக்கும் என்று சொல்ல வேண்டும். அதற்கு ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும் என்று சொல்கின்றேன். இந்த அரசுக்கு இந்தத் தேர்தல்கள் எப்போது நடத்தப்பட இருக்கின்றன என்பதிலே ஒரு உறுதி இருக்கிறதா? ஏனென்றால், ஆய்வுக் குழு போட்டு பல இடங்களிலே சுற்றிப்பார்த்து இரண்டு வருடங்கள் அல்ல, மூன்று வருடங்கள் ஆயிற்று. சட்டம் வந்து சில மாதங்கள் ஆயிற்று. விதிகள் வருவதற்கு எத்தனை மாதம் ஆகும் என்று தெரியவில்லை. அரசு எப்போது தேர்தல்களை நடத்தும் என்ற ஒரு உறுதியை, வாக்குறுதியை நான் எதிர்பார்த்து அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றிச் சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். தனி அலுவலர்களுடைய பதவிக் கால நீட்டிப்பு, இந்தச் சட்ட விதிமுறைகளை நெறிப்படுத்துவதற்காகத் தேவைப்படுகிறது என்ற நிலையை நாம் ஏற்றுக்கொள்கிறோம். கூட்டுறவுச் சட்டத் திருத்தத்தைப்பற்றி ஆய்வு செய்த குழுவிலே ஒரு உறுப்பினனாக இருந்த முறையிலே சொல்கிறேன். அதிலே பல திருத்தங்கள் தேவைப்பட்டன என்பதை அனைவரும் உணர்வோம். அவைகளை எங்களைச் சந்தித்த பொதுமக்களும் வலியுறுத்தினார்கள். இப்போது ஒரு முறைப்படுத்தி, மீண்டும் உறுப்பினர்களுடைய பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கும் நிலையில், மீண்டும் ஒரு செலக்ட் கமிட்டி கூட்டத்தைக் கூட்டி, அதிலே எல்லோருடைய கருத்தையும் அறிந்து, எல்லோருடைய பார்வைக்கும் அது வைக்கப்பட்டு, ஏற்கப்பட்டு, குறிப்பிட்ட அந்த ஆறு மாத காலத்திற்கு முன்னேயேகூட இதை நடைமுறைப்படுத்த முடியுமானால், அப்படிச் செய்யலாம் என்பதை ஆலோசனையாக வழங்குகிறேன். இந்த அளவிலே நான் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

Thirumathi TARA CHERIAN: Mr. Deputy Chairman, the Hon. Minister has moved this Amending Bill seeking extension of term of office of the Special Officers for a further period of a few





months. It is necessary, I understand that. At the same time, the election of office-bearers to the Co-operative Societies has got to be done early. I am confident that the Government will carry out their assurance.

I must congratulate the Government on the way in which they have given incentives and momentum to this movement so that a larger number of co-operative societies may be formed in Tamil Nadu. This has helped the people in all fields like weaving and farming to enjoy the fruits of this movement. The Government have done wonderful work. This good work would be more useful if there are elected office-bearers to the Society. People may not believe; but from my childhood, I was very much interested in co-operative movement. So long as the Special Officers are allowed to continue, they should be asked to do their work in an efficient manner.

My hon. Friend Thiru Ramalingam is not here now and he is the Chairman of the Co-optex Organisation. Though many co-operative institutions have come into existence, sometimes I feel sorry to find that the Co-operative Societies indulge in mixing of yarn and this does not bring credit to the Societies. Whether it is silk or hand-loom, there must be strict supervision to see that there is no dilution in standards and there is no mixture of yarn. The Handloom Co-operative Societies are getting profit but the private firms make more profit because they stick to exact standards in quality of the material Koranad sarees are known for their pure silk content. There should not be mixtures. It is the bounden duty of the Special Officers, till elected representatives take charge, to exercise strict supervision on manufacture, the result of which will reflect in the good name of the Society. Otherwise, private business people will steal a march over the co-operative societies.

There are a number of women and at the time of election, they should also be given opportunity to participate in the functioning of the Society. Especially, in the field of designs for cloths, we can utilise many women, including College students. Our Bleeding Madras had a good name. There is necessity for strict supervision so that we may have a good market not only in Tamil Nadu but in all the States. Thank you, Sir.

(முற்பகல் 11-10)

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையினுடைய தனி அதிகாரிகளுடைய கால நீட்டிப்பையொட்டிய இந்தச் சட்ட முன்வடிவையொட்டி சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே இந்தச் சட்ட முன்வடிவு தவிர்க்க இயலாத ஒன்றாக வந்திருக்கிறது என்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையினுடைய பொறுப்பினைப் புதியதாக ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, சிலவற்றைச் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகின்றேன். இதுபற்றிய பொறுக்குக் குழு கூட்டுறவுத் துறையினுடைய முழுமையான சட்ட முன்வடிவைத் தயாரிப்பதற்கு ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் ஆயிற்று. ஆனால் அந்தச் சட்ட முன்வடிவைத் தயாரித்த பொறுக்குக் குழுவிலே மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் கொடுத்த வாக்குறுதி, அந்தக் குழுவினுடைய முடிவுக்கேற்ப சட்ட முன்வடிவு நிறைவேறிய உடனே, அதற்கான விதிகளும் முழுமையாக நிறைவேறுகிற அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்பதுதான். அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கிருக்கிற உரிமையிலே இன்னொன்றையும் சொன்னார்கள். பொறுக்குக் குழுவிலே வாக்குறுதி என்ற அளவிலே இல்லாவிட்டாலும்கூட, உரிமையோடு சொன்னார்கள். "இந்தப் பொறுக்குக் குழு சட்ட முன்வடிவைச் சிபாரிசு செய்வதோடு இதனுடைய பணி முடிந்துவிடுகிறது என்றாலும்கூட, விதிகளைப் பொறுத்தவரையிலும், துறை விதிகளைத் தயாரித்த பிறகு, மீண்டும் இதே உறுப்பினர்களோடு, உட்கார்ந்து பேசுகிற ஒரு வாய்ப்பினை நாங்கள் தருகின்றோம். அப்போது இந்தக் குழுவினுடைய எண்ணத்திற்கேற்ப விதிகள் அமைந்திருக்கின்றனவா என்று பரிசீலனை செய்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும்" என்றுகூட தெரிவித்தார்கள். அவர்கள் அளித்த உறுதிக்கேற்ப மீண்டும் அதிகாரபூர்வமற்ற முறையிலே உறுப்பினர்கள் கூடுகிற வாய்ப்பு ஏற்படாவிட்டாலும்கூட, மூன்று நாட்களுக்கு முன்னதாக இந்த விதிகள் முழுமையாகக் கிடைத்திருக்கின்றன. ஆனால் 15 ஆம் தேதிக்குள்ளாக உறுப்பினர்களுடைய கருத்துக்களை அதன்மீது தெரிவிக்கச் சொல்லியும் வந்திருக்கிறது. ஏறத்தாழ 400, 500 பக்கங்கள் இருக்குமென்று நினைக்கின்றேன். ஆகவே சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்தக் காலத்திலேயே 15 ஆம் தேதிக்குள்ளாக இந்தப் பணியை எப்படி அந்தப் பொறுக்குக் குழுவிலே பணியாற்றியவர்கள் நிறைவேற்ற முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு கருத்துக்கு ஏற்பதான் விதிகளைத் தயாரிக்க வேண்டுமென்பது அல்ல. பொறுக்குக் குழுவில் நடைபெற்ற விவாதங்களைப் பார்த்தால் தெரியும். பல பொருள்களிலே ஒரு திட்டவட்டமான முடிவை எடுக்க வேண்டுமென்ற எண்ணமும், சில நேரங்களில் துறையினரோடு வெகுவாக மாறுபடுகின்ற நிலையில் கூடவிருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், துறையினருக்கும்



மாறுபட்ட கருத்துக்களும் இருந்து விவாதம் நடைபெற்றது. ஆகவே அந்த அடிப்படையிலே சட்ட முன்வடிவைத் தயாரித்தபோது பலவற்றை முழுமைப் படுத்தவேண்டும் என்றால், இந்தச் சட்டமே அதை முழுமைப்படுத்திவிட முடியாது, விதிகள்தான் அதைச் செய்ய முடியும் என்ற உணர்வு மூன்று தரப்பாராலும் ஏற்கப்பட்டு, அந்த அடிப்படையிலேதான் அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய முடியும் என்ற ஒரு கருத்து இருந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ இந்த விதிகள் தயாரிப்பிலே காலதாமதம் ஆகியிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனென்றால், இந்த விதிகளை எப்படித் தயாரிப்பது, எந்த முறையிலே அவை அமைய வேண்டுமென்பதைப்பற்றி ஒவ்வொரு முறையும் பொறுக்குக் குழுக் கூட்டம் நடந்தபோது, விவாதங்கள் நடைபெற்றன. இன்னும் சொல்லப்போனால், பொறுக்குக் குழுவிற்கு தலைவராகப் பொறுப் பேற்றிருந்த அன்றைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் "விவாதங்கள் நடைபெற்று, சட்ட முன்வடிவு தயாராகும் அதே நேரத்திலே, விதிகளையும் தயாரிக்க வேண்டும்; அப்போதுதான் கோஆர்டினேஷன் இருக்கும்" என்று சொன்னார்கள். எப்படி இருந்தபோதிலும், விதிகள் தயாரிக்கப்பட்டு, உறுப்பினர்களுடைய பரிசீலனைக்கு அனுப்பியதற்காக, துறைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற ஒரு நிலைமையை மாண்புமிகு அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கால நீட்டிப்பு வேண்டுமானால் தவிர்க்க முடியாததாக இருக்கலாம். கால நீட்டிப்பு இதோடு முடிந்துவிட்டால் பரவாயில்லை. இன்றைக்கு தமிழகத்திலே கூட்டுறவுத் துறையிலே வளர்ந்திருக்கிறோம். அதிலே யாருக்கும் கருத்து மாறுபாடு கிடையாது. கூட்டுறவுத் துறையில் மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்திலே அதிகமான நன்மைகளைச் செய்ய முடிகிறது. ஆனால் இன்றைக்கு இருக்கிற ஒரு நிலைமை என்னவென்றால், கூட்டுறவுத் துறையினுடைய அடித்தளம் இயங்கவில்லை என்பதுதான். அதிலே ஜனநாயகம் இல்லை என்பது ஒரு பக்கம். இன்னும் ஒன்று, It is not working at all; it is not active கிராமப்புற கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக விவசாயிகளுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு, சிறு நிலம் படைத்தவர்களுக்கு, ஏழைகளுக்கு உதவு கின்றவையாக இருந்தன. அவை இன்றைக்கு இயங்கவில்லை. 'டோடல் டர்ன்ஓவர்' என்ற அளவிலே மொத்தமாகக் கூட்டுறவுத் துறையிலே எந்த அளவுக்குக் கடன் வாங்குகிறார்கள், எவ்வளவு திரும்பச் செலுத்துகிறார்கள் என்ற கணக்கை எடுத்துப் பார்த்து, அது குறையவில்லை, அதிகமாகிக் கொண்டிருக்கிறது, ஆகவே இயங்குகிறோம் என்று சொல்லுவது பேப்பர்

அளவிலே சரியாக இருக்கலாம். ஆனால் கிராமப்புறங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கவில்லை. அதனால் கிராமப்புறங்கள் வளர்ச்சி அடையாமல் நின்றுவிட்டன. வேகம் வேகமாக கிராமங்களிலே, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மளிகைக் கடைகளை நடத்த ஆரம்பித்தன. மக்களுக்குத் தேவையான இன்றியமையாத பொருள்களை வழங்கும் பொறுப்பை அவை ஏற்றுக்கொண்டு செயல்பட்டன. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை என்றால், அவை கொஞ்சம் கொஞ்சமாக முடங்கிக் கிடக்கின்றன என்பதுதான். அதைப்போலவே ஹவுசிங் சொசைட்டீஸ். எல்லா இடங்களிலும் வேகம் வேகமாக அதை அமைத்தார்கள். பல நகரங்களிலே, செமி அர்பன் சிட்டீஸ் ஆகியவற்றில் பெரும்பாலும் இந்தக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வீடுகள் அமைக்கும் திட்டம் வெற்றிகரமாக நடந்தது. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? அவையெல்லாம் முடங்கிப் போய்விட்டன. கூட்டுறவுத் துறையில், we are doing it in an authoritarian way and in a dictatorial way.

இன்றைக்கு சென்னை நகரத்தில், டி.யு.சி.எஸ்.-ன் காமதேனு மிகப் பெரிய நன்மையைச் செய்துகொண்டிருக்கிறது. அதில் மாறுபாடு இல்லை. ஆனால் அந்த நிறுவனம் கூட்டுறவுத் துறையின் மூலமாக இயங்குகிறதா என்றால், கூட்டுறவுத் துறை என்ற பெயரிலே அதிகாரிகள் மூலமாக இயங்குகிறது. அதன் உறுப்பினர்கள், அங்கே சில சலுகைகளை வேண்டுமானால் பெறலாம். ஆனால் அவர்கள் அங்கே உறுப்பினர்களாக இயங்க வாய்ப்பு கிடையாது. அதைப்போலவே இன்றைக்கு கூட்டுறவு என்ற பெயராலே டிரான்ஸ்சீர்க்ஷன்கள் நடந்து கொண்டிருக்கலாமே தவிர, அவை கூட்டுறவு முறையில் இயங்கவில்லை. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதைப்பற்றிப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இதற்கான நடவடிக்கைகளை துரிதமாக, வேகமாக, உறுதியோடு எடுக்கவில்லை என்றால், ஆறு மாதங்களில் தேர்தல்களை நடத்த முடியாது. அதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகளை அறிவித்துவிடுவது நல்லது. காரணம், கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையிலும், தேர்தல்களை நடத்துவது என்பது ஏறக்குறைய பஞ்சாயத்துக்களுக்கு தேர்தல்களை நடத்துவது போலத்தான். அந்த அளவிற்குப் பரந்த நிலை இல்லை என்றாலும், வாக்காளர் பட்டியல் எல்லாம் தயாரித்து, செய்ய வேண்டும். எனவே ஆறு மாதத்திலே அவர்கள் பதவிக் காலம் முடிகிறதென்றால், அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே தேர்தல்களை நடத்தி முடிக்க வேண்டும். ஆகவே இடையிலே இருப்பது ஐந்து மாத காலம். ஐந்து



(முற்பகல் 11-20)

மாத காலத்திற்குள்ளே பரிசீலனையிலிருந்து தேர்தலுக்கான ஆயத்த வேலைகள் எல்லாவற்றையும் முடிக்க வேண்டும். தேர்தலுக்கான ஆயத்த வேலைகளுக்கு மட்டும் ஒரு மாத காலம் ஆகும். கிட்டத்தட்ட 1½ மாத காலம் சட்டமன்றக் கூட்டம் நடைபெற இருப்பதால், இந்தக் காலத்தில் எந்த ஒரு வேலையும் நடக்காது. இரண்டரை மாத காலத்தில் இது நடைபெற்றாக வேண்டும். ஆனால் இவ்வளவு காலத்திற்குள் எப்படி நடத்த முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. தேர்தலை நடத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த அவையிலேயே தனிப்பட்ட முறையில் நான் பாராட்டுவேன். திசை திருப்புவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. எப்படியும் இதனை நிறைவேற்றியாக வேண்டுமென்ற உணர்வு இருந்தாக வேண்டும். பொறுக்குக் குழு கூடியது. அது நிறைவேற்றியது. அந்தச் சட்ட முன்வடிவு அவைக்கு வர மட்டும் ஆறு மாத காலம் ஆயிற்று. பொறுக்குக் குழு நிறைவேற்றிய சட்ட முன்வடிவின் அடிப்படையில் இவைகளை துறை செயல்படுத்தவே இவ்வளவு காலம் ஆயிற்று. இனிமேல் மற்றவர்களுடைய பரிசீலனை வேறு இருக்கிறது. அதற்குப் பிறகுதான் இது முழுமை அடைய வேண்டும். அதற்குப் பிறகு அரசின் அங்கீகாரம் வர வேண்டும். அதற்குப் பிறகுதான் தேர்தலை நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை துறை எடுக்க முடியும். இதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, ஒரு துறையினுடைய அடித்தளமே வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது, அல்லது சீர்கேடு அடைந்திருக்கிறது, அல்லது இயங்காத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனுடைய சீரிய நோக்கங்கள் அடித்தளத்தில் இருக்கின்ற மக்களை அடையாமல் இருக்கின்றன. அந்த அடிப்படையில் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு எப்படியாவது ஆறு மாத காலத்திற்குள் தேர்தலை நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்க வேண்டும். அதற்கேற்ற வகையில் துறையை வைத்துக் கொள்ள வேண்டும். இன்னொரு சங்கடம் இருக்கிறது. தேர்தலை பெருவாரியாக நடத்த முடியாமல் இருப்பதற்கு மற்றொரு காரணம் பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள், தேர்தல் அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். பொறுக்குக் குழுவுக்கு வந்ததற்குப் பிறகு மூன்று, நான்கு தேர்தல் அதிகாரிகள் மாறியிருக்கிறார்கள். அதுபோல் இரண்டு, மூன்று செயலாளர்கள் மாறியிருக்கிறார்கள். ஆகவே இதற்கு யாராவது கண்டிப்பாகப் பொறுப்பேற்க வேண்டும். இப்படி அந்த அதிகாரிகளை அடிக்கடி மாற்றுவதால், அவர்கள் யாரும் பொறுப்பேற்பதில்லை. எப்படியும் ஆறு மாதத்திற்குள் தேர்தலை நடத்துவோம் என்கிற முறையில் உணர்வு

பூர்வமாகச் செயல்பட்டாக வேண்டும். அப்படிச் செயல்பட்டால்தான், இந்த ஆறு மாதம் முடிந்ததற்குப் பிறகுகூட இரண்டு அல்லது மூன்று மாத கால நீட்டிப்புக்கு மேல் வாங்காமல் தேர்தலை நடத்த முடியும். தேர்தலை நடத்துவது என்பது மிக மிகத் தேவையானது. இந்தத் துறைக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கு மிக மிகத் தேவையானது என்கிற அளவிலே இச்சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1976 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அதிகாரிகள் சட்டத்தின் நான்காவது பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1)-ன்கீழ் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அப்படி நியமிக்கப்பட்ட தனி அதிகாரிகள் சிலருடைய பதவிக் காலம் டிசம்பர் 1983, 9 ஆம் நாளோடு முடிவடைந்தது. ஆளுநர் அவர்களுடைய அவசரச் சட்டத்தின்மூலம் 8—12—1983 முதல் 9—3—1984 ஆம் தேதி முடிய மூன்று மாத காலம் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டது. இப்பொழுது 9—3—1984 முதல் மேலும் ஆறு மாத காலம் இவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய பல்வேறு முக்கிய காரணங்கள் இருப்பதால், இச்சட்ட முன்வடிவு இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய அனுமதிக்காக கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சுட்டிக்காட்டியதுபோல், 1983 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், தமிழ் நாடு சட்டம் 30/1983 தமிழ் நாடு அரசிதழில் 1—11—1983-லே வெளியிடப்பட்டது. அதன்கீழ் விதிகளை உருவாக்குகிற பணி நிறைவேற்றப்பட்டு, பொறுக்குக் குழுவிலே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு இணங்க அவர்களுக்கு எல்லாம் இவை சுற்றனுப்பப்பட்டிருக்கின்றன. தயாரிக்கப்பட்டிருக்கிற விதிகளைப் பொறுத்தவரையில், அதிலே தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு அளிப்பதற்காக இது அனுப்பப்பட்டிருக்கிறது. அதுபோல் functional Registrars என்று சொல்லப்படுகிற இயங்கு பதிவாளர்களுடைய கோப்புகளும், பதிவாளர்களுடைய கோப்புகளும் அவற்றுக்கான விதிகள் அடங்கிய கோப்புகளும் அனுப்பப்பட்டுள்ளன. எனவே அவர்களுடைய ஆலோசனையைப் பெற்றபின் முழுமையான கருத்துக்களை ஒருங்கிணைத்து, அதற்குப் பின்னால் அதற்கான அறிவிக்கைகளை வெளியிட்டு, அந்தச் சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடக்கவேண்டியிருப்பதாலும், கூட்டுறவுத் துறையில் உள்ள அதிகாரிகளுக்கு தேர்தலுக்காகப் பயிற்சியளித்து தேர்தல் நடத்த வேண்டியிருப்பதாலும். ஆக இப்படிப் பல்வேறு பணிகள் நடத்திட வேண்டிய காரணத்தால் ஆறு மாத காலம் அவகாசம் மேலும் தேவை என்று இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதைப்போல, சுமார் 350 அமைப்புகளில் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கிறோம். 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரைமரி சங்கங்கள் கிராமங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு 1972 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்று, அதே தலைவர்கள்தான் இப்போதும் தொடர்ந்து இருக்கிறார்கள். எங்களுக்குக்கூட அதிலே கஷ்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக, திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதைப்போல, நாங்கள் அதில் உள்ள கஷ்டத்தை அறிவோம். தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென்பதில் அரசு அக்கறை கொண்டு இருக்கிறது. காரணம், கிராமப்புறங்களில் சில இடங்களில் முன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட—எல்லோரும் அல்ல—சில பேர்களிடம் பொதுமக்கள் போய் அரிசி வேண்டும், எண்ணெய் வேண்டுமென்று கேட்டாலோ, அரிசி மக்கிப் போயிருக்கிறதே என்று கேட்டாலோ, "நாங்கள் என்ன செய்வது? எம்.ஜி.ஆர். ஆட்சியில் இப்படி நடக்கிறது" என்று சொல்லக்கூடிய நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். அவர்களால் அரசுக்கும் கஷ்டம், மக்களுக்கும் கஷ்டம். 1972-க்குப் பின் தேர்தல் நடக்காமல் தொடர்ந்து அவர்களே பிரைமரி கடன் சேவா சங்கங்களில் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது பல வகைகளில் தொல்லையாகக்கூட இருக்கிறது. இப்படி பல்வேறுவிதமான பணிகள், அதாவது, விதிகளைத் திருத்துதல், செலக்ட் கமிட்டியின் ஆலோசனையைப் பெறுதல், அதற்குப் பின்பு அவற்றை விதிக் கோப்பாகக் கொண்டு வருதல், தேர்தல் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளுக்காகக் குறைந்தபட்சம் ஆறு மாத காலம் ஆகும் என்ற காரணத்தால், அந்தக் கால நீட்டிப்புக்கு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இதாவது கடைசி கால நீட்டிப்பாக இருக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். அந்த ஆவலோடுதான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, அந்த நம்பிக்கையை உறுப்பினர்கள் பெற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், விவசாய உயர்மட்டக் குழுவின் சிபாரிசுகள் என்ன நிலையில் இருக்கின்றன என்று கேட்டார்கள். அதுபற்றிய மானியக் கோரிக்கை வருகிறபோது, அதை விளக்கமாகச் சொல்ல முடியும். இப்போது சொல்ல வேண்டுமானால், உயர்மட்டக் குழுவின் சிபாரிசுகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்று மட்டும் சொல்லி, இங்கே கொண்டுவந்திருக்கின்ற சட்ட முன்வடிவை இந்த மேலவை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1084 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1984) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1984) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(முற்பகல் 11-30)

**(3) தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984).**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அடுத்து வர இருக்கும் நான்கு சட்ட முன்வடிவுகளுமே ஒரே பொருள்குறித்த தொடர்புடையவையாக இருப்பதால், விவாதத்தைப் பொறுத்தவரையில், அவை அனைத்தையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம். நிறைவேற்றும்போது தனித்தனியாக வாக்குக்கு விடப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

Thirumathi TARA CHERIAN: Mr. Deputy Chairman, Sir, the Hon. Minister has moved this Bill which seeks to extend, by a few more months, the term of office of Special Officers of Panchayats, Panchayat Union Councils and Municipal Councils.

Sir, as I said while speaking on the other Bill, we do appreciate that there have been many reasons for seeking such an extension. There have been heavy rains, damages caused by floods, etc. All the same, whatever one may say, in a democratic country, democracy has got to be honoured and we want true representatives of the people in these institutions. Some of them may be good, some

@ 215-ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

may be bad and some may be better. But, yet, the people will be happy when elected members are there as their representatives in the various local bodies. I do hope that at least this time, the Hon. Minister and the Cabinet will see that, come shine or come rain, the elections are held within the specified time. I also do hope that the electoral rolls will be in a complete shape and that there would not be any complaints that some names have not been included in the rolls.

Sir, I am glad that the Government have made it a point to give proper representation to women and to Adi Dravidars in the various local bodies. A promise has been given that more representation would be given to women and Adi Dravidars in the Panchayats, Panchayat Union Councils, etc. I hope that this promise will be kept up conscientiously. After all is said and done, women represent nearly 50 per cent of the world's population. If the Government do not give due recognition to them, they may not get their place in the Panchayats, etc. at the village level. They have the wisdom required to manage the local bodies. The grandmother's wisdom is much more than all the University education put together. I do hope and pray that women will get proper representation in the various local bodies.

Sir, today, the working of the local bodies leaves much to be desired. I have had a little experience in the Madras Municipal Corporation also. Now, Special Officers have been appointed to the local bodies and they have been given vast powers. Still, it is necessary for the I.A.S. Officers who have been chosen to act as Special Officers, to visit the various Divisions. They should make the people feel that they are with them and that their welfare will be looked after by the Special Officers even though there are no elected representatives in the local bodies. The Special Officers should see that the roads are properly maintained and that the street-lights burn. I had been to some villages in various districts. I would like to mention to the Hon. Minister that in certain villages there is complete darkness in the night. In Madras City itself, in the place where I live—which is not an unknown place—there is a College in which nearly 2,000 students are studying. Many new blocks of tenements have come up in that place. But, at times, there is no street-lighting for weeks together. If the policy of Government is to conserve electricity, there must be a separate Department to see how it could be done. It is not necessary that the street-lights should



burn all the time during night. But, at least for some time they should burn. If the elected people are there, they will bring these things to the notice of the authorities. But, the elected representatives are not there and the officers are unable to visit all the places.

Sir, I would like to bring another matter also to the notice of the Hon. Minister. Whenever V.I.P.'s come to the City, holes are made in the roads for the purpose of putting up arches. I do not know whether this is done with the approval of the Government or without Government approval. Such holes are made even in front of houses and shops. Later, the holes are not closed and they are left to remain as a permanent feature. I hope that at least in future, till such time elected representatives come to power, the Special Officers will see that Government sanction is taken for digging holes in the roads and that the digging is done only in certain places. They may even think of having some permanent fixtures on which the arches can be erected.

In States like Maharastra, during monsoon and also on a regular basis, private houses and Government buildings are inspected to see whether they are fit for habitation. If such an inspection is made, many accidents and consequential loss of life could be averted. I have no idea whether any department in our State is undertaking such an inspection of buildings. Many buildings collapse during rains and other natural calamities. We are, of course, giving relief to the affected persons and we appreciate such relief measures taken by the Government. What is needed is this. Until the elections are held and the Special Officers hand over charge, the Special Officers should be asked to undertake works necessary for the welfare of the people and then the people will also necessary for the extension of the term of Special Officers is necessary for their welfare, till the elections are held.

*திரு. ஆ. நல்லசிவன்:* மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு சட்ட முன்வடிவுகளின் மீதும் என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே தேதி நிர்ணயித்தாகிவிட்டது, நீங்கள் எதற்காகப் பேசப் போகிறீர்கள் என்பது போல கேட்கிறார்கள். ஆனால் இதிலே பேச வேண்டிய அவசியம் இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. முன்பு வெள்ளம் வந்து ஊரெல்லாம் நட்டம் உண்டாக்கிவிட்டது என்பதால் அதைப் பயன்

படுத்தி தேர்தலைத் தள்ளி வைத்துவிட்டார்கள். இரண்டு மாதங்களுக்குப் பிறகு என்ன வரப்போகிறதோ தெரியவில்லை. ஏப்ரல் 19, 23 என்று தேதி நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் சென்று பார்த்தால், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேர்தலுக்குத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. பாராளுமன்றத் தேர்தலுக்கும், சட்டமன்றத் தேர்தலுக்கும் அவர்கள் தயாராக இருப்பது தெரிகிறதே தவிர, பஞ்சாயத்துத் தேர்தலுக்கு அவர்கள் தயார் செய்வதாகத் தெரியவில்லை.

சட்டமன்றப் பேரவையிலேகூட ஆளும் கட்சி உறுப்பினர் பேசியதாக பத்திரிகையில் படித்தேன். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லை என்பது வாஸ்தவம் என்றாலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருந்தால் செய்வதைவிட சிறப்பு அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பேசியதாகப் படித்தேன். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்சிக்காரர்கள் இருந்தால் சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள், ஆனால் அதிகாரிகள் தொந்தரவு இல்லாமல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார். அதைப் பார்க்கும்போது சட்டமன்றம், பாராளுமன்றம்கூட ஏன் என்று கேட்க வேண்டியிருக்கிறது. சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் கூட சண்டை போட்டுக்கொள்கிறார்கள். ஆகவே ஜனாதிபதி, கவர்னர் ஆட்சியிருந்தால் பிரச்சினை இல்லாமல் போகும் என்று நினைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, தேர்தல் எந்த அளவிற்கு நடக்கும் என்பது தெரியவில்லை. இதிலே பெண்களுக்கு என்று சில இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதிலே கூட தகராறுகள் இருக்கலாம். அதற்காக ரிட் போடக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. அப்படி ஏதாவது பிரச்சினைகள் வந்தால், பிரச்சினை வரக்கூடிய இடத்தை மட்டும் ஒதுக்கிவிட்டு மற்ற இடங்களுக்குத் தேர்தலை நடத்த அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். ஏனென்றால் பத்து தடவை, 12 தடவை இதைப்போல கால நீட்டிப்புக்குச் சட்டம் வந்திருப்பதால், "சூடு கண்ட பூனை போல" அரசு திரும்ப தேர்தலை நடத்துமா என்ற சந்தேகம் எங்களுக்கும், வெளியே பலருக்கும் இருக்கிறது. இதுகுறித்து அமைச்சர் அவர்கள் உறுதி கொடுக்கப் போகிறார்கள் என்றாலும், இரண்டு மாதம் கழித்தால்தான் என்ன நடக்கும் என்பது தெரியும். இதிலே அவ்வளவு தூரம் நம்பிக்கையின்மை ஏற்பட்டுவிட்டது. இதிலே முன்னேற்றம் என்னவென்றால் தேதியை அறிவித்திருப்பது தான். ஆளுநர் உரையில் ஏப்ரலில் நடக்கும் என்று அறிவித்தார்கள். இப்போது பேரவையிலே, மனு செய்வதற்கான தேதியை அறிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் கூட நிச்சயமில்லை. நமது நாட்டிலே சில விஷயங்கள்



(முற்பகல் 11-40)

கோர்ட்டுக்குப் போயிருக்கின்றன. ஆகவே ஒன்றிரண்டு இடங்களில் கோர்ட்டுக்குப் போகும் நிலைமை வந்தால்கூட அமைச்சர் அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல், சச்சரவு இல்லாத இடங்களில் பாதுகாப்பாக தேர்தலை நடத்தி, எந்த இடங்களிலிருந்து கோர்ட்டுக்குப் போனார்களோ அவர்களுக்கு பஞ்சாயத்து போர்டு இல்லாமல் பண்ணலாம். பாக்கி இடங்களுக்கு தேர்தலை நடத்தி கோர்ட்டுக்குப் போனால் தண்டனை வழங்கப்படும் என்று கூறியாவது பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துங்கள் என்று கூறி அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு சட்ட முன்வடிவுகளும் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கும் அந்த வடிவத்தில் வந்த போதிலும், இவை இந்த அவையினுடைய உரிமையை பாதிக்கும் அல்லது இந்த அவைக்கு வரவேண்டிய 13 உறுப்பினர்களையும் வரவிடாமல் வழி அடைத்துக்கொண்டிருக்கக் கூடிய சட்ட முன்வடிவுகளாகும். ஏனென்றால் உள்ளாட்சித் துறைத் தேர்தல் நடக்குமேயானால், அந்த உறுப்பினர்கள் இங்கு வர வாய்ப்பு இருக்கிறது. இப்போது இந்த வாய்ப்பு குறைந்துவிட்டது. நான் இந்த அவையிலே நுழைந்தபோது அந்தத் துறையிலிருந்து இரண்டு மூன்று உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்கள் எந்தப் பிரச்சினைகளையும் ஸ்தூலமாக, குறிப்பாக எழுப்பக் கூடிய வாய்ப்பு இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவரும், ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த தீட்சிதர் அவர்களும் இருந்தார்கள். ஆனால் இப்போது அந்தக் குரலை நாம் கேட்கவே முடியவில்லை. அதுமாத்திரம் அல்ல. நம்முடைய அவை, ஆங்கிலத்திலே சொல்வோமேயானால், * * ஹவுஸ். காரணம், வரவேண்டிய உறுப்பினர்கள் வரமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது அடிப்படையிலே ஆபத்தானது. இரண்டாவது, இப்போது பல இடங்களிலே வெள்ளம் வந்த பகுதி தஞ்சாவூர். இப்போது திருநெல்வேலியிலும் அப்படி இருக்கிறது. நான் நேரிடையாகச் செல்ல முடியாவிட்டாலும், அங்குள்ள கட்சித் தோழர்களை விவரம் கேட்டபோது, திருநெல்வேலி நகரத்தில், சாலைகள் பாதிக்கப்பட்டிருப்பது மட்டுமல்லாமல் திருநெல்வேலி மேற்குப் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. அது மட்டுமல்ல. தஞ்சாவூரில் நடந்ததைப் போன்றே வயலில் அறுவடைக்குத் தயாராக இருந்த நஞ்சைப் பயிர்களை இன்றைக்கு மீட்க முடியுமா என்ற சந்தேகம் உண்டாகியிருக்கிறது. தமிழ் நாட்டில் மிகப் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

கிராமங்களிலே சாலைகள் ஏற்கெனவே மோசமான நிலையிலே உள்ளன. இப்போது மழை வந்ததற்குப் பிறகு, இயற்கை செய்த கொடுமையும் சேர்ந்திருக்கிறது. ஏற்கெனவே ஒரு அசிரத்தையான நிர்வாகத்தினால் ஏற்பட்ட சீர்குலைவு. இயற்கையின் காரணமாக ஏற்பட்ட சீர்குலைவும் சேர்ந்திருக்கிறது. அதைச் சீர்படுத்துவதற்கு தனி அதிகாரிகளினால் முடியுமா என்று சொன்னால் முடியாது என்பதல்ல பிரச்சினை. அவர்களுடைய மனப் போக்கே அதற்கு ஏற்றதாக அமையவில்லை. பல இடங்களிலே கணக்கு எழுதிக் காண்பிக்கிறார்கள். பல இடங்களிலே சாலை போட்டதாகவே கணக்கு காண்பிக்கிறார்கள். நான் சொல்லும்போது திட்டவட்டமாகச் சொல்கிறேன், ஆதாரத்தைக் காண்பிக்கிறேன். கிராமங்களிலே படுமோசமான நிலை நிலவுகிறது. இதற்குக் காரணம் ஒட்டுமொத்தமாக ஜனநாயக ஆட்சி இல்லை என்பதுதான். தமிழகத்திலே கிராமங்களில் நல்ல சாலைகள் எல்லாம் போய்விட்டன.

அடுத்து, சுகாதாரம். ஒரு முறை அல்ல, பல முறை சொல்லி வருகிறேன். தமிழ் நாட்டில் கொசுத் தொல்லை அதிகரித்து வருகிறது. நகரத்தில் மட்டுமல்ல, எல்லா இடத்திலும் வந்திருக்கிறது. பைலேரியன் கம்ப்ளைன்ட் போனது திரும்பி வந்துவிட்டது. பல இடங்களில் வந்திருக்கிறது. கொசுத் தொல்லையைப் போக்குவதற்கு எல்லாவித நடவடிக்கையும் எடுப்பதாக அறிக்கை வெளியிடுகிறார்களே தவிர, நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அதுமட்டுமல்ல. அதற்குப் பயன்படுத்தக் கூடிய மருந்துகளைப் பொறுத்தவரை, நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் மருந்தை வாங்கக் கூடாது என்று சொன்ன போதிலும்கூட, அரசு போட்ட உத்தரவை மீறி அதை வாங்கி அதிலே கையூட்டு கிடைக்கிறது. வாங்கக் கூடாது என்று ஜி.ஓ. இருந்தபோதிலும், அது வாங்கப்படுகிறது. சில ஆண்டுகள் கழித்து அரசு, மேல் அதிகாரிகள் அதை நினைவில் வைத்துக்கொள்ள முடியாது. அதன் விளைவு என்ன? தடை செய்த மருந்தை உபயோகப்படுத்தி, அது கொசு முட்டைகளை ஒழிப்பதில்லை, அதாவது லார்வாவை ஒழிப்பதில்லை. அதற்கு மாறாக, நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை, ஒருகால் அந்த மருந்துகளே அவைகளுக்கு ஊட்டச் சத்துக்களாக அமைந்துவிடுகின்றனவோ என்பது நமக்குத் தெரியவில்லை. ஆகவே இது ஓரளவுக்கு சம்பிரதாயத்துக்காக இப்படி நடக்கிறது. கிராமப் புறங்களில் சுகாதாரம், சாலை, விளக்குகள் பல இடங்களில் கிடையாது.



நகரங்களை எடுத்துக்கொண்டால், பெரிய நகரங்களில்கூட சாலைகள் ரொம்பப் பழுதடைந்திருக்கின்றன. தமிழ் நாட்டில் சாலைகள் போடுவது என்றால், பல நூறு கோடி ரூபாய் வேண்டும் என்பதை நான் உணர்கிறேன். ஏராளமான சாலைகள் போட வேண்டி இருக்கின்றன. எனினும் சாலை பராமரிப்புகூட மோசமாக இருக்கிறது. சாலை போடும்போது மட்டுமல்ல. இன்னும் சொல்கின்றேன். தனி அதிகாரியின் கண்காணிப்பில் வரும்போது, என்ன நடக்கிறது? ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி இருந்தால், ஏதாவது ஒரு இடத்திலே ஜனங்கள் கேட்கும்போது, அந்த ஜனங்களுக்குப் பதில் சொல்வதற்கே, ஜனங்கள்பால் அவர்களுக்குப் பொறுப்பு இருக்கின்ற காரணத்தினாலேயே, அவர்கள் தலையிட முடியும். பல இடங்களிலே சாலை போடும்போது, எந்த அளவுக்கு ஜல்லி போட வேண்டும், எந்த அளவுக்கு தார் போட வேண்டும் என்று விதி இருக்கிறது. அது எல்லாம் இப்போது நடப்பதில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, 'உள்ளாட்சித் துறையிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு பலபேர் இங்கே வர இயலவில்லை. அதன் காரணமாக, இந்த அவை '* * அவுஸ்' (* * House) என்று ஒரு வார்த்தையைச் சொன்னார்கள்.

**திரு. ப. மாணிக்கம் :** ஆமாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** '* * அவுஸ்' (* * House) என்ற சொல் * * என்று பொருள்படுவதாக ஆகிவிடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தேவை என்று கருதினால், 'அது பலம் குறைந்த, அருமையான, முழுமையான உறுப்பினர்கள் இல்லாத அவை' என்று வார்த்தைகளைச் சொல்வது நலம் பயக்கும். உறுப்பினர் அவர்கள் சரி என்று கருதினால், தேவையானால், அந்த * * என்ற வார்த்தையை எடுத்துவிடலாம்.

**திரு. ப. மாணிக்கம் :** இல்லை. சரி என்பதற்கில்லை. * * என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஆங்கில அகராதியை வைத்து, தயவு செய்து துணைத் தலைவர் அவர்கள் புரட்டிப் பார்க்க வேண்டுகிறேன். * * என்பதற்கு ஒரு அர்த்தம் * * மற்றொன்று * * என்று

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

பொருள். அது வேறு அர்த்தத்திலே வருகிறது. * * அதனுடைய செயல் முறையை, இந்த அவைக்கு எவ்வளவு இருக்கவேண்டுமோ அது இல்லாமல் ஆக்கிவிட்டது. * * என்று, அது என்ற அர்த்தம் அல்ல. * * என்பது, கால், அதை என்றுதான் பொருள். வேண்டுமானால், அகராதியைப் புரட்டிப் பாருங்கள். வாவேண்டியதை வரவிடாமல் ஆக்கிவிட்டிருக்கிறது என்று இருக்கும். வேறு ஒரு பதத்தை உபயோகப்படுத்துவேனானால், அது இன்னும் ஆழமாகவும், ஆபத்தானதாகவும் இருக்கும் என்பதால்தான் இப்படிச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆக்ஸ்போர்ட் டிக்ஷனரி மீனிங் * * மீன்ஸ் என்று இருப்பதால், என்று தொனிக்கும். ஆகவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அவை, * * நடைபெற்றிருப்பதாக தொனிக்கும்.

**திரு. ப. மாணிக்கம் :** சரி. இந்த 'அவையில் குறைபாடு ஏற்பட்டு இருக்கிறது' என்று போட்டுக்கொள்வீர்களானால், எனக்கு அதில் ஆட்சேபணை இல்லை. அவையிலே முழு பலம் இல்லாமல், அதிலே குறை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * * என்ற வார்த்தை நீக்கப்படவேண்டும் என்று சொல்கின்றேன்.

**திரு. ப. மாணிக்கம் :** எனவே இப்போது சுகாதாரம், சாலை, விளக்கு இப்படி பல்வேறு இடங்களில் கணக்கு எழுதப்பட்டிருக்கிறது. விளக்கு போட்டதாக இருக்கிறது. ஆனால் விளக்கு எரியாது, விளக்கு கிடையாது. இப்படி கிராமங்களில் நிலைமை இருக்கிறது, நகரங்களில் இருக்கிறது. ஆனால் ஒன்றும் கேட்க முடியவில்லை. கொசு மருந்துப் பிரச்சினை மாத்திரம் இல்லை. பல இடங்களில் அதிகாரிகளைக் கேட்டால்கூட, காரியங்கள் நடப்பதில்லை. எல்லாவற்றிற்கும் அதிகாரிகள்தான் காரணம் என்று சொல்ல வரவில்லை. எனங்கள் தலையிட்டுக் கேட்டாலும் சில இடங்களிலே விளக்கு எரியாது. அதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால், அதன் காரணமாக அவையிலே எடுக்கின்ற தீர்மானங்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விழிப்புணர்ச்சியோடு தொடர்ந்து, காரியங்களைச் செய்யக்கூடிய முயற்சிகள் ஏற்படும். இப்போது

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



அது இல்லாமல் போய்விடுகிறது. தொடர்ந்து விழிப்புணர்ச்சி இருக்கக்கூடிய முயற்சியை ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால் எடுப்பார்கள். அப்படி இருந்தால்தான் அந்த நிலைமை ஏற்படும். அப்படி இல்லாததால் தொடர்ச்சியாக காரியங்கள் பின்பற்றப்படுவதில்லை. 'கன்டினியுவஸ்' ஆக இருப்பதில்லை. விஜிலென்ஸ் என்பது இல்லை. ஆகவே தான் இந்தத் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை மேலும் மேலும் நீட்டிப்பது ஆபத்து.. பல முறை தனி அதிகாரிகள் போக்கை விமர்சித்திருக்கிறோம். அவர்களைப் பொறுத்தவரையில் "யார் என்ன விமர்சித்தாலும், எங்களுடைய காலம் என்பது இருந்துகொண்டுதான் இருக்கும். எங்களை ஒன்றும் செய்யாது" என்பார்கள். அவர்களுக்குச் சட்டத்திலே ஒரு உத்தரவாதம் இருக்கிறது. சட்டத்திலே இந்த உத்தரவாதம் இருந்தால், அவர்களுடைய மனப்போக்கிலே மாறுதலே வராது. அதனாலேதான் கால நீடிப்பு என்பது சரியில்லை. அது மட்டுமல்ல. மற்றொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே கோவை நகராட்சியிலே தண்ணீர் வரியையும் மின்சார வரியையும் 50 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். கடைசியாகக் கிடைத்த தகவல். அதன் விளைவு என்ன ஆகும்? கிளர்ச்சி வரும். அது கார்ப்பரேஷனாகி விட்டது. இப்படி பல இடங்களிலே முறையிடுவதற்கும் அல்லது மாற்றுவதற்கும், விஷயங்களை ஜனத் தொடர்போடு மாற்றுவதற்கும் அல்லது அதைப்பற்றி விவாதித்து அவர்களுடன் உடன்பாடு காணுவதற்கும் அல்லது வேறுபட்ட திருத்தங்கள் கொண்டு வருவதற்கும் எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் போகிறது. ஏதாவது சத்தம் போட்டால் சில உரிமைகளை அளிக்கலாம்; மாற்றம் வேண்டுமென்றால், கொண்டு வர முடிகிறது. ஆனால் கீழே போகப்போக அதுகூட அங்கே முடியாது. இந்த நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அதனால் கால நீடிப்பு என்பது சரியல்ல.

கடைசியாக, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒருகால் சட்டசபைக் கூட்டம் அதற்குள்ளே முடிந்தாலும் முடிந்துவிடலாம். இந்த இரண்டு அவையினுடைய கூட்டங்கள் முடிந்தாலும் முடியலாம். ஆனால் நான் இப்போது ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடைசியாக அரசால் அறிவிக்க முடிந்தது அவ்வளவுதான். நான் வேறு வார்த்தை உபயோகிக்க வேண்டியதில்லை. 'லாஸ்ட் டிரம்ப் கார்ட்' என்று சொல்லலாம். அதுவும் போதாது. அதற்கு எதிர் துருப்பு வேறு ஒன்று வரும். ஏன் என்று சொல்கிறேன். இப்போது ஜனவரி 31-ல் 18 வயது முடிந்தவர்கள் கணக்(

கெல்லாம் சரிபார்த்து வரும்போது, ரிசர்வாக இருப்பது ஜெனரல் ஆக வரும், ஜெனரலாக இருப்பது ரிசர்வாக மாறும். பெண்கள் பங்கு வரும்போது, அதிலே ஒரு பகுதி ஜெனரலாகப் போகக்கூடிய ஆபத்தும் இருக்கிறது.

(முற்பகல் 11-50)

இன்னும் சில இடங்களிலே முஸ்லீம்கள் மேஜாரிட்டி. குறிப்பாக வாணியம்பாடியும், கடையநல்லூரும். இவைகள் பெண்களுக்காகப் போடப் பட்டிருக்கின்றன. இதுவெல்லாம் பிரச்சினைகளை உண்டாக்கி இருக்கின்றன. ஆகவேதான் அரசால் முடிந்த கடைசி அறிவிப்பாக, இதுவரைக்கும் இல்லாத வழக்கமாக ஆளுநர் உரையில் தேர்தல் நடக்கும் என்று அறிவிப்பு வந்திருக்கிறது. இது பழக்கமே இல்லாத ஒன்று. நூதனமாக இருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு வருகிறபோது அந்த அவையில் அறிவித்தார்கள். அந்தச் செய்தியைப் பார்த்துச் சொல்கிறேன்.

ஆகவே ஏப்ரல் மாதத்தில் தேர்தல் என்று சொல்லும்போது, இந்தச் சட்டப் பிரச்சினைகள் மட்டுமல்ல, இன்னும் நடைமுறையிலே பல்வேறு பிரச்சினைகள் தீராத நிலையிலேயே இருப்பதால், இந்த நேரத்திலேயும் நடக்குமா என்பது ஒன்று, இப்படிப்பட்ட சிக்கல்களும் இருக்கின்றன. ஆகவே தான் ஆய்ந்தாய்ந்து பார்த்து அரசு இதைச் செய்திருக்க வேண்டும். அரசைப் பொறுத்தவரையிலும், "நாங்கள் அறிவித்துவிட்டோம் தேதி, யாரோ தடை வாங்கி விட்டார்கள்" என்று சொல்வது சரியல்ல. அதுவல்ல அரசின் கடமை. "நான் சொன்னதைச் சொல்லிவிட்டேன், செய்வதைச் செய்யுங்கள், ஊதுகிற சங்கை ஊதிவிட்டேன், விடியும்போது விடியட்டும்" என்று அரசு சொல்லக் கூடாது. அரசு அதற்காக அல்ல. அரசு இதிலுள்ள சிக்கல்களை என்னவென்று முன்கூட்டிப் பார்த்து, தேர்தலை உறுதியாக உத்தரவாதமாக நடத்துவதற்கான முறையிலே செயல்பட வேண்டும். காரணம், உள்ளாட்சித் துறையிலே ஜனநாயகம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை முன்கூட்டி நிர்க்கமாகப் பார்த்து, அதற்கேற்றவாறு செயல்பட வேண்டும். அதற்கு வழி இருக்குமே யானால் நல்லது. அது இல்லாவிட்டால் அரசைப் பொறுத்தவரையில், நாங்கள் அறிவித்துவிட்டோம் என்று சொல்லலாம். வாதங்களுக்கு எதிர்வாதம் எப்போதுமுண்டு. அது வேறு விஷயம். அதற்குள்ளே நான் நுழைய விரும்ப வில்லை. ஆனால் இந்தத் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது, ஒருகால் தேர்தல் நடக்காவிட்டால், இந்த ஏப்ரலிலேயே, அதன் விளைவு என்னவென்று சொன்னால், ரொம்ப ஆபத்து வந்துவிடும்.



தனிப்பட்ட முறையில் நான் யார்மீதும் குரோத உணர்ச்சியுடன் சொல்ல வில்லை. அவர்களது அன்றாடப் பழக்க வழக்கத்தின் காரணமாக, அதிகாரமும், நிறைவேற்றுகிற பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிற காரணத் தினால், அதிகார வர்க்கத்தினுடைய சுபாவம் அவ்வாறு மாறிவிடுகிறது. இது அரசியல் விஞ்ஞானிகள் கூறக்கூடிய உண்மை. ஒரு ரோடு போட்டால் நான்கு ரோடுகளைப் போட்டதாகச் சொல்வார்கள். அந்த முறையிலே இன்றைக்கு நகரங்களிலும், கிராமங்களிலும் நிர்வாகம் படுமோசமாக இருக்கிறது.

ஆறேகால் இலட்சம் ரூபாய் செங்கற்பட்டு வட்டம் சாத்தினாஞ்சேரி கிராமத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்திலே இந்த கிராமம் பாலாற்றின் கரையிலே இருக்கிறது. சாலை போட வேண்டும் என்று திட்டம். ஆனால் ஊரில் சிலர் கூடி இதை முடமாக்கியிருக்கிறார்கள். காரணம், அதிகம் ஆதி திராவிடர்கள் இருக்கிற பகுதி. ஒதுக்க வேண்டியது ஐந்து சென்ட் தான். ஆனால் பாதை போட விடமாட்டோம் என்கிறார்கள். அதிகாரிகள் செயல்பட மறுக்கிறார்கள். பல பஞ்சாயத்துக்களில் ஊர்க்காரர் களாலும் இப்படிப்பட்ட பல்வேறு கோளாறுகள் உள்ளாட்சித் துறையிலே ஏற்படுகின்றன. சில நேரங்களில் ஊர் எதிர்ப்பு வந்தால் அரசு திட்டங்களைக் கைவிட்டுவிடுகிறது. இதுவெல்லாம் அரசுக்குத் தெரியாத விஷயமில்லை. ஆனால்தான் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது சரியாக இருக்காது. ஆனால் அதே நேரத்தில் தேர்தல் அறிவிப்பு வந்திருக் கிறது என்றாலும்கூட, இந்தத் தேர்தல் நடக்குமா என்ற என் அச்சத்தையும் தெரிவித்து, அமர்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் நடப்பதற்காக கால நீட்டிப்பு கேட்கின்ற, தனி அதிகாரி களுக்கான பதவிகளுக்கான கால நீட்டிப்பு கேட்கின்ற இந்தச் சட்ட முன்வடிவையொட்டி இன்னும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கூறியவற்றை வார்த்தைக்கு வார்த்தை நானும் திரும்பச்சொன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். அந்த அளவிற்கு இன்றைக்கு நிலைமை உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையிலும் சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். தேர்தலை நாம் எப்போது நடத்தப் போகிறோம் என்பது பற்றிய திட்டவட்டமான தேதி அறிவிப்புகள் வந்துவிட்ட நிலையிலே, இதுபற்றி நான் மேலும் அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆனால் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் ஒரு மாதத்தில் தேர்தலை

நடத்துவதாக இருந்தாலும்கூட, இதற்கிடையிலே ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்ய முடியும் என்றால், அந்த அளவிற்கு உள்ளாட்சித் துறையைக் காப்பாற்றிய பெருமையை இந்த அரசு அடையலாம். அந்த அளவிற்கு தனி அதிகாரிகளுடைய நடவடிக்கைகள், செயல்முறைகள் உள்ளாட்சித் துறையை வெகுவாகச் சீர்கேடு அடையச் செய்திருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே சொன்னவைதான் என்றாலும், மீண்டும் அவற்றைச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு லஞ்ச ஊழல் எங்கேயாவது இருக்கிறதா என்றால், பஞ்சாயத்து யூனியன்களிலும், நகராட்சி மன்றங்களிலும்தான் என்று சொல்ல முடியும். லஞ்ச ஊழல் மட்டுமல்ல; 'நீ என்ன செய்ய முடியும்' என்ற உணர்வோடு லஞ்ச ஊழலில் ஈடுபடும் அதிகாரிகள் எங்கேயாவது இருக்கிறார்களா என்றால், நகராட்சி மன்றங்களில்தான் இருக்கிறார்கள். நூற்றுக் கணக்கானவர்கள், ஆயிரக் கணக்கானவர்கள், லட்சக் கணக்கானவர்கள் பார்க்கிற அளவிலே, இன்றைக்கு செயல் முறைகளிலே சீர்கேடுகளை வைத்துக்கொண்டு செயல்படும் நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஊழல்களுக்கு உறைவிடமாக இருப்பது நகராட்சிகள், ஒன்றியங்கள் என்ற முறையிலே அவருடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நான், லஞ்ச ஊழல் அறவே இல்லை என்று சொல்வதற்குத் தயாராக இல்லை. ஆனால் அதே நேரத்தில் மேலவையிலே பேசும் நேரத்தில், ஒரு குற்றச்சாட்டு சொல்லுகின்ற நேரத்தில், ஆதாரத்துடன்தான் சொல்ல வேண்டுமென்ற விதி முறைகள் இருக்கின்ற காரணத்தால், நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதெல்லாம், தயவுசெய்து எந்த ஊராட்சி ஒன்றியத்தில், நகராட்சி மன்றத்தில் ஊழல் இருக்கிறது, யார் செய்தார்கள், எப்போது செய்தார்கள் என்ற கேள்விகளுக்கு மட்டும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று, தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே சொல்லியது என்று சொன்னேன். நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். I shall give the Hon. Minister certain examples also. ஏற்கெனவே திண்டிவனம் நகராட்சியைப் பொறுத்தவரையிலும், ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி, நான் நிரூபித்துக் காட்டியிருக்கிறேன். வீட்டிலே விளக்குகள் எரிந்து, அங்கே குடியிருக்கிற



நிலைமை ஆறு மாத காலத்திற்கு அதிகமாக, ஒரு வருட காலத்திற்கு அதிகமாக இருந்தும், அந்த வீடுகள் 'அசெஸ்மென்ட்' செய்யப்படவில்லை. அவர்கள் தனியாக நகராட்சி மன்ற அதிகாரிகளோடு தொடர்பு வைத்துக் கொண்டு, பணத்தைக் கொடுத்துவிட்டு, அசெஸ்மென்ட் இல்லாத நிலையில் வீடுகள் பல இருக்கின்றன என்பதை இந்த அவையிலே சொல்லி, அதற்குப் பிறகு அதுபற்றிய விவரங்களுக்குள்ளே புகுந்து, அது உண்மை என்ற நிலைமை இருப்பதைத் தெளிவாக்கியிருக்கிறேன். இன்றைக்கு மீண்டும் சொல்கிறேன். திண்டிவனத்திலே நடந்திருக்கிறது. அமைச்சரவர்கள் வந்து பார்க்க வேண்டும். 'what is the duty of the officer?
கண்ணுக்கு எதிராக நடக்கும் என்க்ரோச்மென்டுக்கு யார் அனுமதி தந்தது? நகராட்சி மன்ற 'கல்வெர்ட்' மூடப்பட்டிருக்கிறது, நெடுஞ்சாலையிலே. சைட் சேனல் மூடப்பட்டிருக்கிறது. ஒரு கட்டிடத்திற்கு வசதியாக, கார்கள் தங்க, வருகிற வாகனங்கள் தங்க, அது மூடப்பட்டிருக்கிறது. நகர மன்ற அதிகாரிகளுக்குத் தெரியாதா? எப்படி நடைபெறுகிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஆக்கிரமிப்புகளை வளர்க்கிறவர்கள் யார்? ஆக்கிரமிப்புக்கு ஆதரவாளர்களாக இருப்பவர்கள் அரசியல்வாதிகள்தான். தயவுசெய்து அது இல்லை என்று யாரும் மறுத்துவிட முடியாது என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு இடங்களில் நாங்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது, யார் அவர்களுக்கு உதவிகரமாக வந்து, ஆக்கிரமிப்புகளை அகற்றக்கூடாது என்று சொல்லுகிறார்கள் என்றால், அரசியல்வாதிகள்தான். நம்முடைய கட்சிக்காரர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்; ஆக்கிரமிப்பு செய்தாலும் உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் நம்மிடம் வளர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு வரையறை செய்யவில்லை. ஆனால் ஆக்கிரமிப்பு இருக்கிறதென்று குற்றம் சாட்டுகிறார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலத்தில் ஆக்கிரமிப்புகள் இல்லையா? இதற்கு யாராவது பதில் சொல்ல முடியுமா? ஆக்கிரமிப்புகள் எல்லா இடங்களிலும், எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றன. நான் குறிப்பிட்டு ஒன்றைச் சொல்வேன், தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆக்கிரமிப்புகள் குறைவாக இருக்கின்றன என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்று. விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றன. ஆனால் 'அசெஸ்' செய்யவில்லை என்று சொன்னார்கள். திண்டிவனம் மற்றும் ஐந்து நகராட்சிகளைத் தவிர பாக்கியுள்ள நகராட்சிகளுக்கு எல்லாம் மின்சார

(நண்பகல் 12-00)

வாரியம்தான் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் திண்டிவனத்தைப் போன்ற ஐந்து நகராட்சிகளுக்கு மட்டும்தான் நகராட்சியே அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவேதான் நான் சொல்கிறேன், இதற்கு எப்படி நகராட்சி பொறுப்பேற்க முடியும்?

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து நான் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்கிற உணர்வு இருக்கிறது. இந்திரா காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களில் 'என்கிரோச்மென்ட்' இல்லையா என்பதல்ல கேள்வி. நகராட்சி மன்றங்கள் இன்றைக்கு எப்படி செயல்படுகின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். முன்பு எப்படி இருந்தன, இப்போது எப்படி இருக்கின்றன என்பதுதான் முக்கியம். இதே நகராட்சி மன்றங்கள் முன்பு எப்படி செயல்பட்டுக்கொண்டிருந்தன, இப்போது நாளுக்கு நாள் எப்படி வளர்ந்துகொண்டிருக்கின்றன என்பதையும் பார்க்க வேண்டும். அதைத்தான் நான் சொன்னேன். 'என்கிரோச்மென்ட்' என்பதல்ல பிரச்சினை. இது ஒரு சாதாரண 'என்கிரோச்மென்ட்' அல்ல. ஏரிக்கு வருகிற தண்ணீர் டிரங்க் ரோட்டிலே அடைக்கப்பட்டிருக்கிறது. 'கல்வெர்ட்' மண் மூடியிருக்கிறது. இதை எல்லாம் கவனிக்கவில்லையென்றால். இதற்கு எதற்கு ஒரு தனி அதிகாரி? இதை நான் சொன்னவுடனேயே அரசியல்வாதிகள் சிபாரிசுக்காகப் போகவில்லையா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது எப்படி நியாயம்? எந்த அரசியல்வாதிகள் அப்படி பண்ணினார்கள் என்பது எனக்குத் தெரியாது. அப்படிப்பட்ட அரசியல்வாதிகள் திண்டிவனத்தில் இருப்பதற்கு மகிழ்ச்சி. 'அசெஸ்மென்ட்' பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதால் சொல்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு எதிராக நான் சொல்வதாகக் கருதக் கூடாது. அங்கே என்ன நடைபெற்றது என்பதைத்தான் நான் சொல்கிறேன். இந்திரா நகரில் இப்போது தான் ஹவுசிங் சொசைட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போதுதான் நான் அதற்காக வேண்டி வேலை செய்துகொண்டிருக்கிறேன். "வீதி விளக்குகள் எல்லாம் போடப்பட வேண்டும், லைன் இழுத்து ரொம்ப நாள் ஆகிறது, இன்னும் 'லைட்' light போடப்படவில்லை, நாங்கள் ஏழு, எட்டு வருடங்களாகக் குடியிருக்கிறோம்" என்று சொன்னார்கள். "அதுபற்றி எழுதிக்கொடுங்கள்" என்று சொன்னேன். அவர்கள் உடனே "அதுபற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்" என்று சொன்னார்கள். "முனிசிபாலிட்டி



யிடமும், எலெக்ட்ரிசிட்டி அலுவலகத்திலும் சொல்லியிருக்கிறோம், ஆனாலும் இன்னும் காரியம் நடக்கவில்லை" என்று அங்கு குடியிருக்கிறவர்கள் சொன்னார்கள். எழுதிக் கொடுங்கள் என்று நான் சொன்னதற்கு யாரும் எழுதிக் கொடுக்கத் தயாராக இல்லை. அதற்குப் பிறகு இதிலே என்ன நடைபெற்றிருக்கிறது என்று தெரிந்துகொள்வதற்காக மின்சாரத் துறையோடு தொடர்பு கொண்டேன். "நகராட்சி மன்றத்திலிருந்து சொன்னால் உடனே போடுகிறோம், அதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, அவர்கள் சொன்னால் அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கத் தயாராக இருக்கிறோம்" என்று சொன்னார்கள். எங்கெங்கே 'லைட்' போட வேண்டுமென்று நகராட்சிதான் சொல்ல வேண்டும் என்றும் சொன்னார்கள். இந்தத் தெருவுக்கு, இன்னின்ன இடத்தில் போட வேண்டுமென்று சொல்வது தனி அதிகாரிகளுடைய பொறுப்பு என்றார்கள். நான் விசாரித்த பிறகு, தனி அதிகாரியிடமிருந்து இதுவரை எந்தக் கடிதமும் அவர்களுக்குப் போகவில்லை என்று அறிந்துகொண்டேன். அந்த இடத்தில் இருக்கிற வீடுகளுக்கு 'போஸ்ட் ஆபீஸ் அட்ரஸ்' எல்லாம் இருக்கிறது. அதாவது பவ்வர் கனெக்ஷன் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கு மட்டும்தான் டோர் நம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல வீடுகள் அசெஸ்மென்ட் செய்யப்படவில்லை. ஆகவே இதுவரை டோர் நம்பர் கொடுக்கப்படவில்லை. லைட் கொடுத்த வீடுகளுக்கு வீட்டு நம்பர் கொடுக்க வேண்டும் என்பதால்தான், இதுவரை அசெஸ்மென்ட் செய்யப்படவில்லை. நான் இப்படி நடைபெறுகிற தவறைச் சுட்டிக்காட்டினால் அமைச்சர் அவர்கள் அரசியல்வாதிகள் சிபாரிசுக்கு வரவில்லையா என்று கேட்டால் எப்படி?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இந்திரா நகரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இந்த லே அவுட்டைப் பொறுத்தவரையில், 'பெட்டர்மென்ட் டாக்ஸ்' கட்டியாக வேண்டும். லே அவுட் போடப்பட்டு, 'அப்ரூவ்' செய்யப்பட்ட ஒரே காரணத்தினால் எல்லா வசதிகளையும், ரோடு வசதிகளையும், விளக்கு வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று விதிமுறைகள் இல்லை. 'இம்புரூவ்மென்ட் டாக்ஸ்' என்கிற வகையில் சாலைகளுக்காக. வீதிகளுக்காக எவ்வளவு செலவு ஆகிறதோ அதில் 25 சதவிகிதமாவது லே அவுட்டில் வீடு கட்டியிருப்பவர்கள் கட்டியாக வேண்டும். அப்படி கட்டினால்தான் சாலை, விளக்கு போன்ற வசதிகளை ஏற்படுத்த முடியும். அப்படி கட்டவில்லையென்று சொன்னால் நகராட்சிகளிடம் அதற்கான பணம் இல்லை. மேலும் திண்டிவனம் நகராட்சியைப் பொறுத்தவரையில், தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இதற்காக என்று 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இப்பொழுது வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒதுக்கப்பட்டு இப்பொழுது வேலையும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு நன்றி சொல்லவில்லை. அதற்கு மாறாக வேறு பொருட்களைப் பற்றியே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறந்து விட்டார்கள் என்று கருதுகிறேன். சென்ற முறை நான் பேசும்போது, தனியாக நன்றி தெரிவித்திருக்கிறேன். ஆனால் ஒவ்வொரு முறையும் பேசும்போது, நன்றி சொல்வதைத் தவிர வேறு எதுவும் சொல்லக்கூடாது என்று சொன்னால், நாங்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்க முடியாது That is not the way. 'பெட்டர்மெண்ட் டாக்ஸ்' (Betterment Tax) என்று சொல்வது வேறு. 'பெட்டர்மெண்ட் டாக்ஸ்' என்று சொல்லுங்கள். நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்த நிலைமைகளையெல்லாம் தாண்டி, தெரு விளக்குகளுக்காக லைன் இழுத்து, அதற்குப் பிறகு A formal letter must come from the Commissioner to the Department என்று அந்தக் கடிதம் முழுமையாகப் போய்க் கொண்டிருக்கிறது. மொத்தமாக எவ்வளவு விளக்குகள் வேண்டுமென்று கேட்டு போயிருக்கிறது. ஆனால் இடங்களைக் குறிப்பிடவில்லை. ஏனென்று கேட்டால் அசெஸ்மெண்ட் ஆகவில்லை. ஏன் அசெஸ்மெண்ட் ஆகவில்லை? எப்படி அந்தப் பகுதி மக்கள் இவ்வளவு காலமாக சௌகரியங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்? Is it not the duty of the Special Officer? அமைச்சர் அவர்கள் உதாரணம் கேட்டதால் சொல்கிறேன். அதோடு மட்டுமல்ல, பல்வேறு நிலைமைகள் திண்டிவனம் நகராட்சியைப் பொறுத்தவரையில் இருக்கின்றன. என்னைவிட அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எத்தனை ஆட்களைப் புதிதாகப் போட்டிருக்கிறார்கள்? அவர்கள் தந்தை பெயர் என்ன? அங்கே ஏற்கனவே இருப்பவர்களுக்கே சம்பளம் கொடுக்க முடியவில்லை. புதிதாக ஆட்களைச் சேர்த்திருக்கிறார்களே? கேட்டுப் பாருங்கள், லஞ்சமா, ஊழலா என்று தெரிந்துகொள்ள முடியும். I need not give the names. அதோடு மட்டுமல்ல. நகராட்சிகளின் அபிவிருத்திக்காக எவ்வளவு பணம் செலவு செய்கிறார்கள் என்பது தெரிகிறது. மக்களின் அடிப்படைத் தேவை என்ன என்று நிச்சயமாக நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் அது மக்களுக்கு முழுமையாகப் போய்ச் சேர்ந்தால்தானே அமைச்சருக்கும், அரசுக்கும் கௌரவம் இருக்கும். இதற்குத் தடையாக இருப்பவர்கள் யார்? அது அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அரசியல் வாதிகளாக இருந்தாலும் சரி, அப்படித் தடை செய்பவர்களை என்ன



செய்வது? நீங்கள் என்ன செய்ய முடியும்? நாங்கள் என்ன செய்ய முடியும்? சபை நடந்தால் நாங்கள் இங்கே வந்து சொல்ல முடியும். வேறு எந்த நேரத்தில் சொல்ல முடியும்? Who will bring the information to the Hon. Minister? அங்கே உள்ளாட்சித் துறை இயங்கவில்லை. அதிகாரிகள் தலைமையில் ஒரு ஆலோசனைக் குழு போட்டிருக்கிற வரையில் இந்தச் சங்கடங்கள்தான் இருக்கும். அந்த அதிகாரிகள் தலைமையில் ஒரு கமிட்டி போட்டுவிட்டதால், அரசு சார்பற்றவர்கள் வர முடியவில்லை. In our experience it is a failure.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:
The hon. Member should not address the Minister directly, but should address the Chair and through the Chair, he can convey his views to the Hon. Minister.
'நீங்கள்', 'உங்கள்' என்று சொல்வது தலைவரைத்தான் குறிக்கும்.

திரு. க. இராமமூர்த்தி: 'நீங்கள்' என்று சொல்வதை அரசு என்று கொள்ளவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இந்த நகராட்சி மன்ற தனி அதிகாரிகள் இன்னும் குறைந்த காலமே இருக்கப் போகிறார்கள் என்ற நிலைமையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அப்படி இருந்தாலும்கூட, இந்த இடைப்பட்ட காலத்தில் யாராவது இரண்டு பேர், அது ஆளும்கட்சி உறுப்பினராகவே இருக்கட்டும், அவர்களுக்கும் சம அந்தஸ்து, சம அதிகாரம் கொடுத்து, சேர்மன் என்று போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அந்தக் கமிட்டிக்கு இரண்டு பேர்களைப் போடுங்கள். There is no check. அப்படி செக் (check) இல்லாத காரணத்தால், இந்தத் தவறுகள் நடக்கின்றன. பல இடங்களில் அரசு சொல்கிற கருத்துக்களுக்கு நேர்மாறாக இருக்கின்றன. இதன் காரணமாக பெருவாரியான நஷ்டத்தைத் தவிர்த்திருக்க முடியும்.

வெள்ளச் சேதம் தமிழ் நாட்டில் அண்மையில் ஏற்பட்டது. பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளும், ஊராட்சி மன்ற அதிகாரிகளும் தக்க நேரத்தில் செயல்பட்டிருந்தால், பெருவாரியான வெள்ளச் சேதத்தைத் தவிர்த்திருக்க முடியும். பல இடங்களில் நீர்த்தேக்கங்களைத் திறந்து விட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

மக்கள் பிரதிநிதிகள் அங்கே இருந்திருந்தால், இவைகளெல்லாம் நடக்காமல் தடைப்பட்டிருக்கும். அதிகாரிகள் கடுமையாக இருப்பார்கள் என்ற நிலைமை இருந்திருந்தால், இவை நடக்காமல் இருந்திருக்கும். எனவே ஒரு பாதுகாப்பு

[திரு. க. இராமமூர்த்தி] [1984 மார்ச் 6

ஏற்பாடு இல்லாததன் காரணமாக, எது எப்படிப் போனாலும் நமக்குக் கவலை இல்லை என்று எல்லோரும் செயல்படுகிறார்கள். இதில் யாரும் தனிப்பட்ட முறையில் காரியங்களைச் செய்து விட முடியாது. இதற்குத் திண்டிவனம் ஒரு சான்று. அநேகமாகத் தென்னாற்காடு மாவட்டத்தில் பல இடங்களில் இது போன்ற குற்றச்சாட்டுக்கள்—இதைக் குற்றச்சாட்டுக்கள் என்றுகூட சொல்ல மாட்டேன்—இதுபோன்ற நிலைமைகள் இருந்து வருகின்றன. These things are going on.

ஆலந்தூருக்குப் போயிருந்தேன். திரும்பத் திரும்ப இதைத்தான் சொல்கிறார்கள். அவர்கள் சொன்ன 'சார்ஜெஸ் (charges) எல்லாம் உண்மை என்று நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் அங்கெல்லாம் தவறுகள் நடைபெறாமல் தடுக்க வேண்டிய ஒரு "கவுண்ட்டர் செக்" இல்லை என்பதை அரசு உணர வேண்டும். "தேர்தல் வந்துவிட்டது. ஏப்ரல் மாதத்தில் நடக்கப் போகிறது. எனவே இதெல்லாம் எதற்கு?" என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். நான்கூட அப்படித்தான் எதிர்பார்க்கிறேன். தேர்தல் நடக்க வேண்டும், நடத்தப்பட வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். ஆனால் தேர்தல் நடக்குமா என்ற வினா எல்லோருடைய வாயிலும் இருந்து வந்து கொண்டிருக்கிறது. தேர்தல் நடந்தாலும், எந்தக் காரணத்தால் நடக்காமல் போனாலும், இந்த மாற்று ஏற்பாடு இருக்கிறது என்ற நிலைமை இருந்தால் தான், அங்கே இருக்கிற நிலைமைகள் சீரடைய முடியும். அதற்கு ஏற்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறையின் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தலைப் பொறுத்தவரை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தயாராக இருக்கிறார்கள், அவருடைய துறையும் தயாராக இருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன். எனவே தேர்தல் குறிப்பிட்ட காலத்தில் நடத்தி முடிக்கப்பட்டாலும், நடத்தி முடிக்க முடியாவிட்டாலும், நிர்வாகத்தைப் பொறுத்தவரையில். ஒரு சீரமைப்புக்கு உரிய முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் தனியதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கும், நகராட்சி மன்றங் களுக்காக நியமிக்கப்பட்டிருக்கிற தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்குமாக நான்கு சட்ட முன்வடிவுகளை, தமிழக சட்டமன்றப்



1984 மார்ச் 6] [திரு. ப. குழந்தைவேலு]

பேரவை நிறைவேற்றி இங்கே மேலவைக்கு அனுப்பி வைத்துள்ளவைகளை, இம்மாமன்றம் ஆய்விற்கு எடுத்துக்கொண்டு, அதன்மீது மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக் கிறார்கள். இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் எப்போதும் பொதுவாக 20 நிமிடங்கள், அரை மணி நேரம் என்று பேசுகிறவர்கள்கூட தங்களின் காலத்தைக் குறைத்துக் கொண்டு இங்கே பேசியிருக்கிறார்கள். காரணம் நான் நேற்றையதினம் சட்டமன்றப் பேரவையில் இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தேதிகளை அறிவித்துள்ளேன். ஆகவே அறிவித்தபடி தேர்தல்கள் நடக்கும் என்ற எண்ணத்தோடு தங்களின் மேலான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள் என்பதற்காக நான் மீண்டும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, மூன்று மாதங்களுக்கான கால நீட்டிப்பை இச்சட்ட முன்வடிவுகளின் மூலம் கொண்டு வந்திருந்தாலும், அதை ஒரு மாதம் அல்லது இரண்டு மாதத்திற்குக் குறைத்துக் கொள்வதற்கான வழிவகைகள் அதிலே செய்யப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். ஆளுநர் உரையிலேயே உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எந்தெந்தத் தேதியில் நடத்த இருக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வருகிற ஏப்ரல், 19, 23 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களில் உள்ளாட்சி மன்றங் களுக்கு—ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல்கள்—நடத்தப் படும் என்றும், 28 ஆம் தேதி நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டிருக்கிறோம். நேற்றையதினம் பேரவையில் இந்தத் தேர்தல்களுக்கான அறிக்கையைச் சமர்ப்பித்தேன். அதற்குப் பின்னால் வேட்பு மனுக்களைக் கொடுப்பதற்கும், அவற்றைத் திரும்பப் பெறுவதற்குமான தேதிகளையெல்லாம் நான் நேற்றையதினம் பேரவையில் அறிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளை நாளேடுகளில் பார்த்திருப்பார்கள், படித்திருப்பார்கள். அதிலே அவர்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் ஏற்பட்டிருக்காது என்பதுதான் என்னுடைய ஆணித்தரமான கருத்தாகும். எனவே மீண்டும் அந்தத் தேதிகளையெல்லாம் இங்கே தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்ப மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

தேர்தலைப் பொறுத்தவரையில், நாம் இப்போது ஒரு புரட்சிகரமான திருத்தத்தை இந்தத் தேர்தலின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வர இருக்கிறோம் . . .

[1984 மார்ச் 6

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் தேதிகள் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டிருந்தாலும், To set the Records of this House clear. இந்த அவையிலும் அந்தத் தேர்தல் தேதிகளை அறிவித்து விடுவதுதான் நல்லது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, இந்த தேர்தலைப் பொறுத்த வரையில், சில புரட்சிகரமான திருத்தங்களை நாம் கொண்டு வந்திருக்கிறோம். இது வரையில் இந்த மாநிலத்தில் இப்படிப் பட்ட திருத்தங்களை பஞ்சாயத்துத் தேர்தல்களில், நகராட்சித் தேர்தல்களில் கொண்டுவரவில்லை. முதன் முதலாக தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இந்தத் திருத்தங்களை யெல்லாம் பஞ்சாயத்துத் தேர்தல்களிலும், நகராட்சித் தேர்தல்களிலும் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தி ஏப்ரல் 19, 23, 28 தேதிகளில் நடத்தவிருக்கிறது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், 378 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அதிலே 18 சதவீத இடங்கள் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்கள், பழங்குடி மக்கள் மலைவாழ் மக்கள் ஆகியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. 15 சதவீத இடங்கள் தாய்மார்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1971 ஆம் ஆண்டில் 18 சதவீதம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டுத் திருத்தத்திலும் அந்த அடிப்படையிலேதான் செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஒதுக்கீடு செய்வது என்பது 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படியும் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும் செய்யப்பட்டிருக்கின்றன. மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேதான் 18 சதவீத இடங்கள் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்கள், பழங்குடி மக்கள், மலை வாழ் மக்கள் ஆகியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. தனியாக 15 சதவீத இடங்கள்



1984 மார்ச் 6] [திரு. ப. குழந்தைவேலு]

தாய் மார்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. 50 ஒன்றியங்கள் தாய்மார்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. 61 ஒன்றியங்கள் ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே 111 ஒன்றியங்கள் ரிசர்வேஷன் அடிப்படையிலே ஒதுக்கீடு செய்யப்பட்டு பாக்கி இருக்கக்கூடிய 267 ஒன்றியங்கள் பொது ஒன்றியங்களாக அறிவிக்கப்பட்டிருக் கின்றன.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு எண்ணங்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில் "சில இடங்களில் முஸ்லிம் பெருமக்கள் அதிகமாக இருக்கிறார்கள்; அந்த இடங் களை பெண்களுக்காக ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள்; அல்லது ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, ஆகவே அவர்கள் கோர்ட்டுக் குப் போவார்கள்" என்ற எண்ணத்தை எடுத்துச் சொன்னார்கள். 1981 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், அந்தப் பகுதியில் பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் அப்படிச் செய் யப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் செய்யப் படவில்லை என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கி றேன். அவர்கள் கோர்ட்டுக்குப் போக வேண்டாம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குப் போனாலும் கூட, தேர்தலைக் கண்டிப்பாக நிறுத்த முடியாது. ஏனென்றால், ஏற்கெனவே உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. நாம் கொண்டு வந்திருக் கக்கூடிய ரிசர்வேஷன் செல்லும் என்ற அடிப்படையிலே அவர்கள் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே பஞ்சாயத்துத் தேர்தலை, ஒன்றியத் தேர் தலை உயர்நீதிமன்றம் முழுவதுமாகத் தடை செய்ய முடியாது. அப்படிப் பட்ட நிலையில் இந்தத் தேர்தல் வருகிறது. ஆனால் சுப்ரீம் கோர்ட்டில் ஏற் கெனவே ஒரு மேல் முறையீடு இருக்கிறது. அதனால் இப்போது தடை இல்லாமல் இருந்தாலும், "இப்போது தேதிகளை அறிவித்துவிட்டார்கள். ஆனால் இன்னும் என்னுடைய மேல் முறையீடு முடிவாகவில்லை. ஆகவே அந்தத் தேர்தலை நிறுத்த வேண்டும்" என்று ஒருவேளை மேல்முறையீடு செய்திருக்கக் கூடிய திரு. வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் மனுக்களைப் போடலாம். யார் அந்த வெங்கடாசலம் என்பது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அதிகமாக நான் சொல்ல வேண்டி யதில்லை என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட மனுவைப் போடாமல்

பாதுகாத்து பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த ஏதுவான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட திரு. வெங்கடாசலம் பிள்ளை அவர்களை எனக்குத் தெரியும். I will try my best. நிச்சயமாக அவரேகூட அவருடைய மனுவின் மீது தடை வாங்காமல் இருக்க என்னுடைய முயற்சியைச் செய்கிறேன். அவர் தடை வாங்காத நிலையில் தேர்தலை நடத்தும் பொறுப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. திரு. வெங்கடாசலம் பிள்ளை தனக்குத் தெரியாது என்று சொல்வார்களோ என்று பயப்பட்டேன். தெரியும் என்றும், அவர்களிடத்திலே எடுத்துச் சொல்வேன் என்றும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த காரணத்தாலே, எதிர் கட்சித் தலைவருக்கும் அவருக்கும் எவ்வளவு உறவு இருக்கிறது என்பதை சொல்லாமலேயே புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் தெரிந்தவர் என்பதோடு மட்டுமல்லாமல், எப்படிப்பட்ட உறவு இருக்கிறது என்று தெரிகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டாலும்கூட, அப்படி உறவு இருக்கலாம், அது வேறு. •ஆனாலும் பிரச்சினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததோடு மட்டும் நிற்கவில்லை.

(பிற்பகல் 12-20)

திரு. வெங்கடாசலம் பிள்ளை கோர்ட்டுக்குப் போனது ரிசர்வேஷனுக்காக மட்டுமல்ல. ரிசர்வேஷனை எப்படி செய்துவைத்தோம் என்பது குறித்துதான். அதற்கு அடுத்த ஆண்டிலே அமைச்சர் அவர்களுக்கே தெரியும். அரிசனங்களே இல்லாத இடத்தை நாம் 'டிஸ்கவர்' பண்ணினோம். தேர்தலுக்கு முன்னாடி ஏற்கெனவே ரிசர்வேஷன் பண்ணியதை திடீரென்று மாற்றி வைத்தோம். இதெல்லாம் பண்ணினோம். ஆனால் இப்போது அதெல்லாம் பண்ணமாட்டோம் என்கிற உறுதியை அரசு சார்பிலே இருந்து கொடுத்திருக்கிறார்கள். என்னவென்றால் They have gazetted the reservation, அதனாலே இந்த



நிலைமைகள், உச்ச நீதிமன்றத்திற்கு போச்சு என்பது முதலிலே அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இப்போது புதிய சட்டம், அதற்குப் பிறகு கொடுத் திருக்கிற வாக்குறுதிகள், இந்த கெசடெட் நோட்டிபிகேஷன் இதையெல்லாம் திரு. வெங்கடாசலம் பிள்ளை அவர்களும் பார்த்திருக்கிறார்கள் திரு. வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் தொடர்ந்து அதே அடிப்படையிலே மீண்டும் நீதிமன்றத்திலேயும், உச்சநீதி மன்றத்திலேயும் தடை கோர வேண்டிய அவசியம் இருக்காது என்ற தைரியத்திலே தான் நான் கூட சொல்கிறேன் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன், எதனாலே இவ்வளவு தூரம் அலைந்தது என்று.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த உச்ச நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கும் மேல்முறையீடு தனிப்பட்ட ஊராட்சி மன்றத்தையோ, ஊராட்சி ஒன்றியத்தையோ பற்றியது அல்ல. ரிசர்வேஷனே செல்லாது என்கின்ற எண்ணத்திலே தான் அவர்கள் வலியுறுத்தி இருக்கின்றார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஒரு அப்பீல் போடும்போது 10 முறையீடுகளைச் சொல்வோம். ஆனால் நம்முடைய முறையீடு ஒன்றுதான் இருக்கும். நமக்கு வேண்டிய பரிகாரம் ஒன்றுதான் இருக்கும். ஆனால் சொல்வது பத்தைச் சொல்வோம், இதில் ஏதாவது ஒன்று தேர்ந்துவிடாதா என்றுதான் just like a labour movement ஆகவே திரு. வெங்கடாசலம் பிள்ளை போட்டிருக்கிற வழக்கிலே என்ன என்ன இருக்கிறது என்பதை நானும் பார்த்துவிட்டேன். அதனாலேதான் நான் சொன்னேன் அவர் குறிப்பிட்டது அந்த அடிப்படையிலே தான் சென்றது. ஆனால் அதுக்கு மட்டும் தடை உத்தரவோ அல்லது உயர்நீதி மன்றத்திற்கோ, உச்சநீதி மன்றத்திற்கோ செல்ல வாய்ப்பு இல்லை என்கிற நிலைமை வரும்போது மற்றவைகளையும் சேர்த்து இழுத்துக்கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் அவருக்கு வந்தது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர், ஒரு வழக்கறிஞருமானதால் தான் இவைகளையெல்லாம் சொல்லவேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கிறது. ஏனென்றால் Grounds of appeal நாம் பிரிபேர் செய்யும்போதே, என்ன என்ன 'பாய்ன்ட்' நாம் போடுகின்றோம்; நம்முடைய 'பிரேயர்' என்ன என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். ஆகவே உயர்நீதி மன்றத்திலே தனிப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கோ, ஒன்றியத்திற்கோ அவர்கள் வாதாடி

யிருந்தால் இங்கே இருக்கக் கூடிய தீர்ப்பின் அடிப்படையிலே அவர்கள் மேல் முறையீடு செய்திருக்கக் கூடாது. ஆனால் இப்போது மேல் முறையீடு செய்திருக்கிறார்கள், உச்ச நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள் என்று சொன்னால், இருக்கக் கூடிய அரசியல் அமைப்புச் சட்டத்திலே இப்படிப்பட்ட ரிசர்வேஷன் இல்லை, ஆகவே இந்த ரிசர்வேஷனை தமிழ்நாடு அரசு, கொண்டு வந்தது தவறு என்கிற காரணத்துக்காகத் தான், அவர் மேல் முறையீடு செய்திருக்கிறார். அப்படித்தான் அவர் கிரௌன்ட்ஸ் ஆப் அப்பீலே 'பிரிபேர்' பண்ணியிருக்கின்றார்.

திரு. க. இராமமூர்த்தி: உயர்நீதி மன்றத்திலே ஒரு தீர்ப்பு வாங்கியிருக்கிறார்கள். உயர்நீதி மன்றத்திலே அரசாங்கத்துக்கு இந்த ரிசர்வேஷன் செய்ய உரிமை இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். அந்த அடிப்படையிலே உச்ச நீதி மன்றத்திற்குப் போவதற்கு உயர்நீதி மன்றம் அனுமதி வழங்கவில்லை. அதையும் சேர்த்து உச்ச நீதிமன்றத்திற்குப் போகவேண்டுமானால், இன்னொன்றிலேயும் கிரௌன்ட்ஸ் ஆப் அப்பீல் கொண்டு போக வேண்டும். அங்கே We had the Constitutional point. இந்தத் தீர்ப்பை எதிர்த்துப் போகவேண்டிய கட்டாயம் வந்தால் தான் அவர் என்ன சொல்கிறாரோ அந்த கிரௌன்ட்ஸ் ஆப் அப்பீலை உச்ச நீதி மன்றத்திற்குக் கொண்டுபோக முடியும். இல்லை என்றால் அவருடைய 'கிரௌன்ட்ஸ் ஆப் அப்பீல்' (Grounds ) appeal) இங்கேயே முடிந்து போய்விடுகிறது. அது மேலே இந்த இன்னொரு பாயின்ட்டைச் சேர்த்து எடுத்தும் போக வேண்டியிருந்தது. ஆகவே ஒரு பாய்ண்ட்லே நாம் சரியாகப் பண்ணி இருந்தால் மேலே போகவேண்டி வந்திருக்காது. எதோ It is all over, Now it has come to a stage where there is no necessity for a stay.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்களும், உறுப்பினர்களும் பேசியாகிவிட்டது. அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு ஏதாவது ஒன்றிரண்டு கேள்வி இருந்தால், அது சரியாக இருக்கும். பேசிக் கொண்டே இருக்கும்போது குறுக்கிட்டால் ரொம்ப நேரம் ஆகுமென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றங்கள் இல்லாத காரணத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்



கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. மாணிக்கம் அவர்கள் ரிசர்வேஷன்கள் இப்போது செய்யப்பட்டிருப்பதெல்லாம் மாறும் என்கின்ற ஒரு கருத்தினைத் தெரிவித்தார்கள். அப்படி மாற்றப்படவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், 1981 ஆம் ஆண்டு ஜனத் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலே நாம் செய்திருக்கிறோம். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கணக்கு எடுக்கப்படுகிறது. ஆகவே 1991-ல் வேண்டுமானால் மாறலாமே தவிர, இப்போது மாற்றவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் 1981-க்குப் பின்னாலே, 1982, 1983, 1984 ஆம் வருஷங்களிலே 18 வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளித்திருந்தாலும் கூட, அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கின்ற முறையிலே எலக்டோரல் ரோலிலே அவர்களுடைய பெயரை நாம் சேர்க்கின்றோமே தவிர, அதற்காக நாம் மீண்டும் தொகுதிகளை மாற்ற முடியாது. இந்திய ஜனத்தொகைக் கணக்கெடுப்பு நமக்குக் கொடுத்தால், அந்தக் கணக்கெடுப்பு அடிப்படையில்தான் நாம் மாற்ற முடியுமே தவிர வேறல்ல. ஆகவே இதையேதான் 'மோடாலிட்டிஸ்' ஆக, 'கைட்லைன்ஸ்' ஆக இங்கே இருக்கக்கூடிய உயர்நீதி மன்றத்திலே நமக்குக் கொடுத்திருக்கின்றார்கள். ஆக 1981 ஆம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையிலேதான் இது செய்யப்பட்டிருக்கிறது. இதை மாற்ற முடியுமா என்று சொன்னால் கண்டிப்பாக மாற்ற முடியாது. அப்படிப்பட்ட நிலையிலே நாம் இந்த ஒதுக்கீடுகளைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே ஒதுக்கீடுகளைச் செய்து, புதிய சட்டத் திருத்தத்தின் அடிப்படையிலே நாம் இந்தத் தேர்தலை நடத்த இருக்கிறோம்.

இதிலே முக்கியமான ஒன்று. ஊராட்சி ஒன்றியங்களுக்கு நாம் தேர்தல் நடத்துகிறோம் என்று சொன்னால், It is a direct election. ஒன்றியத்திலே இருக்கக்கூடிய மக்கள் எல்லோரும் சேர்ந்து வாக்களித்து ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும். முன்பு அப்படிப்பட்ட முறை இல்லை. அங்கு இருக்கக்கூடிய ஊராட்சி மன்றத் தலைவர்கள்தான் ஒன்று சேர்ந்து யார் ஊராட்சிய ஒன்றியத் தலைவராக வருவது என்று முன்பு கணித்தார்கள். ஆனால் இப்போது மக்களே ஊராட்சி ஒன்றியத் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்ற முறையை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதிலேகூட அரசியல் கட்சியின் சார்பிலே நாளைக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கு யார் யார் நிற்கின்றார்களோ அவர்களுக்கு மட்டும் தான் அரசியல் சின்னங்கள் கொடுக்கப்படுமே தவிர, அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கோ அல்லது ஊராட்சி மன்றத்திலே இருக்கக்கூடிய வார்டு கவுன்சிலில்,

இருக்கக்கூடியவர்களுக்கோ, இந்தச் சின்னங்கள் கொடுக்கப்படாது. அவர்களுக்கெல்லாம் சுயேச்சைச் சின்னங்கள் தான் கொடுக்கப்படும். ஒன்றியத் தலைவர் பதவிக்கு நிற்கின்றவர்களுக்கு மட்டுமே, அரசியல் சார்புள்ளவர்களுக்கு சின்னங்கள் கொடுக்கப்படும் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தமிழகத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு புரட்சிகரமான தேர்தலாகத்தான் இருக்கப்போகிறது. அந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு ஏதுவான முறையில், நல்ல உதவிகளை, நல்ல ஒத்துழைப்பை இங்கே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளின் தலைவர்களாக இருப்பவர்கள் எங்களுக்குக் கொடுத்துதவ வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே பேரவையிலே தெரிவித்ததைப்போல, இங்கேயும் கூட நான் அந்தத் தேதிகளையெல்லாம் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எலெக்ஷன் நோட்டீஸ்—

எலெக்ஷன் அறிவிக்கை கொடுத்தல் 20—3—1984.

ரெசிட் ஆஃப் நாமினேஷன்ஸ்—

அதாவது வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யக்கூடிய நாட்கள் 26—3—1984, 27—3—1984, 28—3—1984.

ஸ்குரிட்டினி ஆஃப் நாமினேஷன்ஸ் : 29—3—1984.

வித்ட்டிராயல் ஆஃப் நாமினேஷன்ஸ் : 31—3—1984.

பப்ளிகேஷன் ஆஃப் ஃபைனல் கன்டெஸ்டிங் கேன்டிடேட்ஸ் 3—4—1984 அன்று.

ஆகவே எலெக்ஷன் இரண்டு கட்டங்களாக நடைபெறும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பொறுத்த அளவில் நடைபெறும். ஆக, பர்ஸ்ட் பேட்ச் 19—4—1984, வியாழக்கிழமை அன்று நடைபெறும். இரண்டாவது கட்டமாக 23—4—1984, திங்கட்கிழமை அன்று நடைபெறும். ஓட்டு எண்ணிக்கை ஒன்றாகத்தான் இருக்கும். அதாவது 29—4—1984 அன்று ஓட்டு எண்ணிக்கை நடைபெறும். ஏற்கெனவே நம்முடைய தோழமைக் கட்சி தோழர்களும் மற்றுமுள்ள கட்சித் தோழர்களும் வெள்ளிக்கிழமை கூடாது, ஞாயிற்றுக்கிழமை கூடாது என்றார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் வேறு கிழமைகளில் நாம் தேர்தலை நடத்துகிறோம் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அதைப்போலவே, நகராட்சிகளுக்குண்டான தேர்தல் தேதிகளைச் சொல்கிறேன்.

எலெக்ஷன் நோட்டீஸ் 20—3—1984.

ரெசிட் ஆஃப் நாமினேஷன்ஸ் 29—3—1984, 30—3—1984, 31—3—1984.

ஸ்குரிட்டினி ஆஃப் நாமினேஷன்ஸ் 3—4—1984.

வித்ட்ராயல் ஆஃப் நாமினேஷன்ஸ் 6—4—1984 மாலை 3 மணிவரை.

பப்ளிகேஷன் ஆஃப் ஃபைனல் கன்டெஸ்டிங் கேண்டிடேட்ஸ் 6—4—1984 மாலை 5 மணிவரை.

டேட் ஆஃப் எலெக்ஷன் 28—4—1984.

கௌண்டிங் ஆஃப் ஓட்ஸ் 29—4—1984.

ஆகவே அந்தத் தேதிகளில் நாம் தேர்தலை நடத்த இருக்கிறோம். இதிலே யாருக்கும் சந்தேகம் வரத் தேவையில்லை என்று நினைக்கிறேன். ஆனால் சந்தேகம் இருக்கிறது என்பதை அடிக்கடி சொல்வதனுடைய காரணமாகத் தான் எனக்கே ஒரு சந்தேகம் வருகிறது. இங்கே இருக்கக்கூடிய கட்சித் தலைவர்கள் மீதே சந்தேகம் ஏற்படுகிறது. என்ன சந்தேகம்? நாங்கள் கொண்டு வருகின்ற நேரத்திலே எல்லாம் 'இந்தத் தேர்தல் நடைபெறாது, சந்தேகமாக இருக்கிறது' என்று அவர்கள் சொல்வதனால் இங்கே இருக்கின்றவர்கள் அதற்கு நாளைக்கு உடந்தையாக இருந்து விடுவார்களோ என்ற எண்ணம், சந்தேகம்கூட எனக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தான் நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில், எப்படி எப்போது இந்தத் தேர்தலை சீக்கிரமாக நடத்தவேண்டுமென்ற இந்த அரிய பெரிய முயற்சியிலே நாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே எங்களுக்கு உதவிகரமாக இருந்து, இந்தத் தேர்தலை நல்ல முறையிலே நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வந்திருக்கின்ற மசோதாக்களுக்கு ஏதாவது திருத்தங்கள் கொடுத்திருந்தாலும், அவைகளை எல்லாம் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவுகளை சட்டங்களாக ஆக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றம் modalities கொடுத்திருக்கிறதென்று சொன்னார்கள். அந்த modalities have not been properly applied என்ற குற்றச்சாட்டு ஒன்று இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, modalities ஐப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல சென்சஸ் அடிப்படையிலே ரிசர்வேஷன் பெண்களுக்கும், அரிஜனங்களுக்கும் என்று தெரிவித்தார்கள். சென்சஸ் மட்டும்தான் அடிப்படையா அல்லது வோட்டர்ஸ் லிஸ்டும் பரிசீலனை செய்யப்பட்டதா? வாக்காளர்களில் பெருவாரியானவர் அரிஜனங்களாக இருக்கிற இடம் ரிசர்வேஷனுக்குத் தரப்பட்டதா? வாக்காளர்களாக அவர்கள் அதிகமாக இல்லை என்றால், சங்கடங்கள் வருமே, அதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே வழிகாட்டி முறைகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலேதான் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே இதிலே இந்தத் தவறுகள் நடைபெறுவதற்கு சாத்தியம் இல்லை. ஒதுக்கீடுகள் வாக்காளர்களின் எண்ணிக்கை அடிப்படையிலே செய்யக்கூடாது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையிலேதான் செய்யவேண்டும்.

Thiru J. M. MIAKHAN: I want to know from the Hon. Minister, through the Chair . . . .

Mr. DEPUTY CHAIRMAN: Normally, only those hon. Members who have spoken on the Bill are allowed to ask clarificatory questions. Members who have not spoken on the Bill normally do not ask such questions.

Thiru J. M. MIAKHAN: Sir, it was said that certain modalities had been accepted and that they were being followed. Now, certain constituencies have been selected for the Adi Dravidars to contest and certain constituencies have been set apart for women candidates. But, in those constituencies, certain areas where Muslims live in a majority have also been included. It was said that the present



முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(4) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள். (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1984).**

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/1984) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

@ 108 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆம் அச்சிடப்பட்டுள்ளது.

1984 மார்ச் 6]

reservation could be changed for ten more years. But, if the Government themselves find that the modalities have been wrongly applied, will they change it? We find such instances in many places like Kadayanallur, Tenkasi, Melapalayam and Vaniyambadi.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது ரிசர்வேஷன் செய்யப்பட்டிருந்தாலும்கூட, இவைகள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்படும். ஆகவே இவைகள் எல்லாம் நிரந்தரம் என்று நான் சொல்லவில்லை. ஆகவே இப்போது ஆம்பூர் என்பது தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, வாணியம்பாடி பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கடையநல்லூர் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் எனக்குத் தெரியும். அதிகமாக முஸ்லீம்கள் இருக்கக்கூடிய பகுதியானாலும்கூட, பெண்கள் ஜனத் தொகை அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினாலே அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. இவைகள் மாற்றப்படும். ஆகவே கண்டிப்பாக அடுத்தமுறை வாணியம்பாடியிலோ, ஆம்பூரிலோ இப்படிப்பட்ட நிலைமை இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1. சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட



1984 மார்ச் 6] [திரு. ப. குழந்தைவேலு]

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1984) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1984) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1984).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை

@ 217 ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சட்டமுன்வடிவு எண் 6/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1984) நிறைவேற்றப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1984) நிறைவேற்றப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(6) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1984).**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 217-218 ஆம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1984) நிறைவேற்றப்படவேண்டும்",

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1984) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 7—3—1984 புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-37)

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

90. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நெய்யூரிலுள்ள அனைத்து நாட்டு புற்று நோய் மையத்திற்குச் சொந்தமான ஆம்புலென்ஸ் வண்டிக்குச் செலுத்தத்தக்க வரியைக் குறைப்பது தொடர்பாக, உள்துறையின் 30—12—1983 ஆம் நாளிட்ட 2759 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது.]

91. வளர்ச்சித்துறையின் 13—12—1949 ஆம் நாளிட்ட அறிவிக்கையில் வெளியிட்ட விதிகளில் செய்யப்பட்ட திருத்தம் தொடர்பாக வன-மீன்துறையின் 7—9—1983 ஆம் நாளிட்ட 696 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு தனியார் காடுகளைப் பாதுகாத்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1949) 12 எ (2) ஆம் பிரிவின் கிழ் அவை முன் வைக்கப்பட்டது].

92. தமிழ்நாட்டு கடற்கரை ஓரப்பகுதியிலிருந்து கடல்நீரில் மூன்று மைல் அளவிற்குள் வலை போட்டு மீன்பிடிப்பது தொடர்பாக வன-மீன் துறையின் 27—6—1983 ஆம் நாளிட்ட 765 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடலில் மீன் பிடித்தலை முறைப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1983) 26 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

93. சென்னை தொலைக்காட்சி நிலையம் செலுத்தத்தக்க வரி அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்தல் தொடர்பாக, உள்துறையின் 22—11—1983 ஆம் நாளிட்ட 2444 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

94. திருவனந்தபுரம், திருவாளர்கள் கேரளா சரக்குப் போக்குவரத்துக் கூட்டுறவுக் கழகம் செலுத்தத்தக்க வரி அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்தல் தொடர்பாக, உள்துறையின் (போ. 1) 30—12—1983 ஆம் நாளிட்ட 2760 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].



95. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணைக் குழுவின் விதிமுறைகளில் திருத்தங்கள் செய்தது தொடர்பாக பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர்) துறையின் 22—6—1983 ஆம் நாளிட்ட 551 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

96. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக் குழுவின் விதிமுறைகளில் திருத்தங்கள் செய்தது தொடர்பாக, பணியாளர்-நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர் எம்.) துறையின் 30—11—1982 ஆம் நாளிட்ட 1136 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

97. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் விதிமுறைகளில் திருத்தங்கள் செய்தது தொடர்பாக, பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் (பணியாளர் எம்.) 22—6—1983 ஆம் நாளிட்ட 550 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

98. வேளாண்மைத்துறையின் 19—1—1970 ஆம் நாளிட்ட அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக, வேளாண்மைத்துறையின் 23—11—1983 ஆம் நாளிட்ட 1986 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

99. சில குறிப்பிட்ட இனங்களைப் பொறுத்தவரையில் புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி அங்காடிப்பகுதியை அறிக்கையிட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது தொடர்பாக, வேளாண்மைத்துறையின் 19—11—1983 ஆம் நாளிட்ட 1975 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனையதாள்கள்.

இல்லை.

## இணைப்பு I

(109 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 51-க்கான விடையைக் காண்க.)

1983-84-ல் ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்ற மிகைப்பற்றுகள் விவரம்.

| நாள். | தொகை. |
|---|---|
| ஏப்ரல் 1983— | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 5—4—1983 | 1,372.50 |
| 6—4—1983 | 2,000.37 |
| 7—4—1983 | 1,095.43 |
| 8—4—1983 | 642.84 |
| 9—4—1983 | 316.83 |
| 10—4—1983 | ஞாயிறு |
| 11—4—1983 | 128.90 |
| 15—4—1983 | 124.90 |
| 16—4—1983 | 96.28 |
| 18—4—1983 | 4.81 |
| 22—4—1983 | 65.39 |
| 23—4—1983 | 137.06 |
| | 5,975.30 |
| மே 1983— | |
| 31—5—1983 | 648.05 |
| | 648.05 |



| | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| ஜூன் 1983— | |
| 1—6—1983 | 390.52 |
| 9—6—1983 | 1,796.31 |
| 10—6—1983 | 9.49 |
| 11—6—1983 | 130.99 |
| 13—6—1983 | 3,097.09 |
| 14—6—1983 | 69.04 |
| 15—6—1983 | 252.67 |
| 17—6—1983 | 3.31 |
| 18—6—1983 | 45.90 |
| 20—6—1983 | 190.13 |
| 23—6—1983 | 77.46 |
| 24—6—1983 | 14.39 |
| 25—6—1983 | 314.30 |
| | 6,391.60 |
| ஜூலை 1983— | |
| 2—7—1983 | 222.20 |
| 5—7—1983 | 392.95 |
| 6—7—1983 | 448.78 |
| 7—7—1983 | 48.71 |
| 14—7—1983 | 656.97 |
| 15—7—1983 | 762.57 |
| 18—7—1983 | 425.96 |
| 20—7—1983 | 93.77 |
| 21—7—1983 | 293.37 |
| 23—7—1983 | 139.21 |
| | 3,484.49 |

| | தொகை. (ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| **ஆகஸ்ட் 1983—** | |
| 1—8—1983 | 624.06 |
| 2—8—1983 | 135.44 |
| 3—8—1983 | 284.15 |
| 6—8—1983 | 1,644.02 |
| 9—8—1983 | 226.31 |
| 10—8—1983 | 177.96 |
| 11—8—1983 | 10.10 |
| 13—8—1983 | 314.11 |
| 16—8—1983 | 595.16 |
| 19—8—1983 | 75.53 |
| 20—8—1983 | 69.19 |
| 22—8—1983 | 110.08 |
| | 4,466.11 |
| **செப்டம்பர் 1983—** | |
| 15—9—1983 | 565.16 |
| 16—9—1983 | 332.49 |
| 17—9—1983 | 152.23 |
| 19—9—1983 | 58.12 |
| 20—9—1983 | 347.84 |
| 22—9—1983 | 376.72 |
| 23—9—1983 | 144.44 |
| 24—9—1983 | 174.01 |
| 26—9—1983 | 48.99 |
| 27—9—1983 | 12.83 |
| 28—9—1983 | 227.39 |
| 29—9—1983 | 444.64 |
| | 2,884.86 |



| | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **அக்டோபர் 1983—** | |
| 1—10—1983 | 863.95 |
| 4—10—1983 | 1,401.92 |
| 5—10—1983 | 813.68 |
| 6—10—1983 | 329.84 |
| 7—10—1983 | 252.16 |
| 8—10—1983 | 369.21 |
| 10—10—1983 | 215.91 |
| 12—10—1983 | 206.02 |
| 13—10—1983 | 137.96 |
| 14—10—1983 | 355.68 |
| 15—10—1983 | 1,806.70 |
| 18—10—1983 | 331.50 |
| 20—10—1983 | 221.51 |
| 21—10—1983 | 202.03 |
| 25—10—1983 | 37.77 |
| 26—10—1983 | 221.73 |
| 27—10—1983 | 186.53 |
| 28—10—1983 | 139.10 |
| | 8,093.20 |

சுருக்கம்

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| ஏப்ரல் 1983 | 5,975.30 |
| மே 1983 | 6,48.95 |
| ஜூன் 1983 | 6,391.60 |
| ஜூலை 1983 | 3,484.49 |
| ஆகஸ்ட் 1983 | 4,466.11 |
| செப்டம்பர் 1983 | 2,884.86 |
| அக்டோபர் 1983 | 8,093.20 |
| | 3,19,43.61 |

## இணைப்பு II

(..10ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 55-க்கான விடையைக் காண்க.)

### விவர அறிக்கை

சட்டமன்ற மேலவை வினா எண். 1429,7-12-81

### விடை

(அ) 1981–82-ல் புதிதாக தொடங்கப்பட்ட பள்ளிகளின் விவரங்கள்:—

| | உயர்நிலைப் பள்ளிகள் | மேல்நிலைப் பள்ளிகள் |
|---|---|---|
| அரசுப் பள்ளிகள் | 98 | 68 |
| நகராட்சிப் பள்ளிகள் | 2 | 3 |
| தனியார் துறை (சிறுபான்மையர் அல்லாத பள்ளிகள்) | 18 | 30 |
| சிறுபான்மையர் | 7 | .. |
| மெட்ரிக் | .. | 4 |
| | 125 | 105 |

இது தவிர, சிறுபான்மையோர் துவக்கிய 16 உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரை அப்பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவது இணைப் பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

(இ) அனுமதி மறுக்கப்பட்ட பள்ளிகள்:—

| | உயர்நிலைப் பள்ளிகள். | மேல்நிலைப் பள்ளிகள். |
|---|---|---|
| அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகள் | 52 | 106 |
| தனியார் துறை பள்ளிகள் (சிறுபான்மையர் அல்லாதது) | 11 | 20 |
| | 63 | 126 |

(உ) மறுக்கப்பட்ட பள்ளிகளின் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

பொதுவாக உயர்நிலைப் பள்ளி துவங்குவதற்கு அல்லது உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அவற்றை நிறைவு செய்யாத பள்ளிகளை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அனுமதி வழங்குவதில்லை.



## இணைப்பு 1.

அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பள்ளிகளின் விவரங்கள்:—

| வரிசை எண். | மாவட்டம் | ஊரின் பெயர் |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | காட்டுக்கரணை |
| 2 | ,, | கொரட்டூர் |
| 3 | ,, | பாடியநல்லூர் |
| 4 | தென் ஆற்காடு | தென்பேர் புதுப்பாளையம் |
| 5 | ,, | நெசல் |
| 6 | ,, | தியாக துருக்கம் |
| 7 | ,, | மேல்பட்டாம்பாக்கம் |
| 8 | வட ஆற்காடு | பணப்பாக்கம் |
| 9 | ,, | காரப்பட்டு |
| 10 | ,, | மாதனூர் |
| 11 | சேலம் | எம். செட்டிப்பட்டி |
| 12 | பெரியார் | மின்னம்பாளையம் |
| 13 | ,, | வீரப்பன் சத்திரம் |
| 14 | ,, | குறிச்சி |
| 15 | ,, | தம்மாரெட்டிபாளையம் |
| 16 | கோயம்புத்தூர் | சாமிகவுண்டன் பாளையம் |
| 17 | தஞ்சாவூர் | மன்னார்குடி (நகராட்சி) |
| 18 | ,, | நீலகிரி (நகராட்சி) |
| 19 | ,, | திருத்துறைப்பூண்டி |
| 20 | திருச்சிராப்பள்ளி | வாளசிராமணி |
| 21 | ,, | பள்ளப்பாளையம் |
| 22 | ,, | துவாக்குடி |
| 23 | ,, | வெங்கலம் |
| 24 | புதுக்கோட்டை | காரையூர் |
| 25 | ,, | கீழப்பட்டி ராசியாமங்கலம் |
| 26 | ,, | கீழா நிலக்கோட்டை |
| 27 | இராமநாதபுரம் | ஸ்ரீவில்லிபுத்தூர் (நகராட்சி) |
| 28 | திருநெல்வேலி | நாரைக்கிணறு |
| 29 | ,, | ஒட்டநத்தம் |
| 30 | ,, | சுந்தரபாண்டிபுரம் |

இணைப்பு 1—தொடர்ச்சி.

அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பள்ளிகளின் விவரங்கள்—தொடர்ச்சி.

| வரிசை எண் | மாவட்டம். | ஊரின் பெயர். |
|---|---|---|
| 31 | திருநெல்வேலி | கட்டளை குடியிருப்பு |
| 32 | கன்னியா குமரி | திக்குறிச்சி |
| 33 | ,, | வாத்தியார் கோணம் |
| 34 | ,, | பூவன்கோடு |
| 35 | ,, | வடக்குத் தாமரைக் குளம் |
| 36 | ,, | சுசீந்தரம் |
| 37 | ,, | கடமாங்குழி |
| 38 | ,, | ஈச்சன் விளை |
| 39 | ,, | பெருவிளை |
| 40 | ,, | பூதபாண்டி |
| 41 | ,, | ஏழகரம் |
| 42 | ,, | செண்பகராமன்புதூர் |
| 43 | ,, | வடலிவிளை |
| 44 | ,, | அனந்தபுரம் |
| 45 | ,, | ஈசாந்திமங்கலம் |
| 46 | ,, | வாரியூர் |
| 47 | ,, | ஒற்றையால்விளை |
| 48 | ,, | ஆரல்பெருமாள் புரம் |
| 49. | | ஆரல்குமாரபுரம். |
| 50. | | மகாதானபுரம். |
| 51. | | குலசேகரபுரம். |
| 52. | ,, | திருவெட்டாறு. |

இணைப்பு 2.

1981-82—அனுமதி மறுக்கப்பட்ட சிறுபான்மையரல்லாத பள்ளிகள்

1. அரங்கைய நாயுடு உயர்நிலைப் பள்ளி, அய்யனாவரம், சென்னை.
2. தேவ பிதா உயர்நிலைப் பள்ளி, செம்பியம்.
3. கோதண்டராமன் உயர்நிலைப் பள்ளி, ஊத்துக்கோட்டை, செங்கற்பட்டு மாவட்டம்.



இணைப்பு 2—தொடர்ச்சி.

1981-82—அனுமதி மறுக்கப்பட்ட சிறுபான்மையரல்லாத பள்ளிகள்—தொடர்ச்சி.

4. குலில்சந்த் உயர்நிலைப்பள்ளி, திண்டிவனம்.
5. ராஜா உயர்நிலைப் பள்ளி, மட்சாண்டார் கோவில், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
6. நாடார் குருவம்மாள் மெமோரியல் உயர்நிலைப் பள்ளி, மதுரை.
7. மகாஜன சங்கம் உயர்நிலைப் பள்ளி, மேதலோடை, இராமநாதபுரம் மாவட்டம்.
8. நாடார் உறவின் முறை உயர்நிலைப் பள்ளி, திருத்தங்கல், இராமநாதபுரம் மாவட்டம்.
9. பெரியார் நாகம்மை உயர்நிலைப் பள்ளி, இராயகிரி, திருநெல்வேலி மாவட்டம்.
10. உயர்நிலைப் பள்ளி, மேலச் சேவல், திருநெல்வேலி.
11. அருள்மிகு மாரியம்மன் யாதவா உயர்நிலைப் பள்ளி, பெருமாள் தேவன்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம்.

இணைப்பு 3.

மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள்.

1. அரசினர் உயர்நிலைப் பள்ளி, ஓலக்கூர்.
2. ,, தொழுதூர்.
3. ஏ. வி. நாராயணசாமி செட்டியார் மகளிர் உயர்நிலைப் பள்ளி, அரியூர்.
4. அரசினர் உயர்நிலைப் பள்ளி, வி. பகண்டை.
5. ,, பூண்டியன் குப்பம்.
6. ,, வேப்பூர்.
7. காந்தி உயர்நிலைப் பள்ளி, திருச்சிற்றம்பலம்.
8. நகராட்சி உயர்நிலைப் பள்ளி, பீமநாய்க்கன் தோப்பு, விழுப்புரம்.
9. அரசினர் நல உயர்நிலைப் பள்ளி, சேப்பாக்கம்.
10. அரசினர் உயர்நிலைப் பள்ளி, சுவாமிமலை.
11. ,, நான்குர்.
12. ,, திட்டச்சேரி.

இணைப்பு 3—தொடர்ச்சி.

மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட உயர் நிலைப் பள்ளிகள்—தொடர்ச்சி

13. அரசினர் உயர்நிலைப் பள்ளி, மேலாளூர்.
14. அரசினர் மேல்நிலை மற்றும் மகளிர் ஆசிரியர் பயிற்சி நிலையம், தஞ்சாவூர்.
15. கிருஷ்ணமூர்த்தி முதலியார் நினைவு உயர்நிலைப் பள்ளி, கோயில் பட்டு.
16. எஸ். எஸ். டி. ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, திருவெண்காடு.
17. புனித ஊர்து அன்னை மகளிர் உயர்நிலைப் பள்ளி, தென்னூர்.
18. பி.எம். உயர்நிலைப் பள்ளி, கரூர்.
19. அரசினர் உயர்நிலைப் பள்ளி, கே. பரமாதி.
20. ,, கோவிந்தவாடி.
21. அரசினர் உயர்நிலைப் பள்ளி, கத்திவாக்கம்.
22. ,, எலப்பாக்கம்.
23. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, பொன்னேரி.
24. அரசினர் உயர்நிலைப் பள்ளி, திருப்புக்குளி.
25. ,, தாமல்.
26. ,, கோவூர்.
27. ,, குறும்பேரி.
28. ,, பேரம்பட்டு.
29. ,, காஞ்சி.
30. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, செங்கம்.
31. அரசினர் உயர்நிலைப் பள்ளி, இரும்பேடு.
32. அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, மாமண்டூர்.
33. அரசினர் உயர்நிலைப் பள்ளி, திருமால்பூர்.
34. அரசினர் (வன) உயர்நிலைப் பள்ளி, ஜம்னாமருதூர்.
35. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பிரம்மதேசம்.
36. ,, புரிசை.
37. ,, மேல் ஆரணி.



38. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, பேரணாம்பட்டு.
39. அனைகார் ஓரியண்டல் (அரபிக்) உயர்நிலைப் பள்ளி, ஆம்பூர்.
40. அரசினர் உயர்நிலைப் பள்ளி, புதுப்பேட்.
41. ,, அனக்கூர்.
42. ,, தலைமலைப்பட்டி.
43. நகராட்சி உயர்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
44. அரசினர் உயர்நிலைப் பள்ளி, தங்கமலை.
45. ,, தின்னனூர்.
46. அறிஞர் அண்ணா அரசினர் உயர்நிலைப் பள்ளி, பச்சைப்பெருமாள் பட்டி.
47. அரசினர் உயர்நிலைப் பள்ளி, சிக்கதாம்பூர.
48. ,, புதூர் பாளையம்.
49. ,, பள்ளம்பாடி.
50. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, தொட்டியம்.
51. அரசினர் உயர்நிலைப் பள்ளி, உப்பிலியாபுரம்.
52. ,, செங்காத்துப்பட்டி.
53. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, மணச்சநல்லூர்.
54. அரசினர் உயர்நிலைப் பள்ளி, வாரியங்காவல்.
55. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, டவுன் ஹால், திருச்சிராப் பள்ளி-2.
56. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பூவை மாநகர்.
57. ,, நெடுவாசல்.
58. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருப் பரங்குன்றம்.
59. கே. நடராஜ பிள்ளை நினைவு பிள்ளைமார் சங்கம் உயர்நிலைப் பள்ளி, சம்மட்டிபுரம்.
60. பச்சையப்பா இந்து நாட்டார் உயர்நிலைப் பள்ளி, காமாட்சிபுரம்.
61. அரசினர் உயர்நிலைப் பள்ளி, அல்லிநகர்.
62. ஸ்ரீ கோபாலகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளி, சிறுதூர்.
63. அரசினர் உயர்நிலைப் பள்ளி, திண்டுக்கல்.
64. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பாகனேரி.

65. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருபுவனம்.
66. அரசினர் உயர்நிலைப் பள்ளி, எம். ரெட்டியார்பட்டி.
67. சையது முகம்மது அரசினர் உயர்நிலைப் பள்ளி, தொண்டி
68. ஆர். எம். எம். மகளிர் உயர்நிலைப் பள்ளி, பள்ளத்தூர்.
69. சீத்தாள் ஆச்சி நினைவு உயர்நிலைப் பள்ளி, கண்டனூர்.
70. எஸ். எஸ். இந்து உயர்நிலைப் பள்ளி, மச்சாலூர்.
71. அரசினர் உயர்நிலைப் பள்ளி, என். சுப்பையாபுரம்.
72. டி. கே. ஜி. உயர்நிலைப் பள்ளி, குன்றக்குடி.
73. அரசினர் உயர்நிலைப் பள்ளி, நல்லி.
74. ,, மல்லன் கிணறு.
75. ,, பெரியபட்டிணம்.
76. ஜே. பி. உயர்நிலைப் பள்ளி, புதியாம்பத்தூர்.
77. பி. எஸ். சாத்தப் செட்டியார், உயர்நிலைப் பள்ளி, சண்முகநாதபுரம்.
78. எம். எஸ். பி. எஸ். என் உயர்நிலைப் பள்ளி, மல்லன் கிணறு.
79. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, புலியன்குடி.
80. அரசினர் உயர்நிலைப் பள்ளி, அலமாநாய்க்கபட்டி.
81. ஜான் தி பாப்டிஸ்ட் உயர்நிலைப் பள்ளி, புதியாம்புத்தூர்.
82. வள்ளியம்மையார் மகளிர் உயர்நிலைப் பள்ளி, குலசேகரபட்டினம்.
83. அரசினர் உயர்நிலைப் பள்ளி, வல்லநாடு.
84. ,, பரிவில்லிகோட்டை.
85. கோமதி அருள்நெறி மகளிர் உயர்நிலைப் பள்ளி, களக்காடு.
86. ஸ்டெல்லா மேரிஸ் மகளிர் உயர்நிலைப் பள்ளி, திசையன்விளை.
87. பாத்திமா மகளிர் உயர்நிலைப் பள்ளி, வள்ளியூர்.
88. அரசினர் உயர்நிலைப் பள்ளி, வானரமுட்டி.
89. மீனாட்சி சுந்தரம் நினைவு உயர்நிலைப் பள்ளி, இடைக்கால்.
90. அரசினர் உயர்நிலைப் பள்ளி, குளத்தூர்.
91. ,, இளையரசநந்தல்.
92. ,, பரப்பாடி.
93. எல். எம். எஸ். மகளிர் உயர்நிலைப் பள்ளி, சாந்தபுரம்.



94. அரசினர் உயர்நிலைப் பள்ளி, மங்கலம்.
95. ,, இளந்தையாடிவிளை
96. செயிண்ட் எப்னெம்ஸ் எம். எஸ். சி. உயர்நிலைப் பள்ளி, சூர்யகாடு.
97. அரசினர் உயர்நிலைப் பள்ளி, குமாரபுரம் தோப்பூர்.
98. எல். எம். எஸ். உயர்நிலை பள்ளி, தெற்கு தாமரைக்குளம்.
99. கன்கார்டியா உயர்நிலைப் பள்ளி, நாகர்கோவில்.
100. செயிண்ட் பிரான்சிஸ் உயர்நிலைப் பள்ளி, வெங்காடு.
101. ஆர். டி. எம். எல். எஸ். உயர்நிலைப் பள்ளி, வெங்காஞ்சி.
102. ஹோலி பேமிலி உயர்நிலைப் பள்ளி, அணைகரை.
103. அரசினர் உயர்நிலைப் பள்ளி, தேங்காய்பட்டிணம்.
104. ,, புலியூர் சாலை.
105. ,, வில்லன் குமாரவிளை.
106. உதவிபெறும் மகளிர் உயர்நிலைப் பள்ளி, குன்னமகள்.
107. அரசினர் உயர்நிலைப் பள்ளி, வடசேரி, நாகர்கோவில்.
108. ,, எத்தமொழி.
109. ,, சின்னப்பம்பட்டி.
110. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, தம்மம்பட்டி.
111. வால்பாறை உயர்நிலைப் பள்ளி.
112. காந்திஜி அரசினர் உயர்நிலைப் பள்ளி, சொக்கன்பாளையம்
113. பாலி உயர்நிலைப் பள்ளி.
114. கதிர் மில்ஸ் உயர்நிலைப் பள்ளி, ஒட்டர்பாளையம்.
115. எம். என். முருகப்ப செட்டியார் மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருப்பூர்.
116. ஸ்ரீ சாந்தி விஜய் இந்து மகளிர் உயர்நிலைப் பள்ளி, உதகமண்டலம்.
117. அரசினர் உயர்நிலைப் பள்ளி, அம்பலமூலா.
118. அரசினர் உயர்நிலைப் பள்ளி, யேடப்பள்ளி.
119. ,, இதலார்.
120. நகராட்சி உயர்நிலைப் பள்ளி, கோதப்பமண்ட்.
121. செயிண்ட் ஆன்'ஸ் மகளிர் உயர்நிலைப் பள்ளி, வெல்லிங்டன்.
122. அரசினர் உயர்நிலைப் பள்ளி, அவள்பூந்துரை.

123. அரசினர் உயர்நிலைப் பள்ளி, குருமந்தூர்.

124. சி. எஸ். ஐ. மகளிர் உயர்நிலைப் பள்ளி, தாராபுரம்.

125. புஞ்சை புளியம்பட்டி மகளிர் உயர்நிலைப் பள்ளி.

126. ஸ்டேன்ஸ் ஆங்கிலோ இந்தியன் பள்ளி, குன்னூர்.

## இணைப்பு III

(124 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 143 தனியார் ரப்பர் தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 2,500 தொழிலாளர்கள் 17—10—1983 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

24—10—1979 ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கும் அவர்களின் தொழிலாளர்களுக்குமிடையே ஊதியம், அகவிலைப்படி முதலானவை பற்றி தொழிற் தகராறுச் சட்டம் பிரிவு 12 (3)ன் கீழ் செய்து கொண்ட ஒப்பந்தம் 30—11—1981 உடன் முடிவடைந்தது. இவ்வொப்பந்த காலம் முடிந்துவிட்டது என்ற காரணத்தால், தோட்ட உரிமையாளர்கள் அவ்வொப்பந்த ஷரத்துப்படி, நாகர்கோவில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியைக் கணக்கில் கொண்டு அதற்கீடாக, நான்கு மாதங்களுக்கு ஒரு முறை உயர்த்தி அளிக்க வேண்டிய அகவிலைப்படியை 1—4—1982 முதல் தராமல் நிறுத்தி விட்டனர். நாகர்கோவில் வாழ்க்கை செலவுப் புள்ளியின் அடிப்படையில் தொடர்ந்து அகவிலைப்படி அளித்தால் தாங்கள் தொழில் நடத்த முடியாது என்பது அவர்கள் வாதம்.

இத்தொழிற் தகராறின் விளைவாக 8—12—1982 முதல் மாறுபடும் அகவிலைப்படி மற்றும் இதர கோரிக்கைகளை முன் வைத்து வேலை நிறுத்தம் செய்ததால் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் தலையிட்டு இருதரப்பாருக்குமிடையே ஒரு இடைக்கால ஒப்பந்தத்தை 11—12—1982 ல் ஏற்படுத்தித்தந்தார். அதன்படி தொழிலாளர்களுக்கு 1—12—1981 முதல் 50 காசுகளும் 1—4—1982 முதல் ரூபாய் ஒன்றும், அதாவது அதிகப்படியாக 50 காசுகளும் கிடைக்கலாயிற்று. வேலை நிறுத்தமும் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இறுதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் முயற்சில் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் தொடர்ந்து ஈடுபட்டார். புதிய ஒப்பந்தம் ஏற்படும் வரை பழைய ஒப்பந்தத்தின்படி நாகர்கோவில் வாழ்க்கைச் செலவுப்



புள்ளியின் அடிப்படையில் அகவிலைப்படி அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையில் தொழிலாளர்கள் உறுதியாக நின்றனர். இதற்கு மாறாக தோட்ட உரிமையாளர்களும் இக்கோரிக்கைக்கு இணங்க உறுதியாக மறுத்துவிட்டனர்.

இச்சூழ்நிலையில் பேச்சு வார்த்தைகள் இணையாணையரின் முன்பு நடைபெற்றன. நிர்வாகப் பிரதிநிதிகள் தங்கள் நிலையை விட்டுக் கொடுக்க இசையவில்லை. இருதரப்பாரும் இவ்விதமாகத் தங்கள் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்காததால், இணை ஆணையர் தமது சமரச முறிவறிக்கையை 9—2—1984-லும் இறுதி அறிக்கையை 13—2—1984-லும் அரசுக்கு அனுப்பினார்.

தொழிலாளர் துறை ஆணையரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளை அரசு நன்கு பரிசீலித்து 24—2—1984 நாளைய அரசு தொழிலாளர் துறை நிலையாணை எண் 456-ல் கீழ்க்கண்ட கோரிக்கைகள் சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் முடிவிற்கு விடப்பட்டுள்ளன:

(1) 24—10—1979 நாளது உடன்படிக்கையின்படி அகவிலைப்படி வழங்குதல்.

(2) நாகர்கோவில் வாழ்க்கை செலவுப் புள்ளி—2,000 புள்ளிகளை இணைத்து மாத சம்பளம் ரூபாய் 500 லிருந்து ரூபாய் 600 வரை வழங்குதல்.

(3) அளவீட்டு அடிப்படை வீதத்தில் பால் வெட்டும் தொழிலாளர்களுக்கு மாத வருமானம் ரூபாய் 500-ம், அதிகப்படியான பால் வெட்டுபவர்களுக்கு கிலோவிற்கு ரூபாய் 2 அதிகமாகவும் வழங்குதல்.

(4) ஸ்கிராப் ரப்பர்—ஒரு கிலோவிற்கு ரூபாய் 1 வழங்குதல்.

(5) தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும், அளவீட்டு அடிப்படை வீத தொழிலாளர்களுக்கும் ஊதியத்தில் ரூபாய் 100 வேறுபாடு இருக்க வேண்டும்.

(6) நாகர்கோயில் வாழ்க்கை செலவுப் புள்ளி 2,000-க்கு மேல் ஒவ்வொரு புள்ளிக்கும் 1 காசு அகவிலைப்படி வழங்குதல்.

(7) மழை நாட்களுக்கு சம்பளம்.

(8) வீட்டு வாடகைப்படி மாதத்திற்கு ரூபாய் 20; மற்றும்.

(9) நிர்வாகக் கோரிக்கை வேலைப்பளுவை நிர்ணயித்தல்.

கன்னியாகுமரி தனியார் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த நான்கு மாதங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததாலும், கோடிக் கணக்கான ரூபாய் பெறுமான உற்பத்தியில் பலத்த இழப்பும், ஊதிய இழப்பும் ஏற்பட்டதாலும், இரப்பர் பொருட்கள் சமுதாயத்திற்கு இன்றியமையாதது என்பதையும் சுமார் 2,500 தொழிலாளர்களின் நிலைமைகளையும் கருத்திற் கொண்டு, ரப்பர் தோட்டங்களில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைதியை நிலை நிறுத்திடும் எண்ணத்துடன் சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு தெரியும் வரை, தொழிலாளர்-நிர்வாகத்தார் ஆகிய இரு தரப்பாரும் ஏற்பதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகளை வரையறுத்து 1947 ஆம் வருட தொழிற் தகராறு சட்டம் பிரிவு 10-பின்கீழ் 24—2—1984 ஆம் நாளைய அரசு தொழிலாளர் துறை நிலையாணை எண் 458-ல் பின்வருமாறு ஆணை பிறப்பிக்கப் பட்டது:

(1) 24—10—1979 ஆம் நாளைய ஒப்பந்தத்தின் பகுதி 1 (f) ன் படியும், கன்னியாகுமரி மாவட்ட தனியார் ரப்பர் தோட்டங்களில் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் வழக்கத்தின்படியும், நிர்வாகத்தினர் 1—4—1982 முதல் வழங்கப்படாத உயர் அகவிலைப்படியினை 1—4—1982 முதல் வழங்கிட வேண்டும்.

(2) 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஏற்பட்ட 11—12—1982 ஆம் நாளைய ஒப்பந்தத்தின் பகுதி 1 (a) ல் குறிப்பிட்டவாறும், கன்னியாகுமரி மாவட்ட தனியார் ரப்பர் தோட்டங்களில் தற்பொழுது நடைமுறையிலிருக்கும் வழக்கத்தின்படியும், நிர்வாகத்தினர் தற்காலிகமாக அளித்த பணத்தை தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

(3) இருதரப்பினரும் அரசாணை வரப் பெற்ற 15 நாட்களுக்குள், மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை அமுல்படுத்துவதால் எழுகின்ற நிலுவைத் தொகை தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

(4) இந்த ஆணையைத் தொடர்ந்து, நிர்வாகத்தினரால் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிற தொகையை, தொழில் தீர்ப்பாயத்தின் நடுநிலைத் தீர்ப்பின்படி தொழிலாளர்களுக்கு வழங்கவிருக்கிற தொகையிலிருந்து சரிகட்டலாம்.

27—2—1984 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைப் பின்வாங்கிக் கொண்டு வேலைக்கு திரும்பினர். வேலை துவங்குவதற்கு சில முன்னேற்பாடுகள் செய்யும் பொருட்டு, நிர்வாகத்தினர் 1—3—1984 முதல் தொழிலாளர்களை வேலைக்கு வருமாறு கேட்டுக் கொண்டனர். அதன்படி தொழிலாளர்கள் 1—3—1984 முதல் வேலைக்குத் திரும்பினர்.



## இணைப்பு VI

123 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 2 OF 1984.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Cinemas (Regulation) Amendment Act, 1984.

(2) It shall be deemed to have come into force on the 6th January 1984.

2. *Amendment of section 6, Tamil Nadu Act IX of 1955.*—Section 6 of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955) shall be re-numbered as sub-section (1) of that section and,—

(i) in sub-section (1) as so re-numbered, in the proviso, for the words "under this section", the words "under this sub-section" shall be substituted; and

(ii) after sub-section (1) as so re-numbered, the following sub-section shall be added, namely :—

"(2) The Government may, in the interest of the general public in the State of Tamil Nadu who speak mainly Tamil which is the official language of the State, issue directions, from time to time, to any class of licensee or to licensees generally to exhibit Tamil films for a period of not more than nine months in a year; and where any such directions have been issued, such directions shall be deemed to be additional conditions and restrictions subject to which the licence has been granted.".

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Cinemas (Regulation) Amendment Ordinance, 1984 (Tamil Nadu Ordinance I of 1984) is hereby repealed.

(2) Notwithstanding such repeal anything done or any action taken under the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955) as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the said Act, as amended by this Act.

இணைப்பு V

150ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 13 OF 1984
(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Act, 1976.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Act, 1984.

(2) It shall be deemed to have come into force on the 8th December 1983.

2. *Amendment of section 4, President's Act 25 of 1976.*—In the Tamil Nadu Co-operative Socieities (Appointment of Special Officers) Act, 1976 (President's Act 25 of 1976) (hereinafter referred to as the principal Act) in section 4, in sub-section (1), for the words "seven years and six months", the words "eight years and three months" shall be substituted.

3. *Repeal and saving.*—*(1)* The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1983 (Tamil Nadu Ordinance 15 of 1983) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the Said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act as amended by this Act.



இணைப்பு VI

(163 ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 4 OF 1984
(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act,* 1979.

*Be* it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—*(1)* This Act may be called the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Amendment Act, 1984.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 4, Tamil Nadu Act* 60 *of* 1979.—In clause *(a)* of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979 (Tamil Nadu Act 60 of 1979),—

(i) for the expression "four years and six months", the expression "four years and nine months" shall be substituted:

(ii) after the proviso, the following proviso shall be inserted, namely :—

"Provided further that the State Goverment may, by notification, for sufficient cause direct that the term of office of the Special Officers of all or any of the Panchayats be reduced by such period not exceeding two months as may be specified in such notification.

இணைப்பு VII

[84 ஆம் பக்கத்தில் இனம் 4 (6)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 5 OF 1984
(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977.*

*Be* it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Act, 1984.

(2) It shall come into force.

2. *Amendment of section* 4, *President's Act* 5 *of* 1977.—In clause *(a)* of sub-section (8) of of section 4 of the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977 (President's Act 5 of 1977),—

(i) for the expression "seven years and two months", the expression "seven years and five months" shall be substituted;

(ii) after the proviso, the following proviso shall be inserted, namely :—

"Provided further that the State Government may, by notification, for sufficient casue, direct that the term of office of this Special Officers of all or any of the Panchayat union councils be reduced by such period not exceeding two months as may be specified in such notification."



இணைப்பு VI

(193 ஆம் பக்கத்தில் இனம் 4 (7)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 6 OF 1984
(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats Act,* 1958.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fifth year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Amendment) Act, 1984.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 155, *Tamil Nadu Act XXXV of* 1958.—In section 155 of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958), in sub-section (1), in clause *(b)* in the proviso for the expression "six years and eight months", the expression "six years and eleven months" shall be substituted.

இணைப்பு XI

(194 ஆம் பக்கத்தில் இனம் 4 (7)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 7 OF 1984.
(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act,* 1976.

*Be* it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title and comencement.*—(1) This Act may be called the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Act, 1984

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 4, *President's Act* 28 *of* 1976.—In clause *(a)* of sub-section (3) of section 4 of the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act, 1976 (President's Act 28 of 1976),—

(i) for the words "for a period of seven years and nine months", the words "for a period of eight years", shall be substituted;

(ii) in the first proviso, for the words "the said period of seven years and nine months", the words "said period of eight years" shall be substituted;

(iii) in the second proviso, for the words "six months", the words "two months" shall be substituted.

143891
சென்னை-600 008.

D
V211,32'N84
N84.205.1-2